587

587

# சக்தி

மாத வெளியீடு

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
8 NOV 19
MAD

299



# EVERY PRINTING ORDER

UNCOVERS a great deal of detail work. Whether this detail work becomes an irksome burden to yourself or is assumed by your printer depends largely on your choice of printing organization.

Here we assure the complete responsibility for our customer's printing. The detail of proof-reading is taken over by our own organization. The paper, color, typography, margins, and all the other numerous features of your printing that sometimes please or vex you — they are part of OUR job. When your order is placed with us you don't have to do a part of the work yourself.

## SHAKTI PRESS LIMITED

# ஹிந்துஸ்தானில் — இன்ஷ்யூர் செய்யுங்கள் பிரதிநிதிகளா யிருங்கள்

இக்கம்பெனிக்குச் சமமான அனுபவம் வாய்ந்த
ஆபீஸுகளுக்குள் மிகப் பிரதானமான லைப் ஆபீஸ்

●

## அபிவிருத்தியின் புள்ளி விவரங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| புதிய வியாபாரம் (1938—39) | 3 | கோடி | 14 | லக்ஷத்திற்கு மேல் |
| அமுலில் இருக்கும் பாலிஸிகள் | 16 | ,, | 34 | ,, |
| ஆயுள் நிதி | 2 | ,, | 96 | ,, |
| மொத்த ஆஸ்தி | 3 | ,, | 36 | ,, |

## ஹிந்துஸ்தான் கோவாப்பரேடிவ்
### இன்ஷூரன்ஸ் ஸொஸைடி லிமிடெட்

ஹெட் ஆபீஸ் :
"ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்"
சுரேந்திரனத் பானர்ஜி ரோட், கல்கத்தா.

மதராஸ் பிராஞ்சு :
"ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்"
170, அரண்மனைக்காரத் தெரு, மதராஸ்



# ஸண்டே டைம்ஸ் பிராஸஸ் ஸ்டூடியோ

●

லைன் பிளாக்குகள்
ஆப்டோன் பிளாக்குகள்
நவீன முறைகளில்
செய்து தரப்படும்

வியாபாரிகளுக்கு சகாய
மாகவும் துரிதமாகவும்
சேவைகள் செய்யும்.

●

விவரங்களுக்கு :

மானேஜர், "**ஸண்டே டைம்ஸ்**" சென்னை.

போன் : 2678.

அன்பும், அறிவும், அறமும், திருவும், ஆற்றலும், இன்ப வாழ்வும், விளங்கச் 'சக்தி' வெளிவருகிறுள் !

கல்வி, கலை, தொழில், வாணிபம், சுதந்திரம், சன்மார்க்கம்

**இவைகளில் எது உங்களுக்கு விருப்பமானது ?**

**எதுவானுலும் அறிஞர் பலரால் எழுதப்பெற்று எவ்வித நோக்க முடையவரும் படித்து ஆதரித்து வரும்**

**'சக்தி'யைப் படியுங்கள்**

தனிப்பிரதி (உள்நாடு) ரூ. 0—4—0
வருட சந்தா (உள்நாடு) ரூ. 3—8—0

மாதிரிப் பிரதி வேண்டுவோர் ஐந்தணு தபாற்றலையனுப்ப வேண்டும்.

'சக்தி' காரியாலயம்
52, அரமனைக்காரத் தெரு,
சென்னை.

ஒவ்வொரு வாரமும் 24 பக்கங்களுடன் உங்களைத் தேடிவரும் ஜோதியைப் பாருங்கள்! படியுங்கள் !

**"ஜோதி"** சிறந்த தமிழ் வாரப்பத்திரிகை

வருடச் சந்தா

| | |
|---|---|
| உள் நாடு & சிலோன் | ரூ. 2-8-0 |
| 6 மாதங்களுக்கு | ரூ. 1-6-0 |
| வெளி நாடு 1-ஆு | ரூ. 5-0-0 |
| 6 மாதங்களுக்கு | ரூ. 2-12-0 |

தனிப்பிரதி விலை அரையணு

"ஜோதி" காரியாலயம் 16, சுங்குராம செட்டி தெரு, ஜார்ஜ்டவுன், சென்னை.

# சக்தி

அன்பும் அறிவும் அறமும் திருவும் அருளும் ஆற்றலும்
இன்ப வாழ்வும் விளங்கச் சக்தி எழுந்து பொலிகவே!

மலர் உ : இதழ்-க பிரமாதி - தை


OFFICE OF THE RE... 8 NO... MADI...

## கும்மிப் பொங்கல்

[சுவாமி சுத்தானந்த பாரதியார்]

பொங்குது தைவளம், பொங்குது பால்வளம்
பொங்குது தேன்வளம் பூமியெல்லாம்
மங்கள சக்தி மஹேஸ்வரி யைப்போற்றி
மகிழ்ந்து கும்மி யடித்திடுவோம். (பொங்குது)

சோலைக் குயில்நம்மைக் கூவுதம்மா கன்று
துள்ளித் துள்ளிவிளை யாடுதம்மா!
காலை மணக்காற்று தாவுதம்மா அன்னம்
கமலப் பொய்கையில் மேவுதம்மா! (பொங்குது)

எங்கும் பசுமையும் பொன்னும் குலுங்கிடும்
இயற்கை யின்பத்தைப் பாருமம்மா!
அங்கிசை பாடிடும் அருவி வெள்ளத்தில்
ஆனந்த நீராட வாருமம்மா! (பொங்குது)

எட்டெட்டுத் திக்கிலும் எல்லா வுயிரிலும்
ஏகமாய்த் தம்முயிர் காணுவமே
கட்டின்றிக் காவல்கள் யாவையு மின்றிநாம்
காட்டுக் கிளிவாழ்வைப் பூணுவமே! (பொங்குது)

சாதி மதபேதச் சண்டைகள் யாவையும்
சத்தியத் திற்குவி ரோதமம்மா
சோதி சமரச சன்மார்க்க வீதியிற்
சுத்த சுதந்தரம் காணுமம்மா! (பொங்குது)

சாட்சியாய் நின்றிச் சகத்தை நடத்திடும்
சந்திர சூரியர் தங்நிலைபோல்
சாட்சியாய்க் கண்டு கலங்கா மனங்கொண்டு
களித்து வாழுவோம் தோழிகளா! (பொங்குது)

அன்னைதன் பிள்ளையைக் கொஞ்சுகின் றாள் அதே
அன்பை வளருங்கள் நெஞ்சினிலே
தன்னை வழங்கிடுந் தண்முகில் போலெல்லாம்
தந்து நலஞ்செய்ய முந்துவமே. (பொங்குது)

சொல்லும் செயலும் பொருந்திநிற் போம்அந்தச்
சூரியச் சோதியும் வெப்பமும்போல்
அல்லும் பகலும் பராசக்தி யன்னையின்
அருளிற் கூடிக்கு ழைந்துநிற்போம். (பொங்குது)

அருட்சுடர்கள்

# இராமோபதேசம்

(திருஞானம்)

71. காலம் மதிக்கும் பிரசங்கிகளெல்லாம் வரட்டும். கிறிஸ்துவே, கடவுளே வரட்டும், சொற்பொழியட்டும். ஆனால் பிறர் சொற்பொழிவாற் பயனேதுமில்லை. நீயே உனக்குச் சொற்பொழியவேண்டும்.

72. தீவிரமான கர்மத்தால் சுயநலத்தையும், சிறுமதி யகந்தையையும் வென்றோங்கும்படி வேதாந்தம் உபதேசிக்கிறது.

73. தொழிலுக்காகவே தொழில் செய்ய வேதாந்தம் வேண்டுகிறது.

74. ஆன்ம ஒருமைப்பாடு, உலக ஒருமைப்பாடு. இதுவே தொழில் என்பதற்கு வேதாந்தம் கொள்ளும் பொருள்.

75. வேதாந்தத்தின்படி தொழிலின் தீவிரமே இளைப்பாற்றியாம். உண்மைத் தொழிலெல்லாம் இளைப்பாற்றியேயாம்.

76. மனத்தை அன்பிலும் அமைதியிலும், உடலைத் தீவிர முயற்சியிலும் ஈடுபடுத்துவதே இகவாழ்வில் பாபத்தினின்றும், துக்கத்தினின்றும் விடுபடும் வழியாம்.

77. அந்தராத்மா அமைதி சேர்க. உடல் விடாது தொழில் புரிக. சலனவிதிகளுக்குட்பட்ட உடல் வேலை செய்க. அசலமான அந்தராத்மா எப்போதும் அலுங்காதுறைக.

78 உன் பணி எனதுயானென்னும் உணர்வில்லாது நடக்கட்டும்; சுயநலவகந்தையின் மாசில்லாதிருக்கட்டும். உன்வேலை நட்சத்திரங்களின், சூரியனின் தொழில்போலிருக்கட்டும். அப்போதே என்காரியம் வெற்றிபெறும்.

79. உடலும் மனமும் தொழிற்சுமையே தோன்றாத அளவு எப்போதும் சுறுசுறுப்பாயிருக்கட்டும்.

80. உனது சிற்றகங்காரத்தை ஒழி. அதை மறந்து வினை செய். வெற்றி புனதே. சந்தேகமில்லை. வெற்றி பெறவேண்டுமானால், நீ வெற்றியின்பால் ஆசைவையாதே.

81. கலங்காத சாட்சிபோலத் தொழில்செய், கட்டின்றிச் சுதந்தரனாயிரு.

82. எங்கிருந்தாலும், ஈவோன் போலத் தொழில்செய்....இரப்போன் போலன்று. அப்போதே உன் தொழில் உலகளாவியதாகவும் சிறிதும் சுயநலமற்றதாகவும் இருக்கும்.

83. இடைவிடாவேலை, சதா வேலை—இதுவே உலகிற்கு யோகமாகும். உனக்கு நீ கர்மியாகாதபோதே உலகிற்கு மகத்தான கர்மம் செய்தவனாகிறாய்.

84. வெற்றி பெறவேண்டுமானால், வளம் பெறவேண்டுமானால், உனது செய்கைகளால், தினசரி ஜீவனால், உனது உடலையும், தசைகளையும் வளைத்து வேலைசெய்.

85. வேதாந்தம் ஆத்மாராமத்தை வேண்டுகிறது.

86. இன்பத் தொழிலாளியே! வெற்றியைத் தேடாதே....வெற்றி உன்னைத் தேடும்.

87. நமது சுயநலத் துறுதுறுப்பே காரியத்தைக் கெடுப்பது.

88. நீ தகுதியுள்ளவனாயிரு......ஆசைப்பட வேண்டாம். விரும்பும்பொருள்கள் உன்னை வந்து சேரும், தாமே உன்னிடம் வரும். தகுதியுள்ளவனாயிரு....உதவி கிடைக்கும்.

89. அவாவைக் கடந்திரு. அக்கணமே விரும்பிய தெய்தும். அவாவி, தேடி, இரந்து, கெஞ்சி நிற்பாயானால் உன்விருப்பம் நிறைவேறாது, உன்னை மாந்தர் நிராகரிப்பர். விஷயாதீதனாயிரு. விரும்பியபொருள் உன்னைத் தேடி வரும். அதுவே விதி.

90. உன்னுள் உள்ள விண்ணை அடை. எல்லா ஆசைகளும் தீரும்....துயர்கள், இடர்கள் எல்லாம் ஒழியும்.

91. பேச்சைவிடச் செய்கையே பலமாகப் பேசும்.

92, காரியத்தைக் காரியத்திற்காகவே செய்.

93. ஆசையை விடு. அவாவைத் தாண்டியிரு. இரட்டை லாபம் கிடைக்கும்—அக்கணமே, அமைதி, இஷ்ட பூர்த்தி. அனைத்தையும் தாண்டி பரமசத்தியத்திற்கு உயர். அப்போதே உன் இஷ்டபூர்த்தியாகும் எனக் கருது. நீயான தெய்வத்தன்மையை அறிந்தோ, அறியாமலோ நீ காதலிக்கும்போதே உன் இஷ்டபூர்த்தியாகும் காலம் கனியும்.

# தொழில்! தொழில்! தொழில்!

"என்ன....ஏலமா? ஏனிந்தக் கூச்சல்" என்று சமுதாயனார் எழுந்தார். "மகனே தொழிலென்னும் பாட்டால் உன்னை எழுப்பினேன். விழித்து நில்" என்று கண்ணைத் துடைத்தாள் சக்தி. "தொழிலா ஹா உ ஊ ஊ உ" என்று மறுபடியும் நீர்ப்பாம்பு மாதிரி நெளித்துச் சோம்பல் முறித்து, நின்ற வாக்கிலேயே கும்பகர்ண உபாசனை செய்யத் தொடங்கினார் சமுதாயனார். "அட சை, நிமிர்ந்து நில்!" என்று வெகு பாடுபட்டு ஆளைச் சரியாக நிமிர்த்தினாள் சக்தி.

அப்போது சமுதாயனாருக்குத் தபால்கள் வந்தன. காலையில் முதல்வேலை அவருக்கு என்ன தெரியுமா? செய்தித்தாட்களைப் பார்ப்பதுதான். "காப்பி பலகாரம்" என்று காதில் விழுந்தாலே தான் அவர் பல்விளக்கப் போவார். "**பொது ஜனம்**" என்ற பத்திரிகையைப் பார்த்தார். கண்ணராவியாயிருந்தது. "ஐயோ முன்னே வழுவழுப்பான காயிதத்தில் இருபது பக்கம் வந்து கொண்டிருந்தாயே. இப்போது இப்படி வறண்டு பாதியாய் மெலிந்துபோனாயே" என்று அதைத் துக்கம் விசாரித்தார். "சிவாஜி" என்னும் மற்றொரு பத்திரிகையில் 'காயித விலை அதிகமானதால் **போர்** முடியுமட்டும் சிவாஜி வெளிவரமாட்டார்' என்று அச்சிட்டிருந்தது. "சட், போருக்குப் பயந்து மறையும் சிவாஜியா? சரி உனக்கொரு முழுக்கு". அதை மடித்து எறிந்தார்.

கடிதங்களைப் பிரித்தார். திருவாளர் சமுதாயனார் மேனாட்டிலிருந்துவரும் நாகரிகப் பொருள்களிலேயே மனத்தைப் பறிகொடுத்தவர்; யந்திரத்தொழிலில் ஈடுபட்டவர். கடிதங்களைப் பார்க்கப் பார்க்க அவர் முகம் மூன்றும் பேஸ்து வைத்தது போலானது. ஏன்? "சண்டை, காகிதம் இல்லை. சண்டை மும்முரம்! எங்கே பார்த்தாலும் காந்த வெடிகள் போட்டு வைத்திருக்கிறார்கள் புண்ணியவான்கள். கப்பல் கப்பலாகப் பாதாளலோகம் போகின்றன. ஒலிப் படச்சுருள் அனுப்பமுடியாது; தங்கள் உத்தரவுக்கு வந்தனம். ஆனால் தாங்கள் கேட்ட யந்திரம் இங்கே கிடைக்காது, இப்போது எல்லாத் தொழிற்சாலைகளும் குண்டு, பீரங்கிகள், டார்பிடோக்கள், ஆகாயக் கப்பல்கள், ஆகாயக் குடைகள் இன்னும் நரமேதயாகத்திற்கு வேண்டிய புண்ணியக்கருவிகளைச் செய்து கொண்டிருக்கின்றன". 'ஐயா வந்தனம் உங்களுக்காகச் சில இருப்புச் சாமான்கள் பத்திரமாகக் கட்டி வைத்திருக்கிறோம். ஆனால் இப்போது பால்டிக் கடலில் போடுவதும், அனுப்புவதும் ஒன்றுதான். ஏன்? பெரிய பெரிய கப்பல்களெல்லாம் ஆட்களை நரகலோகத்திற்குக் கொண்டு செல்லுகின்றன'. "ஆகாயக்கப்பலில் உங்களுக்கு வேண்டிய சாமான்களை அனுப்ப இயலாது. இருக்கும் ஆகாயக்கப்பல்கள் போதாவென்று அமெரிக்காவிலிருந்தும் பிறநாடுகளிலிருந்தும் புதிதாக வாங்குகிறார்கள்". "இங்கே நாங்கள் ஒரு பெரிய காரியத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம். உலக சமாதானத்திற்காகச் சரமாரியான குண்டுகளைப் போட்டுக் கொண்டிருக்கிறோம். உலகில் அறமும், அன்பும் நிலைக்கவேண்டுமென்றே நாள் ஒன்றுக்கு இரண்டு கப்பலையும், ஆயிரக்கணக்கான மாந்தரையும் பலிகொடுத்து, யுத்த தேவதைக்குத் தூபங் காட்டுகிறோம்." என்று இந்தமாதிரி கடிதங்களைப் பார்த்ததும் சமுதாயனார் முகம் சுளித்தார். "இதென்னடா இழவு! எங்கேயோ போர் நடக்கிறதென்றால் நமது தொழிலில் மண் விழுகிறது. இருந்தாலும் இந்த இந்தியருக்கு இப்படிச் சோம்பல் உதவாது. ஏதோ காங்கிரஸ், காங்கிரஸ் என்று பேசிக் கொள்ளுகிறார்கள். சும்மா மேடைமேலே ஏறிக் கட்சிக்கூப்பாடு போடுகிறார்கள். ஒருவருக்கொருவர் வார்த்தை பரிமாறிக்கொள்வதா காங்கிரஸ்! இல்லாவிட்டால் பத்திரிகையை நிரப்புகிறார்கள். காகிதப் பஞ்சமானாலும் எழுத்துப் பஞ்சம் இல்லை. பக்கம் பக்கமாக விளாசித் தள்ளுகிறார்கள். நாலு பத்திரிகைக்குக் காணும்படியாகக்கூடக் காகிதம் உண்டாக்க முடியவில்லை.

வெள்ளைக்காரன் ஒரு ரூபாய் இரும்பை ஐம்பது ரூபாய் யந்திரமாக்கி நமது தலையில் வைத்துக் கட்டுகிறான். நாமும் "அடே என்ன அதிசயமடா, அதிசயமடா!" என்று வாங்கிப் பெரிய முதலாளிக் கனவு காண்கிறோம். படக்கென்று ஒரு வில்லை முறிகிறது, சக்கரம் உடைகிறது. அதற்கு ஏதோ உளைமாந்தம் வந்து விடுகிறது. உடனே வெள்ளைக்காரனைத்தான் வெற்றிலை பாக்குவைத்து அழைக்கவேண்டியிருக்கிறது. "தங்கள் யந்திரத்தில் உடைந்த பாகம் இப்போது வராது" என்றால் அரோஹரா! தொழிற்

சாலை அத்துடன் சரி. அங்கே பஜனை பண்ண வேண்டியது தான்! இந்த நிலைமை கூடாது. தொழில் வளர்க்கவேண்டுமென்று சமுதாயனர் உறுமினர்.

"அதைச் சொல்லத்தானப்பா வந்தேன். நீ தூங்கிவிழுந்தாய். இனியாவது எழுந்திரு!" என்று சக்தி புத்தி சொன்னாள். ஐரோப்பாவில் போர் முழக்கம்; சாமான்கள் இங்கே சரியாய் வருவதில்லை. இச்சமயம் நம்மவர் தொழில் முயற்சிகளை விரைவாகவும் தீவிரமாகவும் செய்ய வேண்டும்.

மகனே பார்! இங்கிலாந்து, ஜெர்மனி, இத்தாலி, ரஷ்ஷியா, அமெரிக்கா, ஜப்பான் முதலிய தேசங்களெல்லாம் கல்வி தொழில் இரண்டால் உலகை ஆளுகின்றன. அங்கே நூற்றுக்குத் தொண்ணூறுபேர் கற்றவர். அங்கே சோம்பேறிக்குச் சோறு கிடைக்காது. நம்மில் ஐந்தாட்கள் செய்யும் வேலையை அங்கே ஒருவன் செய்கிறான். அங்கே ஏராளமான தொழில்களால் எல்லாருக்கும் நிரம்ப வேலை கிடைக்கிறது. இங்கே வேலையில்லை, கூலியில்லை, சோறில்லை, உடம்புக்குச் சுகமில்லை என்ற இல்லைப்பாட்டே அதிகமா யிருக்கிறது. அங்கே மனித மூளை ஆகாயத்தில் தாவுகிறது. இங்கே இப்படி முகத்தை மூடித் தூங்குகிறது. மகனே! இது தொழில் உலகம். நாம் காலத்திற்கேற்ற தொழில்களைச் செய்யாமல் இப்படிச் சும்மா தொண தொணவென்று கதைபேசித் திரிகிறோம். இங்கே யிருக்கும் பஞ்ச பூதங்கள் தாமே வெள்ளைக்காரர் நாட்டிலும் உள்ளது? அவர்கள் ஆகாசத்தில் சுழலும் மின்னணுக்களை இயக்கி ஒலி பரப்புகின்றனர்; ஒலிப்படம் காட்டுகின்றனர்; மின்சார அற்புதங்களைச் செய்கின்றனர். நாம் "வெள்ளைக்காரன் வேலையே வேலை" என்று கைகட்டி வியக்கிறோம். நாமும் ஏன் அப்படிச் செய்யலாகாது? மூளை ஒன்று தானே? முயற்சி வேண்டும். நமக்கு அடுத்துள்ள ஜப்பான் தேசம் என்னென்ன வெல்லாமோ செய்கிறதே. அதைப் பார்த்தாவது நமக்கு ரோஷம் வரவேண்டாமா? இதோபார்! நார்வேக் காகிதம் வரவில்லை. பத்திரிகை நிலயங்களெல்லாம் பனிக்கரடி மாதிரி தூங்குகின்றன. புத்தகங்களெல்லாம் மறுபடியும் குஜிலிக்கடைச் சரக்குடன் போட்டி போடுகின்றன. அச்சுக்கு மையா, ரோலரா, வேறு தளவாடங்களோ எல்லாம் மேற்கிருந்து வரவேண்டும். வார்தாக் காயிதம் செய்கின்றனர். யந்திரக் காயிதங்களும் இங்கே உண்டு. ஆனால் யானைக்கு ஒரு பிடி புல்லைப்போட்டால் போதுமா? அச்சுத் தொழில் பட்டினி கிடக்கிறது. மோட்டார், மின்சாரவண்டி, ஒலிக்கருவி, பஞ்சாலை, நூலாலை, துணி ஆலை, சாயச்சாலை எல்லாம் இங்கே உண்டு. எல்லாம் வெள்ளைக்காரன் புண்ணியத்திலே தான் நடக்கின்றன. அவன் கையை விரித்தால் கோவிந்தாதான்; ஒன்றும் நடக்காது. அடுப்புப் பற்றவிடத் தீச்குச்சி வேண்டுமானால், மண்ணெண்ணெய் வேண்டுமானால் அன்னிய நாட்டை எதிர்பார்க்கும் நிலையில் நாம் இருக்கிறோமே! இப்போது எங்கும் மின்சார விளக்குகள் சொலிக்கின்றன. மின்பொறிக்கு ஏதாயினும் கேடுவந்தால் மேற்கேயிருந்துதான் வழி பிறக்க வேண்டியிருக்கிறது. இப்படி ஏமாளியாக, பிறர் கைபார்த்துப் பிழைக்கும் நிலைமையில் இருக்கலாமா? இதில் வேடிக்கை என்னவென்றால் கோடிகோடியாகப் பணம் கொட்டி நாம் இந்த மடச் சோம்பேறித்தனத்தை விலைக்கு வாங்கிப் பத்திரமாகப் பூட்டிவைத்துக் கொண்டிருக்கிறோம். தொழில் நடத்துவோர் பிழைப்பின் விசை வெள்ளைக்காரனிடம் உள்ளது.

நமது நாட்டின் கண்ணராவியைப் பார்த்தால் இரத்தக் கண்ணீர் வருகிறது. "உலகம் பொய் தானே; இன்றிருப்பாரை நாளைக்குக் காணோம்" என்று நாம் பிரமாதமாகத் திண்ணை வேதாந்தம் வெளுத்துத் தள்ளுகிறோம். அப்போது ஆகாசத்திலிருந்து யாராவது "டபார்" என்று ஒரு வரப்பிரசாதம் சாதித்தால், "ஐயோ சிவனே!" என்று சாகத்தான் நமக்குத் தெரியும். சோறில்லை, கோடானுகோடிப் பேர் பட்டினி. **தொழிலில்லை,** நமது தொழில் முயற்சிகளெல்லாம் உறங்குகின்றன. பலமில்லை, யாராவது தொப்பிவைத்துக் கொண்டு மிரட்டினால் பிள்ளையாருக்குப் போடும் தோப்புக்கரணத்தை அவனுக்குப் போட்டு விடுவோம். திறன் இல்லை, நாம் உண்ணும் உணவோ மில்லில் அரைத்துச் சக்தி யிழந்த சக்கை. அத்துடன் உப்புப் புளி மிளகாய் போட்டு நாக்கை வளர்க்கிறோம். 'வலது கன்னத்தில் அடித்தால் இடது கன்னத்தையும் காட்ட வேண்டுமென்றாரே' ஏசுநாதர். அந்த நிலைக்குத்தான் வந்திருக்கிறோம். மிருகபலம் நம்மைக் கூண்டில் அடைத்து வைத்திருக்கிறது. விடுதலை என்றால் எதிரே பதின்மூன்று அங்குலம் பீரங்கியைக் காண்கிறோம். ஐயோ, நம்மைப்போல் தாழ்ந்த ஜனங்கள் யார் இருக்கிறார்கள்! அபிசீனியா படையெடுத்தாற்கூட நம்மால் எதிர்க்கமுடியாது. வலைப்புட்களைப் போலிருக்கிறோம். வலையைத்தூக்கிப் பறப்

(கஉ-ம் பக்கம் பார்க்க)

# விதியா? மதியா?

(திரு. வை. கோவிந்தன்)

[அகில இந்திய ரேடியோ நிலயம், சென்னையில் 4-12.1939-ல் பேசியது]

1

உலகம் ஒரு நாடகமேடை போன்றது. அதில் கோடானுகோடி மக்கள் வருகின்றனர். தமது இயற்கைக்கு ஏற்ற வேடத்தை நடிக்கின்றனர். அனைவரும் சாவு என்னும் திரைக்குள் மறைகின்றனர். இந்தப் போக்கு வரவை ஒவ்வொரு நாளும் காண்கிறோம். ஆயிரக்கணக்கான மக்கள் நமக்கு முன்னே மறைந்தனர். அவர்களை உலகம் மறந்து போகிறது. ஆனால் சில பேர்களை அதே உலகம் மறப்பதில்லை. சிவாஜியைப் பெரிய வீரன் என்று உலகம் போற்றுகிறது. கம்பனையும், ஷேக்ஸ்பியரையும் மஹாகவிகள் என்று போற்றுகிறது. எடிசனைப் பெரிய விஞ்ஞானி என்று கொண்டாடுகிறது. இவ்வாறு ஒவ்வொரு நாட்டிலும் சில பெரியார்களின் பெயர் நின்று நிலைக்கின்றன. ஏன்? இப் பெரியார்கள் வாழ்க்கையில் வெற்றி பெற்றவர்கள்; பலருக்கும் உபகாரமாக வாழ்ந்தவர்கள்.

இப் பெரியார்கள் வாழ்க்கையில் எப்படி வெற்றி பெற்றார்கள்? அதிர்ஷ்ட வசத்தாலா, அல்லது, படிப்படியான முயற்சியாலா என்பதே கேள்வி.

சுக்கிர தசை அடித்தது. ஆளுக்குத் தசாநாதன் திரும்பியது. அதிர்ஷ்டம் பிய்த்துக்கொண்டது. கொடுக்கிற தெய்வம் கூரையைப் பொத்துக் கொண்டாவது கொடுக்கும், என்றெல்லாம் நம் நாட்டில் பேசக் கேட்டிருக்கிறோம்.

"அவனன்றி ஓரணுவும் அசையாது. வல்லான் வகுத்ததே வாய்க்கால். விதி விட்டபடி விடட்டும். மனித முயற்சியால் என்ன இருக்கிறது? கடவுளுக்கு அல்லவா கண் வேண்டும்." என்றெல்லாம் வாய் வேதாந்தம் பேசிக் கொண்டு சும்மா யிருப்பவர்களையும் நம் நாட்டில் பார்க்கிறோம். சும்மா யிருப்பதே சுகம் என்பாரும் உண்டு. இவர்கள் வாழ்க்கையில் எவ்விதமான காரியமும் செய்வதில்லை. இன்றிருப்பார் நாளை இல்லை. உலகம் அநித்தியம். வாழ்க்கை மின்னல். வாழ்வாவது மாயம். மண்ணாவது திண்ணம், என்று உலக வெறுப்புக் கொண்டு, சிலர் ஒரு முயற்சியும் இல்லாமல், வாழ்வை வீணாக்குகின்றனர். இவர்களால் தமக்கும் பயனில்லை, பிறருக்கும் பயனில்லை. "ஐயா, எத்தனையோ வீரர் தமது முயற்சியினால், உலகிற்குப் பல தொண்டுகளைச் செய்து தாமும் புகழ் பெற்றனர். தாங்களும் ஏதாவது நல்ல காரியங்களைச் செய்யுங்கள்" என்றால் இவர்கள் உணர்வதில்லை. "அவரவர் பிறந்த ஜாதக வேளை, புகழ் பெற்றனர். இலட்சுமி கடாட்சத்தால் அவன் பணக்காரன் ஆனான்" என்றெல்லாம் குருட்டுச் சாக்குகள் சொல்லிப் பொழுது போக்குவர். உலகில் பெயர் பெற்ற வீரரும், புலவரும், அறிஞரும் கடினமான முயற்சியாலே தான் அவ்வாறு விளங்குகின்றனர். தெய்வத் திருவள்ளுவர் "ஊழிற் பெருவலி யாவுள"? என்றொரு கேள்வி போடுகிறார். பிறகு அவ்வளவு பலமான ஊழையும் தாளா முயற்சியால் வென்று விடலாம் என்று உறுதி கூறுகிறார். முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார் என்பது நம் நாட்டில் தொன்றுதொட்டு வந்த பழமொழி.

2

நாம் இருக்கும் இந்த இருபதாம் நூற்றாண்டு ஒரு அற்புதமான காலம். இக் காலம் மனித முயற்சி அற்புதங்களைச் செய்கிறது. நாற்பது வருடங்களுக்கு முன்னே கனவுபோலத் தோன்றிய வெல்லாம் இன்று நேராக நடக்கின்றன. உதாரணமாக இந்த ரேடியோவைப் பாருங்கள். நான் இங்கே பேசும் ஒலி, இந்தியா முழுதும் பரவுகிறது. ஐயாயிரம் மைல்களுக்கு அப்புறம் உள்ளவர்கள் அடுத்த வீட்டுக்காரர்போல் பேசுகின்றனர். லண்டன்—பாரிஸ் நிகழ்ச்சிகள் அக்கணமே சென்னைக்குத் தெரிகின்றன. மகாபாரதத்தில், கண்ணன் அர்ச்சுனனுக்குக் கீதை உபதேசித்தாராம். அதை சஞ்சயன் கேட்டு திருதராட்டிரனுக்கு அவ்வப்போது சொல்லி வந்தானாம். போர்க்களத்தில் நடந்த உபதேசத்தை வீட்டிலிருந்த சஞ்சயன் எப்படிக் கேட்டான்? என்று சில ஆண்டுகளுக்கு முன்பு வியந்திருப்போம். ஆனால் இன்று இது ஒரு பிரமாதமன்று. பார்லிமெண்டில் சேம்பர்லேன் பிரபு பேசும் பேச்சை அதே சமயம் கேட்கிறோம். இங்கே வைசிராய் பேசும் பேச்சு அதே நேரத்தில் லண்டனை எட்டுகிறது. இவ்வாறு, ரேடியோ இடத்தையும், காலத்தையும் வென்று மனித சமுதாயத்தை ஒன்றாக்கி யுள்ளது. ரேடியோ

உலகஒற்றுமைக்கு ஒரு சாதனமாக விளங்குகிறது. அறிவு வளர்ச்சிக்கு நல்லாசிரியன் போல் உதவுகிறது.

இத்தகைய ரேடியோ அற்புதம் ஆகாயத்திலிருந்து குதிக்கவில்லை. ரேடியோவா? என்ன பிரமாதம்? ஆகாய அணுக்கள் இயங்கித் தானே இது நடக்கிறது. பகவான் இயற்கையை ஏவித் தானே அப்படிச் செய்கிறார். எல்லாம் அவர் வேலை, என்று மனிதன் சும்மா யிருந்தால் செய்தி பறக்குமா? இன்று ரேடியோ பெற்ற வெற்றி எதனால்? மனிதன் ஆராய்ந்து முயற்சி செய்ததால். மாடம் கியூரி என்னும் விஞ்ஞானி, அரிய பெரிய சோதனைகள் செய்து ரேடியம் என்னும் புதிய உலோகத்தைக் கண்டு பிடித்தார்.

ஒலிப் படத்தைப் பாருங்கள். உருவும், குரலும் திரையில் ஆடுகின்றன. நடிகர் எவ்வளவோ பயிற்சி பெற்று மைக்கின் முன் நடிக்கின்றனர். படம் பிடிப்போர் மிகவும் கவனமாக வேலையைச் செய்கின்றனர். பிடித்த படச்சுருளைப் பழுதுபார்த்து நீக்க வேண்டியதை நீக்கி முடிவாகக் காட்சிகளை இணைக்கின்றனர். இப்படச் சுருள் மின்சார இயந்திரத்தால் இயங்கி வெள்ளித் திரையில் விநோதங்களைக் காட்டுகிறது. இதே போலத்தான் உலகில் எல்லாம் ஒரு குறித்த முயற்சியின் தீவிரத்தால் வெற்றி பெறுகின்றன.

பூத, வேதி, கணிதப் புலவர் இக்கால இயந்திர நாகரிகத்தை உண்டாக்கி யிருக்கிறார்கள். நியூடன், மாக்ஸ்வெல், ஃபாரடே, காவெண்டிஷ், எடிசன், ஈன்ஸ்டின், மாடம் கியூரி, சி. வி. ராமன், போஸ் போன்ற விஞ்ஞானிகள், மனித சமுதாயத்திற்குத் தமது ஆராய்ச்சிகளால் எல்லையற்ற நன்மைகளைச் செய்திருக்கின்றனர். அச்சு, காயிதம், நூல், துணி, எழுதுகோல்கள், மருந்துகள், டெலிபோன், தந்தி, கம்பியில்லாத் தந்தி, கேபிள், ஒலிப் படங்கள், ஆகாய வசனி, மோட்டார், புகைவண்டி, கப்பல், பறவைக் கப்பல் இவை யெல்லாம் தற்கால நாகரிக வாழ்விற்கும், கூட்டுறவிற்கும் வேண்டிய சாதனங்களா யிருக்கின்றன. இவற்றை யெல்லாம் கண்டு பிடித்த அறிஞர் வரலாறுகளை ஆராய்ந்தால் அவர்களது பொறுமையுள்ள முயற்சித் திறனை நாம் வியப்போம்.

3

உலகம் புகழும் மேதாவிகள் அனைவரும் மிகவும் கீழ்ப்படியிலிருந்து, இடைவிடா முயற்சியினாலே தான் முன்னுக்கு வந்தார்கள்.

மின்சார விளக்கு, கிராமபோன் முதலிய பயனுள்ள சாமான்களைக் கண்டுபிடித்து மனித சமுதாயத்திற்குப் பெரிய தொண்டு புரிந்தார் எடிசன் என்னும் விஞ்ஞானி. அவர் பரம ஏழையாகப் பிறந்தார். படிக்கக்கூடப் பணமில்லாமல் பத்திரிகை விற்றுப் பிழைத்தார். தாமாகப் படித்துக் கல்வியறிவை வளர்த்தார். அவருக்குத் தந்தியிலாகாவில் வேலை கிடைத்தது. அதிலிருந்து ஆராய்ச்சித் திறனால் முன்னேறி உலகம் வியக்கும் பல யந்திரங்களை அவர் செய்து உதவினார். அமெரிக்காவில் கோடீஸ்வரர்களாக விளங்கிய ராக்பெல்லரும், ஹென்ரி போர்டும், எளியர்களாகவே பிறந்து, இடைவிடாத முயற்சியினால் முன்னேறினர். ரஷ்ஷிய நாவலரசரான மாக்ஸிம் கோர்க்கி நாடோடியாகத் திரிந்தவர். அவர் தமது இடைவிடாத பயிற்சியால் நாவன்மை பெற்று ரஷ்ஷிய சமுதாயத்திற்குப் புதிய உணர்ச்சி தரும் கதைகளை எழுதினார். புக்கர் வாஷிங்க்டன் கதை உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். உப்புச் சுரங்கத்தில் வேலை செய்து அவர் தமது தாயாரைக் காப்பாற்றினார். அவர் தமது நீக்ரோ ஜாதியார் படும் துயரங்களைக் கண்டார். துயரங்களுக்குக் காரணம் கல்வியின்மையே என்றுணர்ந்தார். கல்வியில் அவருக்கு அளவற்ற ஆர்வம் உண்டானது. கூலிவேலை செய்து வழிச் செலவைச் சம்பாதித்து, 500 மைல் நடந்து இச் சிறுவன் கல்வி கற்க ஹாம்டன் சர்வகலாசாலைக்குச் சென்றான்.

பஞ்சையாக வந்த இச் சிறுவனைக் கலாசாலைத் தலைவி முதலில் மாணவனாக ஏற்றுக் கொள்ளவில்லை. "என் அறையைச் சுத்தம் செய்" என்று அவள் ஏவினாள். சிறுவன் அறையைக் கண்ணாடி போலப் பளபளவென்று சுத்தம் செய்தான். தலைவி மகிழ்ந்து காவற்கார வேலை கொடுத்தாள். வேலை பார்த்துச் சாப்பிட்டு, புக்கர் வாஷிங்க்டன் கல்வியும் பயின்றான். இச் சிறுவன் தனது முயற்சியால் கல்வியில் தேர்ச்சி பெற்றுப் பிற்காலம் டுஸ்கீகீ என்னுமிடத்தில் மிகப் பெரிய சர்வகலாசாலை யொன்று நிலைநாட்டினான். அதன்மூலம் தமது ஜாதிக்கு அவர் அளப்பரிய தொண்டுகளைச் செய்தார். அவருடைய பணிகளை அமெரிக்கக் குடியரசுத் தலைவரே மெச்சினார். தமது எளிய வாழ்விலும், விடா முயற்சியாலேதான் புக்கர் வாஷிங்க்டன் டுஸ்கீகீ சர்வகலாசாலையை அமைத்தார். அச் சர்வ கலாசாலை இன்று 2,350 ஏகரா நிலத்தில் 107 பெரிய கட்டிடங்களைக் கொண்டு விளங்குகிறது. விவசாயத்திற்கெனச் சுமார் 22,300 ஏகராக்கள் அதைச் சார்ந்துள்ளன. சுமார் 40 தொழில்கள் அங்கே கற்பிக்கப் பெறுகின்றன. நமது நாட்டிலும் பண்டித மதன்மோகன் மாளவியா தமது அரிய முயற்சியாலே காசி

ஹிந்து சர்வ கலாசாலையை அற்புதமாக அமைத்திருப்பதை நாம் போற்ருதிருக்க முடியாது. நந் தமிழ் நாட்டில் சர்வ கலாசாலை அமைத்த ராஜா சர் அண்ணுமலைச் செட்டியார் அவர்களும் போற்றுதற்குரியவர்களே.

4

மனித மூளை அபாரமான சக்தி படைத்தது. ஒவ்வொருவருக்கும் ஒரு இயற்புலமை உண்டு. அதை விடா முயற்சியால் வளர்த்து, அரிய பணிகளைச் செய்யலாம். ஒவ்வொரு உயிரும் தனது புலன் அறிவால் ஒரு அற்புதத்தைச் செய்கிறது. உதாரணமாக, கடலில் உள்ள பவளப் பூச்சிகள் ஆயிரக் கணக்கான மைல்களுக்குப் பெரிய தடைச்சுவர்களைக் கட்டுகின்றன. ஒற்றுமையும், உழைப்புங் கொண்ட சமுதாய ஒழுங்கிற்குத் தேனீக்களும், எறும்புக் கூட்டங்களும் உதாரணமாக விருக்கின்றன. இயற்கைப் பொருள்களை நோக்கினும் ஒவ்வொன்றும் இடைவிடாத முயற்சிக்கு உதாரணமாக விளங்குகிறது. கடலும், கதிரும், காற்றும், நிலமும் உறக்கமின்றித் தொழில் புரிந்து உலகுயிர்களைக் காக்கின்றன.

5

கடவுள் மனிதனுக்கு மூளையைக் கொடுத்திருக்கிருர். அதைத்தூண்ட மனதைக்கொடுத்திருக்கிருர். அதை உரப்படுத்த நரம்புகளைத் தந்திருக்கிருர். அதைத் திண்மையுறுத்த இரத்த வோட்டம் இருக்கிறது. இரத்தத்தைப் பெருக்கப் பலவகை உணவுகள் உள்ளன. இவற்றைத் தவிர ஒவ்வொருக்கும் தனித் தனிப் புலமையுள்ளது. கவிப்புலமை, நாவன்மை, ஓவியப் புலமை, பல்வேறு தொழிற் புலமை, இயற்கலையாராய்ச்சிப் புலமை முதலிய எத்தனையோ விதமான புலமைகள் விளங்குகின்றன. மனிதன் தனதுபுலமையையறிந்து முயற்சியினல் அதனை வளர்க்கவேண்டும். அப் புலமையைக் கொண்டு தானும் வாழவேண்டும்; மனித சமுதாயத்தையும் வாழ்விக்க வேண்டும். அதுவே மனிதத் தன்மையாகும்.

6

ஒரு முயற்சியினல் எடுத்ததும் வெற்றி கிடைப்பதரிது. ஆயிரக் கணக்கான கவிகள் எழுதி யெழுதிப் பழகித்தான் ஒருவன் நல்ல கவியாகிருன். கவி தாகூர் தமது சிறு வயதில் எத்தனையோ கவிதைகள் எழுதி யெழுதிப் பயின்றே பிறகு கீதாஞ்சலி எழுதும் சக்தி பெற்ருர். 'சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம்' என்பது உண்மை. ஆதலால் நாம்கொண்ட காரியத்தில் தளராமல் கருத்தூன்றி முயல வேண்டும்.

தற்கால உலகமே செய்திக் கம்பிகளால் ஆனது. செய்திகள் ஆகாய அணுக்கள் மூலம் பரவுகின்றன. கடல் தந்திக்கு கேபிள் என்பர். தடித்த செப்புக் கம்பிகளும், இரும்புக் கம்பிகளும் சணற் கயிறும், கட்டபர்ச்சா என்னும் பிசினும் சேர்ந்து கேபிள் தந்திகளாகின்றன. இந்தக் கேபிள் முதலில் இங்கிலாந்திற்கும் பிரான்ஸிற்கும் இருபது மைல் இடையிலுள்ள டோவர் வாய்க்காலைத் தாண்டவே போடப் பெற்றது. பிறகு அமெரிக்காவிற்குக் கம்பி இணைத்தார்கள். அவ்வாறு இணைக்கும்போது பல தடவைகளில் கம்பி நழுவிக் கடலில் விழுந்து முயற்சி வீணனது. எவ்வளவோ பொருள் நஷ்டமானது. இதெங்கே நடக்கப் போகிறது என்று முயற்சியைப் பலர் இகழ்ந்தனர். 18·1-ல் தொடங்கிய முயற்சி 1866-ம் ஆண்டில் பலன் அளித்தது. பதினைந்து ஆண்டுகள் சலிக்காமல் முயன்று இங்கிலாந்திற்கும் பிரான்ஸிற்கும் கம்பி போட்டனர். பிறகு மற்ற நாடுகளுக்கும் கம்பி யிணைத்தனர். ஒவ்வொரு காரியத்திலும் இத்தகைய விடாமுயற்சி வேண்டும். மனம் ஊன்றி முயன்ருல் எதையும் சாதிக்கலாமல்லவா?

7

ஒரு முயற்சி முதலில் நமது மனச் சாட்சிக்குப் பொருந்தியிருக்க வேண்டும். இரண்டாவது, அம் முயற்சியால் உலகிற்கு நல்ல பயன் உண்டாக்க வேண்டும். மனப் பொருத்தமும், பொது நலமும் சேர்ந்த முயற்சியை என்ன வந்தாலும் தளராமல் அடுத்து முயன்று சாதிப்பவனே உலகில் வீரனுக விளங்குகிருன். முயலும்போது, பல இடர்கள் நம்மைச் சோதிக்கும். நமது முயற்சியை அறியா மக்கள் பைத்தியம் என்று கேலி செய்வர்.

கொலம்பஸ் மூன்று சிறு படகுகளுடன் கண் காணுக் கடலில் இந்தியாவைக் கண்டு பிடிப்பதாகத் துணிந்து அமெரிக்காவைக் கண்டு பிடித்தார். அவர் முயற்சியை அரசாங்கமே மறுத்தது. உடன்சென்ற மாலுமிகள் பொறுமை யிழந்து அவரைக் கொல்லவும் பார்த்தனர். இடர்களை எல்லாம் பொறுத்துப் புதிய உலகைக் கண்டு பிடித்த வீரனுக்கு என்ன வெகுமதி கிடைத்தது? ஸ்பெயின் மன்னன் தன்மந்திரிகளின் சொல்லைக் கேட்டு இவ்வீரனை இகழ்ந்து சிறையிலிட்டுப் பட்டினி போட்டுக் கொன்ருன்! இறந்த பிறகே அவன் பெருமை விளங்கிற்று. பாவலரும் அறிஞரும் கொலம்பஸைப் புகழ்ந்து கொண்டாடினர். கொலம்பஸ் கஷ்டப்பட்டு வருவதையும்

சிறுமையும்பட்டு இறந்தார். பொன்னும், வளமும் குலுங்கும் அமெரிக்காவை இன்று உலகம் கொண்டாடுகிறது. அரிய, பெரிய முயற்சிகளைச் செய்யும்போது உலகோர் செய்யும் கேலிக ளுக்கும், இடர்களுக்கும் அஞ்சக்கூடாது.

நாமுண்டு, நமது முயற்சியுண்டு என்று கருத்து ஊன்றிக் காரியத்தைச் சாதிக்க வேண்டும். ஒரு உதாரணம் கேளுங்கள்:—இப்பொழுது இயந்தி ரங்கள் பருத்தியை நூலாக்கித் திரித்து அருவி மாதிரி ஆடைகளைச் செய்து குவிக்கின்றன. முற் காலம் அனைவரும் கைராட்டின நூலையே நெய்து அணிந்தனர். 1745-ம் வருடம் லங்காஷயரில் ஹார்கிரேவ் என்றொரு ஏழை பிறந்தார். அவ ருக்கு எழுத்து வாசனையே கிடையாது. அவர் நெசவுச் சாலையில் உழைத்துப் பிழைத்து வந்தார். அதிகமாக நூற்கக் கருதி அவர் 1764-ம் ஆண்டு ஒரு இயந்திரத்தைக் கண்டுபிடித்தார். அதனால் அவர் அதிகம் நூற்பதைக் கண்ட தொழிலா ளர்கள் பொறாமை கொண்டு அந்த யந்திரத்தை உடைத்தெறிந்தனர். அவர் மற்றொரு ஊருக்குப் போய் நேர்த்தியான புதிய இயந்திரத்தைச் செய்தார். அதையும் பகைவர்உடைத்தெறிந்தனர். இருப்பினும் அதன் சூட்சுமத்தை யறிந்து ஆர்க்ரைட் என்பவர் ஒரு பெரிய இயந்திரம் செய்தார். பொறாமைக்காரர் அவரைப் பழித்துத் தூற்றினர். "ஆர்க்ரைட் சூனியக்காரன்; சைத்தான் உபாசகன்; சைத்தான் அவன் கருவியில் ஆடுகிறான். அவன் தாளம் போட்டுக் கூத்தாடுகிறான், என்றனர்.

அந்தப் பழிக்கெல்லாம் ஆர்க்ரைட் அஞ்சாமல் தமது கருமமே கண்ணாயினார். அவர் கண்ட இயந்திரத்தை அபிவிருத்தி செய்து பின்னால் வந்த அறிஞர் இன்றுள்ள நூல் நெசவு யந்தி ரத்தைச் செய்திருக்கிறார்கள்.

அரசியல், தொழில், கலை, ஆராய்ச்சி, சமூகச் சீர்திருத்தம், சமயம் முதலிய எத்துறையிலும் விளங்கும் மகான்களும் உலகின் இசைவசை களைப் பாராட்டாமல் மனந்தளராமல் மேலும் மேலும் உறுதியுடன் முயன்று வெற்றி பெற்றனர். உடன்கட்டை யேறும் வழக்கத்தை ஒழித்த ராஜாராம் மோகன்ராய் வைதிகர் கூக்குர லால் பட்ட இடரும், துயரும் கொஞ்சமல்ல. இத்தகைய இடர்களெல்லாம் ஒரு சோதனையே யாகும். நல்ல காரியத்தை விளக்கவே இவை கள் வருகின்றன. அஞ்சா நன் முயற்சியின் முன் இச் சிறு சல சலப்புகள் வீழ்ந்துபடும். கால வெள்ளம் புதுமை, பொதுமை யென்ற முழக்கத்துடன் முன் செல்லுகிறது. மனித சமுதாயம் ஒவ்வொரு நாளும் புதுமை பெற்றுவரு கிறது. எண்ணங்கள் விசாலமாகி வருகின்றன. குறுகிய மனப்பான்மைகள் தோல்வியுறு கின்றன. இது இடைவிடா முயற்சியாளருக்கே காலம். விதியையும் மதியால் வெல்லுங்காலம். இதற்கு உதாரணமாக மொகலாயர் காலத்தில் நடந்த கதையைச் சொல்லி எனது பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன். மொகலாயச் சக் கரவர்த்தி யொருவர் விதி பெரிதா, மதி பெரிதா என்பதை அறியவேண்டி இருபெரும் புலவர்களை அழைத்துக் கேட்டார். ஒருவர் விதி பெரிது என்றார். மற்றொருவர் மதிபெரிது என்றார். அரசர் ஒரு பெரிய மாளிகையில் இருவரையும் அடைத்துக் காவலில் வைத்தார். ஆகாராதிகள் கொடுக்கப் பெறவில்லை. விதி பெரிதென்றவர் வாளாவிருந்தார். மதி பெரிதென்றவர் அம் மாளிகையுள் எல்லா விடங்களிலும் உற்றுக் கவ னிக்கலானார். அப்படிக் கவனித்து வருகையில் ஒரு இருண்ட இடத்தில் ஒரு தட்டு வைக்கப் பெற்றிருந்தது. அதை எடுத்தார். அதில் தமக்கும், தம்முடனிருப்பவருக்கும் போதிய ஆகாரம் இருக்கக் கண்டார். அதை யெடுத்து வந்து இருவ ரும் உண்டனர். இவ்விதமே மதிபெரிதென்றவரே தேடித்தேடி தினமும் தமது நண்பருக்கும் தமக்கும் ஆகாரத்தைத் தேடிக் கொண்டார். சில நாட் கழித்த பின்னர் அரசர் இருவரையும் காவலிலிருந்து விடுவித்துச் சபைக்கு அழைத் தார். சபையில் இருவரையும் விதி பெரிதா? மதி பெரிதா? என்று கேட்டார். மதி பெரிது என்ற வர் "என்னுடைய மதியின் முயற்சியால் நானும் உண்டு, விதி பெரிதென்ற எனது நண்பரையும் காப்பாற்றினேன்" என்று பதிலிறுத்தார். விதி பெரிது, என்றவரோ "எனது விதியே அவரது மதியைத் தூண்டி உணவைத் தேடி எனக்குக் கொடுக்கும்படிக்குச் செய்தது" என்றார். இந் தக் கதையின் மூலமே எது பெரிது என்பதைத் தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

இக் காலத்தில் ஒரு காரியம் வெற்றி பெற வேண்டுமானால் விதிப்படி நடக்கும். தெய்வம் விட்டபடி விடட்டும், அதிர்ஷ்டம்போல் நடக் கும், என்றிருக்க முடியாது. மனவுறுதி, ஆர் வம், ஒரே எண்ணம், தெளிந்த ஆராய்ச்சி, தள ராப் பொறுமை, விடா முயற்சி, இவற்றுடன் பொது நல விருப்பமும், கடவுள் அன்புங் கொண்டு காரியத்தைச் சாதிக்க வேண்டும்.

முயல்க, முயல்க, முயல்க, மேன்மேலும்
பயன்களை வைத்தீசன் பதம்.

---

முன் இதழ்த் தொடர்ச்சி

# கைலாச நிகண்டு சூளாமணி

(இராவ்சாகிப் ஸ்ரீ S. வையாபுரிப் பிள்ளை, பி.ஏ., பி.எல்.)

## தெய்வப்பெயர்த் தொகுதி

156. வேலை யென்பது விளம்பில் நிகழ்காலம்.
157. ஒல்லை சிறுவரை உரைக்கிற் சிறுபொழுது.
158. எற்பாடு மாலை யாமம் வைகறை
சொற்படு நண்பகல் சொல்லிவை யைந்தும்
சிறுபொழு தென்று செப்பினு ருளரே.
159. நண்பக லென்பது நவிலும் உச்சி.
160. எல்லை படுபொழு தெற்பா டாகும்.
161. நண்பகற் கழிந்து நடையருக் கன்செல்
பின்பகற் போது பேசில் மாலை.
162. கடையிர வாகுங் கருதில் யாமம்.
163. வைகறை யருக்கன் வருபொழு தென்ப.
164. காரே கூதிர் முன்பனி பின்பனி
சீரிள வேனில் வேனி லென்றுங்கு
இருமூ வகையது பருவ மென்ப. [டாக
165. அவைதாம், ஆவணி முதலா மிரண்டிரண்
மேவின திங்க ளெண்ணின கொளலே.
166. வான்புயல் துளியொடு வழங்குங் காலம்
தான்கார் காலஞ் சாற்றுங் காலே.
167. ஊதை கொடும்பனிக் கோதிய பெயரே
தீதில்அச் சிரமெனச் செப்பினு ருளரே.
168. வசந்த மாதவ மென்பதிள வேனில்.
169. சுசியுங் கோடையுந் தோற்றுவது வேனில்.
170. பருவ மானியம் இருது வாகும்.
171. இருதுமூன் றுடையது இயம்பில் அயனம்.
172. அயன மிரண்டே ஆண்டெனப் படுமே.
173. வச்சரம் அயனம் வருடம் அப்பித்தம்
சமையும் ஆண்டுக் கமையும் பெயரே.
174. ஆயுகம் வாணுள் ஆயு வென்ப.
175. ஊழியு மடங்கலு முகமா [கும்]மே.
176. நான்முகன் வாழ்நாள் நவிலிற் கற்பம்.

விண்ணவர்வகை முற்றும்.

177. மேலை யுலகும் விசும்பு மாலுலகும்
செம்பொ னுலகமுந் தேவ ருலகமும்
உம்ப ரிடமும் உம்ப ருலகமும்
சுவனு நாகமுஞ் சுவவு முயர்நிலையும்
அமரர் கற்பமு மண்டமு மூவணையும்
புத்தே ளுலகமென் றித்திறத் தனவும்
துறக்கப் பெயரெனச் சிறக்கச் சொல்லும்.
178. சேணியுஞ் சேடியும் விஞ்சையர் சேர்விடம்.
179. பேசிய பூருவம் பிராசிகுணக் கெந்திரி
மாசில் கிழக்கெனும் வான்பொரு ளென்ப.
180. தெற்கி யாமியந் தெக்கணம் அவாசி
சிவேதை யென்று செப்பினு ருளரே.
181. பிரதிசி வாருணம் பிரத்தியக்கு மேற்கு
குடக்குப் பச்சிமங் குறிக்கின் மேற்பாலே.
182. உதக்கு வடபா லுதிசியுத் தரமென்ன
வடக்கென் கிளவி வகுத்ததொல் பெயரே.
183. மருத்துச் சதாகதி வாடை மாருதம்
வாயு அனிலம் வங்கூழ் சமீரணன்
பவனன் கம்வளி பவமா னன்கால்
வாதம் கூதிர் வானெலி தசனன்
ஊதை நீழ லுலவை கோடை
ஆசுகங் கொண்டல் அரிபிர பஞ்சனன்
கந்த வாகனன் கந்த னுரவோன்
உரக வாதி யுயிரறு கோணன்
அனுமன் தந்தை அடுபல முடையோன்
நீலி மாலி யென்றிவை யடங்கலும்
வாலிய காற்றுக்கு வகுத்ததொல் பெயரே.
184. சுழலுங் காலே சூறைக் காற்றே.
185. குளிர்பனிப் பவனன் கூதிரு மூதையும்.
186. குடதிசைக் காற்றே கோடை யென்ப.
187. குணதிசைக் காலே கொண்ட லென்ப.
188. வடபுலக் காற்றே வாடை வடந்தை.
189. மலையா சலசம் மலயஞ் சிறுகால்
வசந்தன் தென்கால் மந்த மாருதம்
தென்றிசைத் தென்ற லாகு மென்ப.
190. அங்குல மீரா றுற்றள வதில்நான்
கங்குலம் விடுதொறு மழிவுபட விருநா
லங்குலம் உட்போந் தமர்ந்து தினத்தினில்
இருபத் தோரா யிரத்தறு நூற்றில்
இழிந்த வேழாயிரத் திருநா றென்ன
ஒழிந்த இலக்கமொ டுள்ளத் தியங்கும்
பெருங்கால் தானே பிராண வாயு.
191. அபானன் அபான மாகாக் காலே.
192. உதானன் பிறப்பே யுந்தி யென்ப.
193. எங்கும் வியாபித் திருக்கும் வியானன்.
194. கந்தக் குழியிற் சந்திடை சமானன்.
195. மடக்கி நிமிர்க்கு வாயு நாகன். [தொழில்
196. இமைத்தலும் புளக மெழுப்பலு மெனுங்
அமைத்தகால் கூர்ம னுகு மென்ப.
197. தும்மலுஞ் சினமும் வெம்மையுங் கிரிகரன்.
198. தேவதத் தன்தொழில் செலுத்தலும் வியர்த்
199. இன்னுயிர் முதலா வெண்ணிய இந்த[தலும்.
மன்னுயி ரகலவும் வரம்பிற வாமல்
சுடலையிலவ் வுடலை யடலை யாக [ந்து
செங்கனல் கொளுத்தச் சென்னியைத் திற
தங்கிட மில்லெனச் சரிவது தனஞ்செயன்.

200. அங்கி யுதாசனன் அழலவன் உதவகன்
செந்தீத் தனஞ்செயன் தேயுத் தழலி
வசுவழல் முளரி வன்னி கனலி
ஆதி செஞ்சுடர் நெருப்பாரல் தீபதி
தபனன் ஞெகிழி பவனன் சோதி
தென்கீழ்த் திசையோன் எழிலி யென்பன
செந்தீத் தனக்கு வந்தபல பெயரே.
201. கடையனல் மடங்கல் வடவை கடற்றீ
ஊழித் தீயோ டுரைத்தவை யெல்லாம்
சூழ் லுடையது தொல்வட வானலம்.
202. விளக்குஞ் சுடரு மனையிருட் பகையும்
துளக்கமில் தீபமெனச் சொற்றனர் புலவர்.
[பினர்.
203. நெருப்புக் கடைகோல் ஞெலியெனச் செப்
204. சிறுபொறி புலிங்கம் உற்க மனற்றிரள்.
205. வெடிபுகை குய்யென விளம்பில் மூன்றும்
கடிகொள் தாளிப்பெனக் கண்டனர் புல
206. தூபமு மரியுந் தூமமும் புகையே. [வர்.
207. காட்டெரி தாவம் [ப]மாவக னென்னக்
கோட்டிய மூன்றுங் கொடுங்கனற் கடவுள்.
208. ஆகவ னீயம் தெக்கி ணாக்கினி
காருக பத்தியங் கருதில் முத்தீயே.
209. சலமும் ஆலமுஞ் சலிலமும் அம்பும்
அறலும் பாணியும் அப்பும் பயசும்
புனலும் வாரியும் புவனமுங் காண்டமும்
கவந்தமும் வனமுங் கம்முங் கமலமும்
வாரு மேக மலரும் அயமும்
பயமு முதகமும் பாசியும் நீரும்
சிந்துவும் ஆமுஞ் சீவனமும் பதமும்
காருந் தோயமுங் கயமு மமுதமும்
நீரமும் நாரமும் அளகமுங் கோவும்
சம்பரமும் புட்காரமுந் தடங்கன விரதமும்
பயோதரமு மிச்சிலும் பானியமும் வாரு
அகில மனைத்துயி ருணவும் விளைவும் [ணமும்
அங்குச மென்ன ஆய்ந்தவை யெல்லாம்
பொங்கு புனற்குப் புகல்பெய ராமே.
210. காரும் புயலுங் கனமுங் கொண்டலும்
வாருஞ் சீ[மூ]தமு மழையு முகிலும்
மாரியு மெழிலியு மஞ்சு மாலும்
செல்லும் விழைவுஞ் சீதமும் மையும்
கொண்மூ வும்பயோ தரமும் விண்ணும்
வானு மேகமும் விசும்பும் விண்டும்
புகையுங் கந்தமுஞ் சலதரமுங் ககனமும்
பாரமும் அமரர் வானமும் அப்பிரமும்
பகரில்வான் காரின்மேற் பாற்படும்
[பெயரே.
211. பரிச[நிய] முதிரம் பயோதரஞ் சீதரம்
காளமேகம் சண்பகம் புட்கலா வர்த்தம்
ஏழு முகில்வகை யென்னவு மொழிப.
212. உருமு விண்ணெண் ணொலியிடி யசனிசெல்
மடங்கலென்பதுந் தொடர்ந்ததப் பெயர்க்
213. சபலை தடித்துச் சஞ்சல மின்னு [கே.
சம்பை வித்துத் தென்பதும் அதுவே.
214. மாரி வானம் வருடமா சாரம்.
215. சோனை பனித்தல் சொரிமழை யாகும்.
216. ஆசார மென்ப தறிகமாய்ப் பெய்தல்.
217. சோரி விடாது சொரித லாகும்.
218. ஓதகந் தூறலென வுரைப்பர் புலவர்.
219. இகுளென் கிளவி இடிப்பெய ராகும்.
220. தலையல் மழைபெய்து விடுத லாகும்.
221. தலையலாலி தளியுறை பெயலிவை
துளியின் பெயரெனச் சொன்னோ ருளரே.
222. கரக மாலி கனோபல மென்றிவை
[ஆலாங் கட்டி யென் றறைந்தனர் புலவர்]
223. சிதருஞ் [சிகரமுஞ்]சீகரமும் பிதிருந்
தூவலுஞ் சொல்லில் துவலை யாகும்.
224. மஞ்சு நீகாரமும் இமமுஞ் சீதமும்
விஞ்சைய புலவர் விரிபனி யென்ப.
225. உரைக்கில் வாரி யோதம் வெள்ளம்
பெருக்குநிலை யழிவு பிரளய நீத்தமெனும்
வருக்க மிகுத்த மலிபுனற் பெயரே.
226. வளாறு நீராறு வருக்கு நிறைபுனல்.
227. தாழ்வுகுண் டகாதன் சாற்றில் நீந்துபுனல்.
228. சச்சலம் அகலுடஞ் சாற்றிற் றெளிநீர்.
229. கலுடங் கலுழி யாவிதங் கலங்கல்நீர்.
230. ஒழுகல் கோலநீ ரோட்ட மாகும்.
231. அறலுங் கல்லோலமும் அலையுந் தரங்கமும்
எறிபுனற் றிரைப்பெய ரென்ன லாகும்.
232. பேனஞ் சலமலம் பேசி னுரையே.
233. கொப்புள் புற்புத மொக்குள் நீர்க்குமிழ்
செப்பி னன்குந் தெண்ணீர்க் குமிழி.
234. உந்தி நாபி யுவமைநீர்ச் சுழியே.
235. பருதி யூர்கோள் பரிவேட மாகும்
மண்டல மெனவுங் கண்டனர் புலவர்.
236. வானவி லிந்திர வான்சிலை யென்ப.
237. அந்தரம் வானம் அம்பரம வியோமம்
குண்டல மண்டலங் கோவிண் வேணி
உலகங் ககன மும்பர் விசும்பு
வானக மீவெளி மங்குல் அண்டம்
உம்பரிடங் குடில மாதிர மென்றுங்கு
அம்புவி நாவோர் ஆகாய மென்ப.
238. வெடியல் வெள்ளிடை வெளியெனப்படுமே.
239. புலவு மூழலும் அழலும் நாரமும்
அளறு மிருளும் நிரையமும் பவர்க்கமும்
கும்பியு மென்ப நரகெனக் கூறுவர்.
240. கருளே அல்லுக் கருவரி திமிரமென்று
இத்திறத் தனவும் இருளின் பெயரே.
விண்ணின் வகை முற்றும்

(தொடரும்)

# கற்பு

(ஸ்ரீமதி எஸ். பத்மாஸனி அம்மாள், பெல்காம்)

"கடவுள் சான்ற கற்பு" என்னும் பதிவிரதைத் தருமம் தெய்விகம் பொருந்தியது. மஹாலக்ஷ்மியின் எழிலும், ஸரஸ்வதியின் வித்தியாபலமும், பார்வதியின் சக்தியும் ஒருங்கே அதில் பொருந்தி இலங்குகின்றது. கற்புடைய மனைவியுடன் இல்லற தர்மத்தை ஒழுங்காய் நடத்துகிறவன் "வானுறையுந் தெய்வத்துள் வைக்கப்படும்" என்பது பெரியோர் கொள்கை. "கண்டனன் கற்பினுக் கணியை" என்ற கம்பன் வாக்கு பாரத நாட்டிற்கே பொருந்தும். அதில் வாழும் மாதர்கள் கற்பின் செல்விகள். அவர்கள் ரத்தத்தில் கற்பின்பெருமை தோய்ந்துகிடக்கிறது. கற்பினால் முடியாததும் உண்டோ! நளாயனியின் கற்புக்கு முன் சூரியனும் பயந்தான். யமன் கொண்ட உயிரையும் மீளப் பெற்றாள் ஸதிஸாவித்திரி. கற்புக்கு முன் கல்லும் உணவாயிற்று; மணலும் குடமாக மாறிற்று; அக்கினியும் குளிர்ந்தது.

கற்புடைய மங்கை என்னவிதமான தியாகத்திற்கும் உடன்படுவாள். "காதலரிறப்பிற் கனையெரி பொத்தி" மாண்டவர் எவ்வளவுபேர்? "கூர்ந்து நாளும் வாதித்தலன்றி மகிழா மனை வாழ்வு பூண்ட" வருடனும் சற்றும் சலியா மனத்தினராய் இல்லற வாழ்வு நடத்திய பெண்கள் எவ்வளவுபேர்?

"கன்னன் மொழியார்க் கழகு கற்பாமே" என்பது நீதிமொழி. நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்ற நாற்குணமும் நாற்படையாகக் கொண்ட பெண்மை அரசு கற்பென்னும் அரியணையில்தான் வீற்றிருக்கிறது. அப்பெண்மணிகளின் மனதில் கடவுள் பக்தி ஊன்றி இருக்கும். அவர்கள் வாக்கில் வாய்மை மிளிரும். அவர்கள் கடல்போல் கஷ்டம் வந்தாலும் கடுகளவும் கற்பினின்றும் நழுவமாட்டார். கன்னெஞ்சர் வசப்பட்டாலும் நன்னெறி பிசகார். அவர்கள் மனோபலம் இரும்பையும் உருக்கையும் வெல்லும். ஆனால் அவர்கள் இருதயத்தில் ஜீவ காருண்யம் இரக்கம் முதலிய குணங்கள் "நெக்கு நெக்கன" இளகி நிற்கும்.

கொழுநனைப் பேணுதல் குல மகட்கழகு. கணவன் மூடனாயிருந்தாலும் குரூபியாயிருந்தாலும் அவன் குறிப்பறிந்து வேண்டும் பணிவிடைகள் செய்வதில் கற்புடைய பெண் கொஞ்சமும் தயங்கமாட்டாள். "எப்பணியால் இன்புறுவர் காதலரக் காதலரை அப்பணியால் அப்பொழுதே யன்புறுத்தி யொப்ப மனங்குழையும் வண்ணம் மகிழ்விப்பதன்றே கனங்குழையார் தங்கள் கடன்"; அதனால் ஏற்படும் மெய்வருத்தம் பாராள்; பசி நோக்காள்; கண்துஞ்சாள்; எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளாள்.

பதியைத் தெய்வமாகக் கருதும் பெண்மணி 'அறவோர்க்களித்தல் அந்தணர் ஓம்பல்' முதலிய நற்குண நற்செய்கைகள் உள்ளவள். அவள் அடிசிற்கினியாள்; தன் அன்பனிடம் பேரன்புடையாள்; பதி சொற்றவறுத பாவை; அடி வருடிப் பின்றூங்கி முன்னெழும் பேதை; மனைத்தக்க மாண்புடையாள். தன் கணவனை உண்ணுவிப்பதில் தாயைப்போல் அன்பு காட்டியும், அவன் பணிவிடைகளைச் செய்வதில் வேலைக்காரிபோல் பணிவு பூண்டும், அவனை உல்லாசப்படுத்துவதில் வேசிபோல் சாமர்த்தியம் காட்டியும் ஒழுகி வருவாள்.

அன்னை தயையும் மடியாள் பணியுமலர்ப்
பொன்னி னழகும் புவிப்பொறையும்—வன்னமுலை
வேசி துயிலும் விறன்மந்திரி மதியும்
பேசி லிவையுடையாள் பெண்.

அவள் அகத்திலிருக்க இல்லாதது ஒன்றுமே இல்லை; அவள் போய்விட்டால் இருப்பது ஒன்றும் கிடையாது.

கற்புடையமங்கை "புகுந்தஇடம் புண்ணிய க்ஷேத்திரமாகும். அங்கு தொட்டது துலங்கும்; வைத்தது வழங்கும்; மண்ணைத் தொட்டாலும் பொன்னாகும். அவளது கணவனுக்கு அவள் ஆரா அமிர்தமாவாள். அவன் இருதயம் இல்லாளை விட்டு ஒருபோதும் இணைபிரியாது. அவளது உத்தமமான நடக்கை அவனுக்கு உன்னத பாடசாலையாம். அவன் இம்மை, மறுமை இரண்டிலும் இன்பத்தையடைவான்.'

கற்புடைய மாதருக்கு "நிறைகாக்குங் காப்பே தலை". அவர்கள்,

கன்னிக் காவலுங் கடியிற் காவலுந்
தன்னுறு கணவன் சாவுறிற் காவலு
நிறையிற் காத்துப் பிறர் காணுது
கொண்டோனல்லது தெய்வமும் பேணு
பெண்டிர். —(மணிமேகலை)

ஆக விளங்குவர். காவலின் அருமையை உணர்ந்த வளையாபதி ஆசிரியர் கூறுகின்றார்:

உண்டியுட் காப்புண்டுறு பொருட் காப்புண்டு
கண்டவிழுப் பொருட் கல்விக்குக் காப்புண்டு
பெண்டிரைக் காப்பதில மென்று ஞாலத்துக்
கண்டு மொழிந்தனர் கற்றறிந் தோரே.

கற்பிற் சிறந்த மடந்தைகளைக் கெடுக்க நினைக்கும் துட்டர்கள் துன்புறுவர். கற்புடையோர் பார்த்த மாத்திரத்திலே கொல்லக் கூடிய கொடிய நச்சுக்கண் நாகத்தை ஒத்தவர்.

கற்புடைய மங்கையர் மானத்தைக் காப்பாற்ற உயிரையும் விடுவர். அவர்கள் பொய்யுடம்பு அழிந்தாலும் புகழுடம்பு ஒருநாளும் அழியாது. அவர்களை.

"நாடு மூரு நவிபுகழ்ந் தேத்தப்
பீடுறும் மழை பெய்கெனப் பெய்யும்"

அவர்களுடைய உயர்ந்த ஒழுக்கமே அறம், பொருள், இன்பம், வீடு என்கிற நான்கு புருஷார்த்தங்களுக்கும் அடிப்படை. கற்பின் கௌரவமே மனிதர்களின் வீரியம், தைரியம், சௌரியம் முதலிய நற்குண நலன்களுக்கு காரணமாகின்றது. கற்பு உலைந்தால் சன சமூகத்திற்கே கேடுவரும் என்பது துணிபு.

கற்பின் வழி விலகிய மாதர் கணவனைத் தூற்றுவர்; எதிர் பேசுவர்; பிற இல் சேர்வர்; தீப் பெண்டிரைச் சார்வர்;

"வீடுதோறும் வைவாள், வேண்டாமெனி னழுவாள்
நாடிமுன் நாயகனை வைவாள்முக் — காடிடுவாள்
பீடிலாள் கொண்டோனைக் கூடையுடனே விற்பாள்"

ஔவைப் பிராட்டி இத்தகைய மாதர்களை வெறுத்து கூறுகின்றனள். அவர்களே மடியில் நெருப்பென்றும் கணவனுக்கு 'அட்டமத்துச் சனி' என்றும் கூறுகின்றாள். "கூறாமல் சந்நியாசங் கொள்வதே" அவர்களுக்குள்ள ஓர் உபாயம்.

சுதந்தர மோகங்கொண்ட சில பெண்டிர் தாம்பத்திய வாழ்விலும் சுதந்தரத்தைக் கேட்கின்றனர். தனக்காக வாழும் வாழ்க்கை மிருகத்தன்மையுள்ளது. கற்புடைய பெண் புருஷனுக்காகவும், குழந்தைகளுக்காகவும், உற்றார் உறவினருக்காகவுமே வாழ்கிறாள். **கடமை பெரிதேதவிர உரிமை பெரிதல்ல; கடமை செய்வதிலுள்ள ஆனந்தம் உரிமை கேட்பதில் இல்லை.**

ஒரே மனத்தினராய் ஒருவர் வாழ்க்கையில் மற்றவர் ஈடுபட்டு நடத்தும் இல்லற தர்மமானது மிகவும் சிறந்தது. அவ்வாழ்வு கிடைத்தவர் மற்ற ஒன்றிலும் வீண் ஆசை கொள்ள மாட்டார்.

ஆதலால் '**இல்லறமல்லது நல்லறமன்று**' என்ற உண்மையை உணர்ந்து நடத்தலே இன்பமாகும்.

---

(௬-ம் பக்கத் தொடர்ச்சி)

பதற்குக்கூடச் சீவனில்லை, **ஒற்றுமையில்லை.** ஆளுக்கொரு மூலையாக இழுப்போம். கொண்ட காரியத்தை இழப்போம். உலகம் சிரிக்கும். மீண்டும் கூண்டுதான்."

சமுதாயனர் கண்ணீர் வடித்தார். "சக்தியன்னையே! உணர்ந்தேன், உணர்ந்தேன், தேவியே! இனி உறங்கமாட்டேன். 'உப்பு முதல் கற்பூரம் வரையில் குண்டூசி முதல் ஆகாயக் கப்பல்வரையில் எனது நாட்டிலேயே உண்டாக்க வேண்டும்' என்று இதோ திலகர் கட்டத்திலிருந்து வீறிடுகிறேன். ஜனங்கள் கேட்காவிட்டால் அலைகளாவது கேட்டு என் பிரசங்கத்தை 'சபாஷ்' என்னட்டும்" என்றெழுந்தார்.

"மகனே மேடைப்பேச்செல்லாம் வேண்டுமட்டும் நடந்தன. அத்தனைப் பேச்சையும் சென்ற ஐம்பத்தைந் தாண்டுகளாகக் கேட்டுக்கொண்டு கடல் இன்னும் "முயற்சி, முயற்சி, முயற்சி" என்று முறையிடுகிறது. நமது நாட்டில் ஏராளமான மூங்கிற்காடுகள் உள்ளன. மலைபருவிகள் உள்ளன. அவற்றால் மின்சார இயந்திரத்தை இயக்கலாம். மூங்கிலைக் கூழாக்கி முதலில் காகிதத்தொழில் செய்ய முயல். பிறகு தீக்குச்சி, துணி, வாகனங்கள், எழுதுகோல்கள்—இப்படிப் படிப்படியாக வரட்டும். இன்று **தைப் பொங்கல்.** நாட்டில் வறுமையும் மடமையும், பட்டினியும் தொழிலுறக்கமும் தாண்டவமாடுகின்றன. இன்று நாட்டைக் கருதினால் நமது பொங்கல் அடிமைப் பொங்கல் என்றுணர்வோம். அடுத்த ஆண்டு சுதந்திரப் பொங்கலை உண்ணவேண்டும். தொழில் விரதம் பூண்டு வேலைசெய். ஒவ்வொரு கையும் ஆறு மணி நேரம் செல்வத் தொழில் செய்யவேண்டும், இதைச் சொல்லத்தான் உன்னை உலுக்கி எழுப்பினேன். இனி உறங்காதே, தொழில்! தொழில்! தொழில்!" என்று சக்தியன்னை திருவாளர் சமுதாயனரை ஊக்கினாள். தமிழர்களே இனியும் தூங்குவீர்களா? சக்தியின் வார்த்தைகளைக் கேளுங்கள்! சோம்ப லொழிக! தொழில்வளம் வளர்க! எந்தாய் வாழ்க!

# சுவர்க்க ராஜ்யம்

(சுவாமி சுத்தானந்த பாரதியார்)

1

பரலோகம்; பரமபிதா தேவதூதர்கள் புடைசூழ, அரியணை வீற்றிருக்கிறார். பக்கத்தில் திருக்குமாரன் விளங்குகிறான். டிசம்பர் 25உ; பரமபிதா நீண்ட ஆலோசனையில் இருந்து "ஆமன்" என்று சொல்லி எழுந்தார். (ஆமன் என்றால் ததாஸ்து). மகனைப் பார்த்தார்: பரமண்டலத்திலுள்ள தூதர்களையும் திருக்கண் நோக்கினார். 'கட்டளைக்காகக் காத்திருக்கிறோம்', என்று ஒவ்வொருவர் முகமும், கையும் பேசின.

2

தந்தை திருவாய் மலர்ந்தார்: "எனது அருமைக் குமரனே, பாவிகளுக்காகச் சிலுவையில் நீ இரத்தம் சிந்தி, 1939 ஆண்டுகள் ஆயின. இவ்வளவு காலத்திற்குள்ளாக ஆதாமும் ஏவாளும் செய்த பாவம் நிச்சயமாகப் பரிகாரம் ஆயிருக்க வேண்டும். இவ்வளவு நீண்ட காலத்திற்குள்ளாக மனித சமுதாயம் உனது இரத்தத் துளிகளால் பரிசுத்தமா யிருக்கவேண்டும்" முன்னே "சாத்தானே, பின்செல்!" என்று ஒரு அதட்டுப் போட்டாய். அத்துடன் துஷ்டச் சாத்தான் ஒழிந்து போயிருப்பான். திருக்குமரனே! எப்படியாவது, இந்த ஆண்டு உலகத்திலே சுவர்க்க ராச்சியத்தை நிலைநாட்டியே தீர வேண்டும். ஆதலால் மகனே, நீ பூலோகத்திற்கு உடனே செல்! துணைக்கு **கெப்ரியலைக்** கூட்டிச் செல். நமது பாதத்தைத் தாங்கும் முக்காலியான உலகம் எந்தநிலைமையில் இருக்கிறது என்று சுற்றிப்பார்த்து, அடுத்த கிறிஸ்மஸ் பண்டிகைக்குள் ஒரு அறிக்கை சமர்ப்பி. காலம் ஒத்திருந்தால் சுவர்க்க ராஜ்யத்தை உலகில் இறக்குவோம்" என்றார்.

திருக்குமாரன் தந்தையின் கட்டளையைச் சிரமேல் ஏற்றான். ஆனால் கெப்ரியல் உடல் நடுங்கிற்று. "என்ன செய்தி?" என்றார் பரமபிதா "பரலோகத் தந்தையே பூலோகத்தில் தமது திருக்குமாரன் இப்போது இவ்வாறு வெளிப்படையாகச் சென்றால், அபாயம். முன்னே சிலுவை; இப்போது குண்டு பீரங்கிகளும் ஆகாச குண்டுகளும் அமளிபடுகின்றன. ஆதலால் காலத்திற்கேற்ற கோலத்துடன் சென்றுதான் காரியத்தைச் சாதிக்க வேண்டும்" என்றான். "உண்மை; மகனே, அவ்வாறே செல்!" என்றார் பிதா.

"ஃபுல் ஸூட்டு"டன் புறப்பட்டார் ஏசுநாதர். கெப்ரியல் வழிகாட்டினான். முதலில் தான் சிலுவையேறிய கோல்கோதாவையும், எருசலத்தையும் கண்டார். பெரிய பெரிய கட்டிடங்கள் விளங்கின. "அங்கே சட்டையும் தொப்பியுமாக ஏராளமான ஜனங்கள் கூடித் தொழுதனர். எங்கும் சிலுவை யடையாளங்கள் இருந்தன. "இதெல்லாம் என்ன?" என்று வினவினார் திருக்குமாரர். "புதிதாகக் கேட்கிறீரே! இவை எங்கள் ஏசுநாதர் கோயில், நாங்கள் வணங்கும் சர்ச்சு. நாங்கள் கிறிஸ்தவர்; உலகை ஆளும் ஜாதி" என்றனர். "நான் என் பெயரால் ஒரு சமயத்தையும் ஸ்தாபிக்கவில்லை; சர்ச்சும் கட்டவில்லையே; ஒரு மலைக்குகையில் வசித்தேன்; எளியவருக்கு நன்மொழி சொன்னேன். அறியாதவர்கள் என்னைச் சிலுவையேற்றினர்; பொறுமையாக நான் பரம பிதாவிடம் போய்ச் சேர்ந்தேன்" என்று நீண்டநேரம் சிந்தித்தார் ஏசுநாதர். "திருக்குமாரரே, இவையெல்லாம் தாங்கள் விண்ணேறி 200 ஆண்டுகளுக்குப் பிறகு பக்தர்களால் நடப்பிககப்பட்டவை. எப்படியும் தங்கள் அருள் வாக்கும், புனித வாழ்வும் இன்று உலகெல்லாம் பரவியிருக்கின்றன. இதோ இவர்கள் கையில் பளபளவென்று பைபிள் உள்ளது. உலகமெல்லாம் இந்த நூலைப் போற்றுகிறது, பாரும்" என்றான் கெப்ரியல். ஏசுநாதர் ஒரு பைபிளை வாங்கிப் பார்த்து மகிழ்ந்து சட்டைப்பைக்குள் போட்டுக்கொண்டார். "கெப்ரியல், பரமபிதா எனக்கருளிய அன்பு மொழியை இவ்வளவு அழகான கோயில்கட்டி, இத்தனைக் கோடிப் பேர் போற்றுகிறார்கள். அதனால் உலகம் அன்பும் அமைதியும் நிறைந்தே யிருக்கிறது போலும்; சுவர்க்க ராச்சியம் உடனே இறங்கலாம் என்று பரமபிதாவிடம் தெரிவிப்போம் வா!" என்றார்.

3

"அவசரப்படாதீர்; இக்கட்டிடங்களையும் தோலட்டை பைபிளையும், சட்டை தொப்பி மாட்டிய பேர்வழிகளையும் கண்டு உலகத்தையே மற்றொரு ஈடன் என்று மதிக்கக்கூடாது. வாரும் சுற்றிப் பார்ப்போம்" என்றான். அப்போது "ஹா ஹூ, பும், பூம்டும்!" என்று ஏகசத்தமும் இடி முழக்கமும் கேட்டன. அராபியருக்கும் யூதருக்கும் வெட்டுப்பழி குத்துப்பழி. "இது எமது நிலம் நீ போ வெளியே" என்று இருவரும் மல்லாடினர். இடையே சில வெண் சிப்பாய்கள் புகுந்து பலாத்காரமாகக் கலகத்தை அடக்கினர். ஏசுநாதர் விவரம் கேட்டார். தான் உதித்த யூதஜாதி படும் இடர்களைக் கண்டு கலங்கினார். தன் பேரால் ஒரு சமயம் விளங்குவது போலவே, முகம்மது நபியின் பேரால் ஒரு பெரிய சமயம் விளங்கியதைக்கண்டார். தமது பக்தர் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் செழித்தோங்குவதை அறிந்தார். உடனே கெப்ரியலுடன் ஐரோப்பா சென்றார்.

ரோமாபுரி வாடிகன் மாளிகைக்குப் போனார். அப்பாடி! எவ்வளவு செல்வம் செழித்த கட்டிடம்! உள்ளே நுழைந்தார். "யார்? கத்தோலியரா,

புரோதஸ்தாந்தியரா, ஆங்கிளிகரா, பிரிஸ்பிதேரியரா ?'' என்று காவலர் வினவினர். ''கடவுளன்பர்; பரம பிதாவின் மைந்தர்'' என்றனர் இருவரும். ''அதெல்லாம் முடியாது. ''கத்தோலியரானால் வாரும்!'' என்றனர் காவலர். ''சரி அப்படியே வைத்துக்கொள்ளுமே'' என்று உள்ளே சென்று போப்பைப் பார்த்துக் கத்தோலிய ராஜ்யம் உலகெங்கும் எப்படி நடக்கிறதென்று அறிந்து மேலேசென்றனர். அங்கேஇலட்சக்கணக்கான இத்தாலியத் துருப்புகள் அணிவகுத்து நின்றனர். ஒருமேடையிலிருந்து கம்பீரமாக முஸ்ஸோலினி ஏறி, படைகளை நோக்கிக் கர்ச்சித்தான். ''வீரர்களே, மறுபடியும் பழைய ரோம ராஜ்யத்தை நிலைநாட்ட வேண்டும். அபிஸீனியாவை வென்றது பெரிதல்ல. நாம் மற்றொரு ஸீஸராக வேண்டும். மற்ற எந்த நாட்டிற்கும் நாம் சலித்தவர்களல்லோம். நம்மிடை ஏராளமான ஆகாச விமானங்கள், பயங்கரமான யுத்தக் கப்பல்கள், நாசகாரிகள், நீர்மூழ்கிகள், டாங்குகள், குவியல் குவியலாக வெடி குண்டுகள், விஷப்புகைக் குண்டுகள், விஷப்புழுக் குண்டுகள் எல்லாம் உள்ளன. உலக சமாதானத்திற்கே நாம் இதெல்லாம் சேர்த்து வைத்திருக்கிறோம். நமது ஜோலிக்கு யாராவது வந்தால் நமது திறமையை 'டாம் டாம்' என்று காட்டுவோம்'' என்றான். ''முஸோலினி வாழ்க'' என்று எல்லா வீரரும் வானளாவப் போற்றிசெய்தனர். இதைக் கேட்ட ஏசுநாதருக்குப் பகீர் என்றது. முன்னே தம்மைச் சிலுவை யேற்றிய ரோம ராஜ்யத்தை மறுபடி நினைத்தார். முஸோலினி சொன்ன போர்க்கருவிகளைப் பார்த்துக் குடல் கலங்கினார். பிறகு ஜர்மனிக்குச் சென்றார். சர்ச்சுகளில் 'டாண் டாண்!' என்று மணிகள் அடித்தன. இவர்கள் பரம பக்தியினால் இப்படி மணியடித்துக் கும்பிடுகிறார்கள் என்றெண்ணி விஷயத்தை வினவினார். நாஜிப் படைகள் ஏக அமளி செய்தன. ''பதினாறு நாளில் போலந்தை வென்றார்; நமது ஹேர் ஹிட்லர் வாழ்க!'' என்று ஏகக் கூச்சலிட்டுக் குதித்தனர். இரவும் பகலும் ''டுர், புர்'' என்று ஆகாய விமானங்கள் பறந்தன. வெடிகுண்டுச் சாலைகளை எட்டிப் பார்த்தார் ஏசுநாதர். மலைமலையாகக் குண்டுகள் செய்து குவித்திருந்தனர்.

நாசி, பாசிப் போர்வெறியைக் கண்டு பதினாயிரம் சிலுவை யேறியது போலே வருந்தினார். தமது சிஷ்யர்கள் அனைவரும் இப்படிப் பயங்கரமான கொலைக் கருவிகள் செய்து சண்டையிட்டு உலகை ரணகளமாக்கும் காட்சியைக் கண்டு நடுங்கினார். உடனே ''**உலக சமாதானம்**'' என்றொரு சிறுபுத்தகம் கடவுள் பெயரால் எழுதி அச்சிட்டு ஹிட்லர், முசோலினி, ஸ்டாலின் முதலிய அனைவருக்கும் அனுப்பினார். ''கிறிஸ்தவச்சகோதரர்களே, பரமபிதா உங்களுக்கு சுவர்க்க ராஜ்யம் தரத் தயாராயிருக்கிறார். ஏன் இப்படிப் போர் வெறிகொண்டு சண்டையிட்டு மடிகிறீர்கள்? குண்டு, பீரங்கி, ஆகாயக்கப்பல், டாங்கு அனைத்தையும் அட்லாண்டிக் கடலில் போட்டுவிட்டு அமைதியாயிருங்கள். ஒருவருக்கொருவர் அன்புடனிருங்கள். வலக் கன்னத்தில் அடித்தால் இடக் கன்னத்திலும் பெற்றுக் கொள்ளுங்கள். நிறுத்துங்கள் போர்களை'' என்பதே அந்நூலின் கருத்து. கோடிக்கணக்கான பிரதிகள் அடித்து உலகெங்கும் அந்நூலை அனுப்பினர். ''யாரும் இந்நூலைப் படிக்கக் கூடாது,'' என்று எல்லாப் படிவங்களையும் பறிமுதல் செய்து கூழாக்கி வார்த்துத் தனது மெய்ன் காம்ஃபின் மறுபதிப்பிற்கு அட்டை செய்யச் சொன்னான் நாஜியர்கோன். மற்றொருவர் அந்நூலைக் கூழாக்கி அட்டையாக வார்த்துத் தோட்டாக்களைச் சுற்ற உபயோகித்தார். ஸ்டாலின் பைபிள் கும்பலுடன் அந்நூலையும் எரித்துக் குளிர் காய்ந்தார். சேம்பர்லின் அந்நூலைப் படித்து ''நான் சமாதானத்திற்குத் தயாராகத்தான் இருக்கிறேன்'' என்று தன்காரியத்தைப் பார்த்தார். மொத்தமாகப் பரலோகத்திலேயேயிருந்து பரமபிதா இரும்பும், டைனமைட்டும் அனுப்பினால் போதும் என்றார் இன்னொருவர். சுவர்க்க ராஜ்யம் வரட்டும்; ஆனால் அதில் பாதி எனக்கு, என் படைகளை அதில் வைத்துக் கொள்ள இடம் வேண்டும் என்றார் இன்னொருவர். என் சாமான்களையே சுவர்க்க வாசிகள் வாங்கவேண்டும் என்றார் இன்னொருவர். பரமபிதா அவ்வளவு சிரமப்பட்டு விண்ணரசை இறக்கவேண்டாம். மாதம் பதினாயிரம் விமானமும் லக்ஷம் குண்டுகளும், அனுப்பினால் போதும் என்றார் மற்றொருவர். ஏசுநாதர் மனம் தளர்ந்து போலந்திற்குச் சென்றார். ஆ! அங்கே பிணக்கும்பல்கள், பசி, வறுமை, அடிமைத்தனம் இவையே தோன்றின.

பிறகு ஸ்டாலின் ராஜ்யத்தைப் பார்க்கப்போனார் திருக்குமாரர். அங்கே சாமி, சமயம் என்ற மூச்சேயில்லை. ஏசுநாதர் ஸ்டாலினுடன் இனிது பேசினார். ''ஸ்டாலின், நீ செய்த படுகொலைகள் என் உள்ளத்தை நடுக்குகின்றன. நீ பரமபிதாவை மறந்தாய். வேதத்தைத் துறந்தாய். ஏன்? விழித்தெழு; பிழை வருந்து; போர்க்கோலத்தை விடு. சுவர்க்க ராஜ்யத்திற்காகப் பாடுபடு. பரமபிதாவிற்கு உண்மையா யிரு; விண்ணரசு வருகிறது!'' என்றார். ''தாராளமாக வரட்டும். ஆனால் விண்ணரசில் எனக்குப் பாதி கொடுத்துவிடவேண்டும். அதிலுள்ள தங்கம் வெள்ளியெல்லாம் என் கைக்கு வந்துவிடவேண்டும். மற்றொரு நிபந்தனை சுவர்க்க ராஜ்யத்தில் எனது பொதுவுடைமை நிலைநாட்டவேண்டும்'' என்றான் ஸ்டாலின்.

''மௌனம் கலக நாஸ்தி'' அல்லவா? ஏசுநாதர் ஒன்றும் பேசாமல் தப்பிப்பிழைத்து ஒரு ஆகாயக் கப்பலில் ஸ்விட்ஸர்லாந்து வழியாக பிரான்ஸிற்கு வந்தார். அங்கே மழினோ (மஜினட்) பாதாளக் கோட்டையினின்று புற்றீசல்கள்போலே விமானங்களும் வீரர்படையும் புறப்பட்டன. ஸீக்ஃப்ரீட் கோட்டையிலிருந்து ஜெர்மன் விமானங்கள் புறப்பட்டன. இரண்டிற்கும் இடையே பொதுநிலத்தில் வெடிகுண்டு வீச்சுகள் நடந்தன. பிணமலைகள் குவிந்தன. ''ஐயோ பரமபிதாவே'' என்றலறிக்கொண்டு ஏசுநாதர் பால்டிக் பிரதேசம் சென்றார். அங்கே பெரிய பெரிய கப்பல்கள் பாதாள யாத்திரை செய்துகொண்டிருந்தன. கடலில் மனிதர் மூழ்கி யிறந்தனர். டார்பிடோக்களும், மைன்களும் செய்யும் அட்டூழியங்களைக் கண்டு நடுங்கினார் கர்த்தர்.

பிறகு இங்கிலாந்து சென்றார். அங்கே விமானம் சுடும் பீரங்கிகளையும், போர்க்கப்பல்களையும், வெடி மருந்துக் குவியல்களையும் வீரப்படைகளின் பயிற்சிகளையும் பார்த்தார். அதன்பின் "போர்க்கொலை வேண்டாம்; எல்லாரும் பரம பிதாவின் பிள்ளைகள். எல்லாரும் ஒரு குலம் போல வாழுங்கள்! சமாதானத்தை நிலை நாட்டுங்கள்! சுவர்க்க ராஜ்யம் வரும்!" என்று அச்சிட்டு ஆகாய விமானத்திலிருந்து எராளமான துண்டுப் பிரசுரங்களை ஐரோப்பாவெங்கும் பரப்பினார். பகைவர் அதை யாரும் தொடக்கூடாதென்று வல்லரசர் கண்டிப்புச் செய்தனர். "டாம் இட்! சுவர்க்க ராஜ்யமாம், பிதாவாம்! என் ராஜ்யம் ஒன்றே வரவேண்டும்; நான் ஒருவனே அதை ஆள வேண்டும்" என்றனர் போர் முதல்வர்.

ஐரோப்பா புளித்தது; அமெரிக்கா சென்றார் எசுநாதர். அங்கே தொழிற்சாலைகளெல்லாம் வெகு சுறுசுறுப்பாக இருந்தன. கோடிக்கணக்கான புதுப் பொருள்கள் எற்றுமதியாயின. "கிண் கிண்" என்று பணம் குவிந்த வண்ணமாயிருந்தது. எல்லாம் போர்ப் பேய்க்குத் தீனிபோடும் வேலைதான் அங்கும். ஹாலிவுட் சென்றார் எசுநாதர். அங்கே எராளமான ஒலிப் படங்களைப் பார்த்தார். அவற்றால் மனித சமுதாயம் எவ்வளவு மாயத்தில் மூழ்கி யிருக்கிறதென்று நன்கறிந்தார். அதைவிட்டுச் சைனா வந்தார். சீனா ஜப்பான் யுத்தம் கண்டு கண்ணீர் வடித்தார். எங்கும் அனாதைகளின் அழுகை, பிணக்கும்பல், குண்டுப்புகை, விமானக் கூட்டங்கள்! தம் சமாதான விளம்பரங்கள் சிலவற்றை தோகியோவில் தூவிவிட்டு இந்தியாவிற்கு வந்தார். "ஆ எவ்வளவு சாந்தமான தேசம். இங்கேதான் சுவர்க்க ராஜ்யத்தை ஸ்தாபிக்க வேண்டும்" என்றார். பாரததேவி எதிரே தோன்றினாள். அவள் கை கட்டுண்டிருந்தது. அவள் மைந்தர் வறுமையால் வாடினர். சுற்றிலும் காவல்.

அம்மா உன் கதியும் இப்படியா! என்று நடுநடுங்கி மற்றொரு முறை தாம் சிலுவை எறிய இடத்தைப் பார்க்க ஓடினார் எசுநாதர். அதற்குள் எங்கே பார்த்தாலும் ஆகாச குண்டுகளும், புகைகளும், டாங்குகளின் அட்டூழியங்களும் பயங்கரமான காட்சியளித்தன. குடல்கலங்கிப் போய்த் "தற்கொலை, தற்கொலை!" என்று கதறிக்கொண்டு வந்த இடத்திற்கே ஓடினார் திருக்குமாரர்.

இவையெல்லாம் கெப்ரியல் எழுதிப் பரம பிதாவிற்குத் தந்த குறிப்புகளாகும்.

4

தேவதூதர்களெல்லாம் ஜனவரிப் பண்டிகையை வெகு விமரிசையாக நடத்துகின்றனர். இரத்தின சிம்மாசனத்தில் பரமபிதா வீற்றிருக்கிறார். தேவர்கள் பூமாரி பொழிகின்றனர்; பாடுகின்றனர்; சுவிசேடம் ஓதுகின்றனர்; ஆனந்தக் கூத்தாடுகின்றனர். "திருக்குமாரன் நல்ல செய்திகொண்டு வருவான். நிச்சயமாக சுவர்க்க ராஜ்யம் நிலைநாட்டுவோம். அடுத்த வருஷம் முகாம் பூலோகத்தில்," என்ற நிச்சயத்துடன் இந்த வருஷப் பண்டிகையை அமோகமாக நடத்துகின்றனர்.

"ஹா, ஐயோ, பரமபிதாவே!" என்ற அபயக் குரல் கேட்டது. பரமபிதா திரும்பிப் பார்த்தார். "தற்கொலை! தற்கொலை!" என்று திருக்குமாரர் அலறியடித்து வந்து காலில் விழுந்தார். இரத்தக் கண்ணீர் வடிகிறது. நாக்கு பேசமுடியாது தழுதழுக்கிறது. ஆட்டம் பாட்டம் கொண்டாட்டமெல்லாம் அத்துடன் நின்றன. தேவதைகளெல்லாம் திருக்குமாரன் நிலைமையைப் பார்த்துத் தாமும் அழத்தொடங்கினர். பிதா மகனைத் தூக்கிக் கட்டியணைத்து ஆறுதல் கூறி, 'மகனே, என்? அழுகிறாய்? யாராவது சிலுவையேற்றினார்களா? என்ன செய்தி?' என்று பரிந்து வினவினார்.

5

எசுபகவான் தேம்பித் தேம்பித் துக்கம் பொறுக்க மாட்டாமல் முறையிட்டார்:—"பரம பிதாவே, தாங்கள் பரமண்டலத்தில் இருந்து கொண்டு சுவர்க்க ராஜ்யத்திற்காக யோசனை செய்கிறீர்கள். பூலோகத்தில் தலைகாட்ட முடியவில்லை. முன்னே, எனது உடல் ஒரு சிலுவை எறியது. இப்போது என் மனம் 15,000 கோடிச் சிலுவையில் எறியிருக்கிறது. ஐயோ, பிதாவே, நான் பின்னே விரட்டிய சாத்தான் என் பின்னாலேயே ஒளிந்துபோய், உலகத்தில் கலகம் செய்கிறான். நான் முன்னே செய்த உபதேசங்களெல்லாம் அழகான தங்க முலாம் பூசிய புத்தகங்களாகவே யிருக்கின்றன. வெடிகுண்டுகளும் புகைக் குண்டுகளுமே அனுஷ்டானத்தில் இருக்கின்றன. ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தையும் காட்டும் பொறுமையை நானே, முள்முடி பூண்டு பரிசியரிடமும் சதுசயரிடமும் அடிபட்டுச் சிலுவையேறி நடந்து காட்டினேன். ஐயோ, எனது இரத்தத் துளிகளெல்லாம் மண்ணாய்ப் போயின. நாட்டுக்கு நாடு, மலைமலையாக வெடிகுண்டுகளைக் குவித்திருக்கிறது. பீரங்கிக்கோட்டை கட்டியிருக்கிறது. பூலோகத்தில் தான் இரத்த வெள்ளமும் வெடிகுண்டுப் புகையும் என்றால் அந்தரத்திலும் ஆகாசக் கப்பல்கள்! பஞ்ச பூதங்களும் அலறித் தவிக்கின்றன. கடலில் திமிங்கிலம் போன்று கப்பல்கள்! கடலுக்கு மேலே மிதக்கும் கப்பலைக் கவிழ்க்கக் கடலுக்கு அடியே செல்லும் கப்பல்கள்! தரையில் பீரங்கிப் படைகள்; பதின்மூன்று மைலில் இருக்கும் ஒரு ஊரைக் குறிவைத்து அடித்து நிர்தூளியாக்கும் இந்த பீரங்கிகளைக் கண்டு விலவிலத்துப் போனேன். முன்னேயெல்லாம் வீரர்கள் தேக பலத்தாலும் சௌரியத்தாலும் தர்ம யுத்தம் செய்தனர். இப்போது, ஒரு யந்திரத்தைப் பிடித்துத் திருகினால் ஆயிரக்கணக்கான பேர் ஹதம். பிதாவே, இந்த யந்திரம் செய்யும் மாயங்களை என்னென்பேன்! நூறு பேர் செய்யும் வேலையை ஒரு யந்திரம் செய்துவிடுகிறது. அத்தனை பேரும் வேலையில்லாமல் திண்டாடுகிறார்கள். நூற்க, நெய்ய, உழ, அரைக்க, இடிக்க, நடக்க, ஓட, பாட, நடிக்க, சமைக்க யந்திரம். சாப்பிடக்கூட யந்திரம் வந்துவிடும் போலிருக்கிறது. இதெல்லாம் போனாலும் போகட்டுமென்றால், ஆயிரக்கணக்காக ஆட்களைக்கொன்று குவிக்க அபாயமான யந்திரங்கள் இரத்த வெறிகொண்ட கரும்பூதங்கள் மாதிரி எங்கும் கிளம்புகின்றன. தரையிலும் தண்ணிலுந் தான்

இந்த அபாயமென்றால் ஆகாயத்திற்கும் வந்து விட்டது கேடு. காற்றும் ஒளியும் கூட அடைபட்டுப் போய்விடும் போலிருக்கிறது. மெல்ல மெல்ல ஆகாசக் கப்பலில் ஏறி நமது பரமண்டலத்தையும் முற்றுகை போட்டு விடுவார்கள் போலிருக்கிறதே. பிதாவே! எளியோர்களும், சாதுக்களும், பொறுமையாளரும், மனத்தூயர்களும் வாழ்க, அவர்களுக்கே சுவர்க்க ராஜ்யம் என்று முன்னே சொன்னேன். பறவைகளைப்பாருங்கள். பரமபிதா அவைகளை ஊட்டுகிறார். அல்லிகளுக்கு எவ்வளவு நேர்த்தியான ஆடைகள் கொடுத்திருக்கிறார். பாவிகளே, அக்ரமம் செய்யாதீர்கள், பிறர் பொருளைக் கொள்ளையடிக்காதீர்கள். விபசாரம் செய்யாதீர்கள். ஒருவர்க்கொருவர் மனஸ்தாபத்தால் சண்டையிடாதீர்கள். அன்பாயிருங்கள், பல்லையுடைத்தாலும் பெற்றுக்கொண்டு பொறுமையா யிருங்கள் என்றெல்லாம் பாடிப்பாடிச் சொன்னேன். இப்போதும் இரண்டு அச்சுப் புத்தகங்களாக என் உபதேசத்தை உலகிற்கீந்தேன். பயனில்லை. உபதேசமெல்லாம் பரலோகத்திற்கே திரும்பி வந்துவிட்டது. குடி, கொலை, பகற்கொள்ளை, வெறி, காமக்கொலை, வறுமை, மடமைப்பேய் இவை உலகைப் பிடித்தாட்டுகின்றன. பிதாவே, சாதுவான நாடுகள் படும்பாட்டைப் பார்த்தேன். ஐயோ, போர் வெறியர் அங்கே பொழிந்த குண்டு மழையும், பெருகிய இரத்த வெள்ளமும் நினைத்தால் உடல் நடுங்குகிறது! அத்தனை இரத்தமும், எனது கண்ணீர்! எனது சமயத்தைத் தழுவிய ஒரு நாடு, எனது அன்பான மற்றொரு நாட்டினரை மலை மலையாகக் கொன்று குவிப்பதைக் கண்டு என் மனம் படுந்துயருக்கு எல்லையில்லை. ஐரோப்பாவில் நடக்கும் போரைக்கண்டு விம்மி யழுதேன். ரஷ்யாவில் கோயில்கள் நிர்மூலம்! வேதபுத்தகம் சொக்கப்பானை! ஜெர்மனியில் அண்ட முடியவில்லை—குண்டு, பீரங்கி, ஆகாசப்படை, தரைப்படை, தண்படை. ஆசியாவிற்கு வந்தேன், டம் டமார்! டம்டமடமார்! என்றது சைனாவில்! ஜப்பான் மண்வெறி பிடித்து சீனரைக் கொன்று குவிக்கிறது! கிழக்கும் மேற்கும் இரத்தக் களம்! "பாவிகளா, பாம்புகளா, இதெல்லாம் எதற்கு? ஐயோ, இந்த அபாயமான படைக்கலங்களைக் கடலில் போட்டுவிடுங்கள்! யந்திரங்களை அனாவசியமாகப் பெருக்காதீர்கள்! பலபேருக்கு உழைப்பும் பிழைப்பும் பெருகும்படி கைத்தொழில்களால் முன்னேறுங்கள்! தங்கள் தங்கள் நாட்டை நீதி முறைப்படி பரிபாலித்துக் கொண்டு அன்யோன்யமா யிருங்கள்!" என்று இரண்டுமூன்று பேரிடம் ராஜதந்திரி போலச் சென்று இதோபதேசம் செய்து பார்த்தேன். "நீ யாரடா, என் பீரங்கிப் பக்கம் வந்தால் ஆள் சாம்பல். கபர்தார்!" என்றனர். கிழக்கே ஓடினேன். பிதாவே! ஞானபூமியாகிய பாரத தேசம் படும் பாட்டை என்னென்றுரைப்பேன்! இரண்டு கைகளும் கட்டுண்டு, வாய்ப்பூட்டுடன் நிற்கும் அந்த தர்ம தேவதையைக் கண்டு மனம் வெடித்தது. "அம்மையே, வேதம், உபநிஷதம், கீதை, திருக்குறள் முதலிய புண்ணிய வாக்குகளை உலகிற்குக் கொடுத்த நீயும் இவ்வாறு கொடுமையால் வருந்தும்படி உலகம் அவ்வளவு அதர்மக் காடாகி விட்டதே!" என்று ஏங்கினேன். அடிமை, வறுமை, மடமையிருளால் வாடி வதங்கிய தனது பிள்ளைகளைக் காட்டித் தனது கட்டுண்ட கையையும் வானை நோக்கி உயர்த்தினாள் அன்னை. குறிப்பறிந்தேன். பரமபிதாவே, புண்ணிய பூமியான பாரததேசமே உலகின் ஞானச்சுடர். அச்சுடரைத் தடித்தமேகங்கள் மறைத்துக் கொண்டுள்ளன. அவற்றை விலக்கத் தமது திருவருளைத் தாரும். பாரத சக்திக்கதிர் சுதந்தரமாக எழுந்தால்தான், ஆத்மஞானம் உலகில் பரவும். அன்பு தளிர்க்கும். சகோதரத்வம் நிலைபெறும். ஒற்றுமை விளங்கும். போரும், போட்டி பொறாமைகளும் ஒழியும். உண்மையும், அறிவும் இன்பமும் நிலவும். தமது திருக்கருணையால் பாரததேவியைக் காப்பாற்றும் ஆண்டவரே! பிறகு சுவர்க்க ராஜ்யத்தை நிலை நாட்டலாம். தடையில்லை. மற்றொரு முறை மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன், பரமபிதாவே, பாரத தேவியின் கட்டை அவிழ்த்து, மனக்கவலை தீரும். பிறகுதான் சாத்தான் ஒழிவான், சத்தியம் விளங்கும். விண்ணரசு விளங்கும். இதுதான் நான் பூலோகத்தில் கண்டறிந்தது. மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் உண்மையைத் திருச்சந்நிதானத்தில் விண்ணப்பித்துக் கொண்டேன். தேவரீர் இச்சை நடக்கட்டும். ஏழைகளுக்கு உழைப்பும், உணவுடையும் தாராளமாகக் கிடைக்கட்டும். ஏகாதிபத்திய வெறிகள் ஒழியட்டும். எல்லாரும் அன்யோன்யமாய் ஒரு தந்தையின் பிள்ளைகள் போல வாழட்டும். அப்பனே, அருள்புரி' என்று ஏசுநாதர் கடவுளின் காலைப்பிடித்துக் கொண்டார். தேவதூதர்களெல்லாம் 'ததாஸ்து' என்றனர். பரமபிதா திகைத்துப் போனார். ஆழ்ந்த யோசனையில் மூழ்கினார். இந்த வருஷம் என்ன முடிவு செய்திருக்கிறாரோ தெரியவில்லை. அடுத்த ஜனவரிப் பண்டிகைக்குக் கடவுளின் தீர்மானத்தை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

---

# பாரத சக்தி மஹாகாவியம்

(சுவாமி சுத்தானந்த பாரதியார்)

## 3. அருட்குலப் படலம்

### பிரகலாதன்

நஞ்சும் வேழமு நாத்திகக் கொடுமையுங் கொண்டே
அஞ்சு வெஞ்சினக் கனகன்செய் இடர்களை அஞ்சான்
தஞ்ச மென்றரி நாமமே தளர்வறப் புகன்றான்
பிஞ்சி ளம்பிரக லாதனின் பெருமையைப் புகழ்வாம்.

அருட்குல மைந்தரில் ஒருவன் பிரகலாதன். அவன் பிஞ்சிளம் சிறுவன்; என்றாலும், நாராயணன் நாமத்தையே எப்போதும் சொல்லி அன்பு செய்தான். நாத்திகனாகிய தந்தை இரணியனுக்கு அந்தப் பேரைக் கேட்டால் ஆகாது. 'சொல்லாதே' என்றால் மகன் கேட்கவில்லை. இரணியன் சினந்தான். நஞ்சுச் சோறூட்டினான். மலையானையை விட்டு மிதிக்கச் செய்தான். மலையிலிருந்து உருட்டினான். இன்னும் தனது நாத்திகத் திமிரால் என்னென்ன கொடுமை செய்ய முடியுமோ அத்தனையும் செய்தான். பிரகலாதன் மனச்சோர்வில்லாமல் ஹரிநாமத்தையே சொல்லி எல்லா இடர்களையும் தாண்டினான். 'கடவுள் தூணிலும் துரும்பிலும் இருக்கிறார்' என்றான். ஒரு தூணை உதைக்கவே, அதனின்று நரசிங்க வடிவாக வந்து நாராயணன் அரக்கனைப் பிளந்தான்; அன்பனைக் காத்தான். பிரகலாதன் பெருமையைப் போற்றுவோம். ருசு

### இராமபிரான்

வேத வேள்வியும் வரங்களும் வேந்தனும் செருக்கும்
மாத ராசையால் இழந்தனன் மதியிலி யரக்கன்
பாத கத்தலை பத்தையும் ஒருகணை யாலே
தீத றக்கொய்த தீரனும் இராமனைப் பணிவாம்.

இராவணன் வேதவித்து, வேள்விகள் பல செய்தவன், சிவனிடம் சந்திரகாசவாளும், நீண்ட ஆயுளும் வரமாகப் பெற்றவன். பெண்ணாசையால் இராமன் மனைவி சீதையைக் கவர்ந்து சிறை வைத்தான். நல்ல அறிவாளி அந்தணனாகிய இலங்கையர்கோன், மதிகெட்டான். காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மச்சரம், இடம்பம், ஈர்ஷை, தர்ப்பம், மதம் ஆகிய பத்துத் தீய குணங்களும் நிறைந்த அவனது பத்துத் தலைகளையும் ஒரே கணையால் பறித்து வீழ்த்தி அரக்கர் குலத்தையும் அழித்து, அவர்களால் உலகம் வருந்திய தீமைகளைத் தீர்த்தான் இராமபிரான். அவனை வணங்குவாம்.

### இராமன், இலக்குமணன், சீதை

யார்தம் அன்னைகை அரணியம் பணிவுடன் ஏற்றார்
யார் தலைவனை அத்தனை அன்புறத் தொடர்ந்தார்
யார் இமைப்பறு பணியுடன் அண்ணலைக் காத்தார்
யார் இராமனும் சீதையும், இளவலும் அனையார்?

தசரதன் மகனைக் காட்டிற்கனுப்பச் சகியாமல் மயங்கி வீழ்ந்தான். "ஐய! தந்தையின் கட்டளை இது" என்று கைகேயி சொன்னாள். "தந்தையின் கட்டளையில்லாவிட்டாலும் தாயாகிய உன்சொல் தட்டுவேனோ?" என்று இராமன் காட்டுக்குச் சென்றான். யார் இராமனுக்கிணை? இராமனே. அரண்மனைச் சுகத்தைத் துரும்

பென நினைத்துத் தானும் மரவுரி யணிந்து சீதை, கணவனுடன் காட்டிற்குப் புறப்பட்டாள். கணவனன்பே உயிரென மதித்தாள். இராவணன் சிறைவைத்த அசோகவனத்திலும் சத்தியாக்கிரகம் இருந்து, பதி பக்தியே செய்தாள், கற்பைக் காத்தாள். சீதைக் கிணை யார்? அவளே. இலக்குமணன் இராமனுடன் வனஞ்சென்று உறக்கத்தையும் வெறுத்து அண்ணல் பணியைச் செய்தான். போர்க்களத்தில் அண்ணனுக்குத் துணைநின்று அறம் வெற்றிபெறச் செய்தான். தம்பி இலக்குமணனுக்கு இணையார்? அவனுக்கிணை அவனே. ௫௮

## பரதன்

அண்ண லற்றமன் அரசினை அரசெனப் புரவான்
புண்ணியன் றிருப் பாதுகை பூமுடி யணிந்தான்
மண்ணி னின்பத்தை மதித்திலன் வாய்மையன் பிணையே
கண்ணிற் போற்றிய பரதனைக் கருத்தினி லணிவாம்.

இராமன் அரசைப் பரதன் ஆள விடுத்தான். பரதன் "எனது அண்ணலே அரசிற் குரியான். அவன் அரியணையில் நான் அரசனென்றிருந்து அயோத்தியாள மாட்டேன்" என்று இராமனைக் கூட்டிவரக் காட்டிற்குச் சென்றான். புண்ணிய புருஷனாகிய இராமன் அணிந்த பாதுகையைப் பூமுடியில் சுமந்து வந்து, அதையே அரியணைமேல் வைத்து இராம பாதசேவையாகவே அரசைப் பாதுகாத்தான். உலகின்பத்தை இன்பமென்று மதிக்காமல், இராமனன்பையே கண் போலப் போற்றினான். அத்தகைய பரதனை நமது கருத்தில் அணைந்து, நாமும் எல்லாரிடமும் சகோதர நேயத்துடன் நடப்போமாக. ௫௯

## அனுமன்

ஆசை மாக்கடல் கடந்தனன் அச்சுதன் பணிக்கே
ஓசை மாக்கடல் கடந்தனன் அரக்கரை யொறுக்கப்
பூசன் மாக்கடல் கடந்தனன்; பொருவரு வீரா
வேச மாக்கட லானவன் வெற்றிமா ருதியே!

அனுமான் வீராவேசக்கடல்போன்றவன். எக்காரியத்தையும் வெல்லும் தீரன்; ஒப்பற்ற திராவிட வீரன். அவன் பிரமசரியம் காத்து ஆசையென்னும் பெரிய கடலைத் தாண்டினான்; சீதையைத் தேடும் பணியை அச்சுதனாகிய இராமனிடம் ஏற்றான்; அப்பணியை நிறைவேற்றவே திரையெழுந்தொலிக்கும் பெரிய கடலைத் தாண்டி இலங்கை சேர்ந்து சீதையைக் கண்டு, கணையாழி கொடுத்தான்; பிறகு அரக்கரை எதிர்த்துப் போராடிப் பெரிய இரத்தக் கடலைக் கடந்தான். அவனுக்குச் சமானமான வீரரில்லை. அனுமான் வாழ்க! ௬0

## கண்ணன்

ஊதினான் குழல் உயிர்களின் உளத்தினைக் கவர்ந்தான்
கோதி லார்தமைக் காத்தனன் கொடியரைக் குமைத்தான்
ஆதி பாரத மாக்கினன் அறத்தினை வளர்த்தான்
கீதையீந்தனன் கிருட்டினன் அருட்டிறம் புகழ்வாம்!

கிருஷ்ண பகவான் கோகுலத்தில் பூங்குழல் ஊதி, கோபிமார், பசு பட்சிகள் ஆகிய எல்லா உயிர்களின் உள்ளத்தையும் தன்பாலிழுத்துப் பேரின்பமளித்தான். கோபாலரையும் பாண்டவரையும் போன்ற குற்றமற்ற அன்பரை, அரக்கர் கொடுமையினின்றும் காத்தான். பூதகி, சகடன், தேனுகன், அகாசுரன், பகாசுரன், கம்ஸன், துரியோதனாதிகள் போன்ற கொடியரை நலித்தான். ஆதி பாரதப்போரை உண்டாக்கினான். விஜயனை நிமித்த மாத்திரமாகக் கொண்டு துரியோதனக் கும்பலை வீழ்த்தி, அறத்தை நிலைநிறுத்தி வளர்த்தான். அந்த அறத்தை விளக்கும் பகவத் கீதையை உலகிற்குத் தந்தான். இத்தகைய கிருஷ்ண பகவானுடைய அருள் திறமையைப் புகழ்ந்து போற்றுவோம். ௬௧

## பாண்டவர்

சூதி னூற்புவி கவர்ந்தனன் சொற்கட வாத
கோதை யைத்துயில் உரிந்தனன் அரவுயர் கொடியோன்
பாத கத்துயர் அனைத்தையும் பரிவினுற் பொறுத்தார்
மாத வன்பத மலர்தொழும் பாண்டவர் வாழ்க!

பாம்புக்கொடி உயர்த்திய துரியோதனன் அறவோரான பாண்டவரை, அரக்கு மாளிகையில் வைத்து எரிக்க முயன்ருன்; சகுனியைக்கொண்டு மாயச் சூதாடி அவர் நாட்டைப் பறித்துக் கொண்டான்; கணவர் சொல்லைத் தாண்டாத கற்பரசியான பாஞ்சாலியைக் கூந்தல் பற்றி யிழுத்துவரச் சொல்லித் தம்பி துச்சாதனனைக்கொண்டு துயிலுரிந்தான்; தரும புத்திரரைக் காட்டிற்கு விரட்டி, அங்கும் கொடுமைசெய்தான். ஆசை, பொருமை, மமதை என்னும் பாதகக் குணங்களால் அவன் செய்த இடர்களையெல்லாம் பாண்டவர் பொறுத்தனர். எதனுல்? துரியோதனனை நசுக்கியெறிய வில்லும் கதையும் வீரமும் உண்டு; என்ருலும் அவர் உள்ளம் கருணையும் பரிவும் நிறைந்தது. 'அதருமம் வீழும் தருமம் வெல்லும்' என்று நம்பினர்கள். எல்லாம் வல்ல பரந்தாமன் பதமலரையே பற்றி வணங்கினர். இறுதியில் வென்றனர். பாண்டவர் வாழ்க. கூஉ

## விசயன்

நல்ல றம்பொறை தாங்கிய தருமனுக் கிளையோன்
கொல்ல றங்கொண்ட கும்பலைக் குமைத்திடக் கண்ணன்
சொல்ல றத்துடன் சிவனருள் சுடர்கணை தாங்கும்
வில்ல றத்தினன் விசயனின் வீரத்தைப் புகழ்வாம்.

தருமன் உத்தமமான சத்திய தருமத்தையும் சாந்தப் பொறுமையையும் கடைப்பிடித்தவன். அவனுக்கு இளைய தம்பி விசயன் தனக்கொவ்வாத நல்லோரைப் படைச் செருக்கினுலும் வஞ்சகச் சூழ்ச்சிகளாலும் கொன்றழிப்பதே அறமாகக் கொண்ட சுயோதனக் கும்பலை அழிக்க, கண்ணன் சொல்லிய கீதை வழி நின்று, அத்துடன் சிவன் அருளிய தவச்சுடர் மிக்க பாசுபதாஸ்திரமும் தாங்கினுன். வில்லறத்தினுல் அறப் போர் புரிந்து அதர்மத்தை வீழ்த்திய அந்த விசயனின் வீரத்தைப் புகழ்ந்து அத்தகைய வீரராக நிற்போம். கூ௩

## பெண் சக்தி

தணலும் கற்பினுற் சானகி யிலங்கையைச் சுட்டாள்
குணமிலார் கெடத் திரௌபதி குறுநகை புரிந்தாள்
அணங்கு பார்வதி, தவத்தினுல் அரனுட னமர்ந்தாள்
வணங்குவோம் இவர் மலரடி சக்திஓம் எனவே.

ஞானஜனகன் மகளும் வீரராமன் மனைவியுமான சீதை அசோகவனத்தில் சத்தியாக்கிரக மிருந்தாள். அவளுடைய கற்புக்கனலே இலங்கைப் போரைத் தூண்டி, அரக்கரை அழித்தது; தருமபுத்திரர் இந்திரப்பிரஸ்த மாளிகையில் ராஜஸூய யாகம் நடத்தினர். துரியோதனனும் சகுனியும் மாளிகையின் வழுவழுப்புத் தரையில் மயங்கி வழி தடுமாறினர். பாஞ்சாலி, 'வாழ்விலும் இப்படியே இவன் மேடுபள்ளம் தெரியாமல் நடக்கிருன்' என்றுதான் சிரித்தாள். அச் சிரிப்பே சூதாட்டம், துயிலுரிதல், வனவாசம், அஞ்ஞாதவாசம், கண்ணன் தூது, பாரதப்போர், கௌரவர்நாசம், தருமபுத்திரர் வெற்றி ஆகிய சம்பவங்களாக வளர்ந்தது. பார்வதிதேவியானவள் கடுந்தவம் புரிந்து சிவனையே மணுளனுகப் பெற்று அவனுடன் ஒன்ருய் அமர்ந்தாள். சீதை கற்பனல், பாஞ்சாலி வீரக்கனல், பார்வதி தவக்கனல்; இந்த மூன்று பாரத குமாரிகளையும் 'ஓம் சக்தி' யென்று நாம் வணங்குவோமாக. கூ௪

# உதிர்ந்த மலர்கள்

(மொழிபெயர்ப்பு : ஸ்ரீ வி. ஆர். எம். செட்டியார், பி. ஏ.)

படிக்கும் தன்மை நிறைந்த புத்தகம், படிப்பவர்களின் மனதைக் கவர்ந்து ரம்மியப் படுத்தும் குணம் உள்ளது. கனவிலும் மறவா வண்ணம் ஆழ்ந்த ருசிகரமான கருத்துக்களை வெளியிட்டு இன்பம் தூண்டும் தன்மையுள்ளது. அந்தப் புத்தகத்தில் அடங்கியுள்ள வார்த்தைகள், அலைகள் கரையில் மோதி சங்கீதம் விளைவிப்பது போல், நாத கீதம் பாடும் தன்மை கொண்டுள்ளன. புத்தகத்தில் உள்ள கதைகள், பல வர்ணப் படங்கள் போல் நேரில் பேசும் ஆற்றல் வாய்ந்த கண் நிறைந்த ஒளியுருவங்கள்.

—ஆர். யல். ஸ்டீவன்சன்.

உரத்த சிரிப்பு ஆழ்ந்த துக்கத்தில் முடியும். சகல துன்பங்களும் முக வசீகரத்துடன் ஆரம்பித்து விஷமான துன்பத்திலே முடிவது உலக இயல்பு.

—ஜெரமி டெய்லர்.

கண்ணீரும் சிரிப்பும் நல்ல காரியத்திற்கே கடவுள் சிருஷ்டித்திருக்கின்றார். சந்தோஷத்தை விளக்கச் சிரிப்பதுபோல், துக்கத்தைக் கண்ணீர் பொறுமையுடன் வெளி விடுகின்றது. துக்கம் பைத்தியமாய் மாறாமல், கண்ணீர் காக்கின்றது.

—லீ ஹண்டு.

சந்தோஷத்தாலேயே மனிதனின் தன்மையைப் பூராவும் அறிகின்றோம். பிறரை வீணாகத் துதிக்கும் சிரிப்பு; பனிக்கட்டியின் குளிர்ந்த உணர்ச்சியற்ற கொடிய புன்முறுவல்; கசடான கம்பளிச் சிரிப்பு. உண்மையாய் உணர்ச்சியுடன் சிரிக்கச் சக்தியற்றவன், கொள்ளையும் கொலையும் புரியும் சண்டாளனாகின்றான். அவனுடைய வாழ்க்கையே மித்திரபேதம், சூழ்ச்சி.

—கார்லைல்.

கவியின் கண் சுழன்று சுழன்று புவியினின்று விண்ணை நோக்கியும் விண்ணினின்று மண்ணை நோக்கியும், கற்பனையின் சக்தியால் உருவங்கள் கவியின்பேனா முனையில் குவிந்து பேரும் ஊரும் பெற்று விளங்குகின்றன. —ஷேக்ஸ்பியர்.

சங்கீதம், சந்திரிகை, உணர்ச்சி—இம்மூன்றும் ஒரே சக்தியே. —ஷெல்லி.

காதல் வாழ்க்கையின் ஒளியும், கிரணமும்; முடிவற்ற காதலில் நமது ஜீவன் மூழ்கிக் கிடக்கின்றது.

—லார்டு ஆவ்பரி.

சுகநல மற்ற உடல் சுமையே; நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம், நிறைந்த ஆனந்தம்.

—லாங் பெல்லோ.

பூமியோடு பேசு, அது உனக்கு உண்மை அறிவிக்கும். —ஜாப்.

மரத்திலே சொல்லும், ஓடையிலே புத்தகமும், கல்லிலே குரலும், எதிலும் நன்மையே விளங்கும் காட்டினிலே. —ஷேக்ஸ்பியர்.

உன் உணர்ச்சியால் உலகம் திருந்த வழியுண்டு. சூரியன் அஸ்தமித்தல், அழகு நிறைந்த சங்கீதம் ததும்பிவரும் கானம், ஏழைக்கு இரங்கித் துணைபுரிதல்—, இத்தகைய ஆத்மார்த்தமான ஆனந்தத்தில் நமது இளமையைச் செலவிட வேண்டும். வயது முதிர்ந்தால், துன்பம் இன்பத்தைப் போக்கிவிடும்.

—ஏனர்ஸ்ட் டூர்ணர் ஆலன்.

இயற்கை இன்ப மயம். கொடிய காட்டில் கானப்பட்சி அணியாய் விளங்கி நிற்கின்றது. கானப்பட்சியற்ற காடு கொடிய விலங்கு நிறைந்த காடு. பட்சி பாடி வனாந்தரத்தின் கொடிய குணத்தை மாற்றுவதுபோல், உலகத்தில் உள்ள துன்பத்தை நம்முடைய செயல்களால் மாற்றி இன்பத்தைப் பரப்பவேண்டும். வாழ்க்கையில் உள்ள இருளை விலக்க முயற்சிக்க வேண்டும். அழகுக்கும் ஒற்றுமைக்கும் தூண்டும் துணையாய் விளங்க வேண்டும்.

—விக்டர் ஹ்யூகோ.

சாந்தம், சகல நற்செயல்களுக்கும் அடிப்படை. —கன்பியுஷியஸ்.

தான், நான் என்ற சுயநலம் நிறைந்த வில்லங்கமான தளையை முறித்திட வேண்டும்.

பி. யப். எட்ஜெட்.

சந்தையில் துக்கப்படுவதை விட, அதை மறக்கப் பாடுவது நலம். —ஓர் வேதாந்தி.

கவிதாசன்னதத்தைக் காத்துக் கடவுளுடைய நிறைந்த ஜோதியை மறையாமல் போற்றுவதே கவியின் கீதம். —பி. பி. ஷெல்லி.

கற்பனை

# எங்கள் பங்களா

(ஸ்ரீ. ஸி ஏ. அய்யாமுத்து)

உதகமண்டலத்தில் எங்களுக்கொரு நேர்த்தியான பங்களா உண்டு. அது எங்கள் தந்தையின் காலத்தில் கட்டப்பட்டது. பங்களாவைச் சுற்றிலும் அழகிய நந்தவனமும், சிங்காரப் பூஞ்சோலையு முண்டு. உலகத்தில் உள்ள அற்புத மாஞ்செடிகள் அனைத்தையும் என் தந்தை வரவழைத்துப் பயிரிட்டிருந்தார். இவற்றைக் கண்ணுற்றிருந்தாலே பசியாறும். கோடை காலத்திலே நீலகிரிக்கு வருவோரனைவரும் எங்கள் பங்களாவையும், அதனைச் சுற்றியுள்ள பூங்காவையும் ஒரு காட்சிப் பொருளாக மதித்துத் தம்மக்கள் மனைவியர் குழாத்துடன் கண்டுகளித்துச் செல்வார்கள். இதனை அவ்வளவு நேர்த்தியாகப் பராமரித்து வந்தார் எங்கள் தந்தை. அவருடைய சித்தமறிந்து தொழில் செய்யும் ஒரு உத்தமத் தோட்டக்காரனும் தந்தைக்குத் துணையாக இருந்தான் ; ஏன், அவன் இப்போதுந்தான் இருக்கிறான். அவன் பெயர் மகாலிங்கம். அவனுக்கு எங்கள் தந்தை எங்கள் பங்களாவின் பின்புறத்தில் ஒரு சௌகரியமான வீடும் கட்டிக்கொடுத்திருக்கிறார். எங்கள் தந்தை காலகதியாகி இப்போது சில வருடங்களாகின்றன.

நாங்கள் சகோதரர்கள் நால்வர். மூத்தவர் ஐ. ஸி. எஸ். படித்துப் பெரிய உத்தியோகத்தி லிருக்கிறார். அதற்கடுத்தவர் ஒரு பிரபல வக்கீல். மூன்றாமவர் யாதொரு கவலையுமின்றிச் சுகமாகக் காலங்கழிப்பவர். சூரியன் உதயமாவது எப்போதென்பதையே அவர் அறியமாட்டார். இரவைப் பகலாகவும், பகலை இரவாகவும் கழிக்கும் லீலா விநோத புருஷர் அவர். நான் கடைக்குட்டி. சென்னையில் பச்சையப்பன் கல்லூரியில் வாசித்துக் கொண்டிருக்கையில் மகாத்மா தண்டி யாத்திரைக்குக் கிளம்பினார். அன்றே எனது வாழ்க்கையில் ஒரு புதிய சகாப்தம் தோன்றிற்று. இரண்டு வருஷங்கள் வேலூர் சிறையிலிருந்தேன். இப்போது சட்டசபை அங்கத்தினராகவும் இருந்து வருகிறேன். எங்கள் குடும்பத்து வேலையாட்கள் எல்லோரும் என்னை 'காந்தி எசமான்' என்று சொல்லுவார்கள்.

எங்களுக்கு ஏராளமான பூஸ்திதி உண்டெனச் சொல்லத் தேவையில்லை. எங்கள் அப்பா ரொக்கமாக யாதொன்றும் வைத்துவிட்டுப் போகவில்லை யானாலும், எங்களை நன்றாகப் படிக்கவைத்து நல்ல நிலைமையிலேயே விட்டு விட்டுப் போயிருக்கிறார். இன்றும் எங்கள் நிலைமைக்கோ அந்தஸ்துக்கோ யாதொரு குறைவுமில்லை. ஆனால் ஒரே ஒரு குறைதான் இருந்தது. எங்கள் சகோதரருள் ஒற்றுமை யென்பது கொஞ்சமும் கிடையாது. ஒருவர் முகத்தை யொருவர் ஏறிட்டுப் பார்ப்பதும் கிடையாது. மூத்த தமையன் பெல்லாரியில் இருக்கிறார். வக்கீல் தமையன் சென்னையில் இருக்கிறார். நானும் எனது நேர் மூத்த தமையனும் கோவையில் எங்கள் புராதன வீட்டில் ஆளுக்கொரு பாகத்தில் குடியிருந்து வருகிறோம். எப்போதாவது நான் உதகமண்டலத்துக்குச் சென்று சில நாள் தங்கி வருவது வழக்கம். ஆனால் கோடை விடுமுறையின் போது வருடாவருடம் நாங்கள் நால்வரும் உதகை சென்று எங்கள் பங்களாவில் தாமதிப்போம். எனினும் ஒருவரோடொருவர் பேச்சு வார்த்தைகள் என்பது மட்டும் கிடையாது.

எனக்குத் தோட்டவேலையில் வெகு பிரியம். உதகையில் தாமதிக்கும் காலத்தில் நானே என் கைப்பட கொத்தெடுத்து களைகள் வெட்டுவேன். வேலியில் வளர்ந்துள்ள செடி கொடிகளை ஒழுங்காகக் கத்தரித்து விடுவேன். புற்களை நேராகச் செதுக்கிச் சீர்ப்படுத்துவேன். எங்கள் தந்தை காலத்தில் வெகு சுறுசுறுப்பாக வேலைசெய்து வந்த மகாலிங்கம் இப்போது பெரிய சோம்பேறியாகிவிட்டான். எதையும் சீராகக் கவனித்துக் காலாகாலத்தில் செய்ய வேண்டியதைச் செய்வதில்லை. ஒரு ஆரஞ்சு மரம் வேரோடு பெயர்ந்து கீழே விழுந்து கிடந்தது. அதனை வெட்டி எடுத்து அப்புறப்படுத்துமாறு நான் அவனிடம் கூறி நாட்கள் பலவாயினும் அவன் அதைக் கவனிக்கவில்லை. இது எனக்குச் சிறிது கோபத்தை மூட்டிற்று. ஒருநாள் அவனிடம் கோபித்து அதனை அன்று சாயங்காலத்துக்குள் அப்புறப்படுத்தியாக வேண்டும் என்று கடுமையான கட்டளையும் பிறப்பித்துவிட்டு 'டென்னிஸ்' விளையாடச் சென்றுவிட்டேன்.

மறுநாள் காலை தோட்டத்தில் உலாவச் செல்கையில் அந்த ஆரஞ்சு மரம் விழுந்தது விழுந்தபடியே கிடந்தது. "மகாலிங்கம்! மகாலிங்கம்" என்று தொண்டை வெடிக்கக் கத்தினேன். பின்னர் அவன் இருக்குமிடந் தேடிச் சென்றேன். உல்லாசமாக ஒரு நாற்காலியில் சாய்ந்திருந்தான். என்னைக்கண்டு வழக்கம்போல் எழுந்து மரியாதையும் செய்யவில்லை. உடலை ஒரு சிறிதும் அசைக்காமலும், என்னைத் தலை நிமிர்ந்து பார்க்காமலும் ஏதோ ஆழ்ந்து சிந்தனை செய்பவன் போலவும், நான் வந்ததைக் கவனிக்காதது போலவும் வீற்றிருந்தான். "மகாலிங்கம்!" என்று கூப்பிட்டேன். உட்கார்ந்திருந்தபடியே என்னைத் திரும்பிப் பார்த்தான். "அந்த ஆரஞ்சு மரத்தை ஏன் அப்புறப்படுத்தவில்லை?" என்று உசாவினேன். "பெரிய எசமான் அது அங்கேயே கிடக்கட்டும் என்று சொல்லிவிட்டார். மற்றும் என்னுடைய விஷயத்தில் நீர் தலையிடக்கூடாதென்றும் சொல்லியிருக்கிறார். ஆதலால் உமது வேலையை நீர் கவனித்தால் போதும்" என்று கூசாமல் மளமளவெனப் பதிலளித்து விட்டான்.

மகாலிங்கம் கூறிய மொழிகள் என் நெஞ்சைப் பிளந்தன. அவ்வேதனை என்னால் தாங்க முடியவில்லை. என்ன செய்வதெனத் தெரியாது சிறிது நேரம் அங்குமிங்கும் உலாவினேன். துக்கத்தால் பெருமூச்சுக் கிளம்பிற்று, உதடுகள் விம்மின, கண்கள் கலங்கின. இப்படியும் என் தமையன் சொல்வாரா என்ற எண்ணம் என்னை மிகவும் வருத்தியது. கடைசியாக அங்கிருப்பதில் பயனில்லையென முடிவு செய்துகொண்டு, யாரிடமும் யாதொன்றும் தெரிவியாமல் புறப்பட்டுக் கோவைக்கு வந்து விட்டேன். நான் வந்த பின்னர் உதகையில் என்ன நடந்ததோ எனக்குத் தெரியாது. நாள் செல்லச்செல்ல இவ்விஷயம் மிகவும் அற்பமாகத் தோன்றியதால், அதை அறவே மறந்துவிட்டுக் கவலையற்றிருந்தேன்.

சரியாய் வருஷம் ஒன்றாயிற்று. உதகைக்கு நான் போகவே இல்லை. மறு மாதத்தில் கொடிய வெப்பம் தாங்கமுடியவில்லை. என் தமையன் மூவரும் உதகைக்குச் சென்று விட்டார்கள். "சரி நாமும் போவோம், தோட்டம் எக்கேடு கெட்டால் நமக்கென்ன?" என்ற முடிவோடு கிளம்பினேன். எங்கள் பங்களாவுக்குள் நுழைந்தேன். அது பூட்டிக் கிடந்தது. என் தமையன்மார்களையோ, அவர்களுடைய ஆள் அம்புகளையோ அங்கு காணோம். தோட்டமெங்கும் ஆடுமாடுகள் மேய்ந்துகொண்டிருந்தன. ஒரு பக்கம் பேரிக்காய்கள் மூட்டைகளில் கட்டப்பட்டுக் கிடந்தன. தோட்டத்தின் மற்றொரு மூலையிலிருந்து ஆட்களின் இரைச்சல் கேட்டது. அங்குச் சென்றேன். மகாலிங்கம் ஆரஞ்சுப் பழங்களை எண்ணி எண்ணிக் கூடைகளில் நிரப்பிக்கொண்டிருந்தான். அவற்றை வெளியில் எடுத்துச் செல்ல ஆட்கள் காத்திருந்தனர். நான் சென்றதை மகாலிங்கம் கவனிக்காதவன்போல் பழங்களை எண்ணிக்கொண்டிருந்தான். "மகாலிங்கம்! பங்களாவைத் திறந்து என் சாமான்களை என் அறைகளில் கொண்டுபோய் வை" என்றேன். மகாலிங்கம் தலை நிமிர்ந்து பார்த்தான். 'ஹ ஹ வாங்க, நீங்களா, காந்தி எசமான்' என்று ஒரு மாதிரி பரிகசிப்பதுபோல் ஆரம்பித்து, "நீங்க இங்கே வரப்படாதுன்னு பெரிய எசமான் உத்திரவுங்க" என்று சொல்லிவிட்டான். ஆம். அஞ்சாமல் அப்படிச் சொல்லி விட்டான். என் நெஞ்சம் பதை பதைத்தது.

என் பெட்டி படுக்கைகளோடு "ஊட்டி மாடர்ன் இந்து ஹோட்டலு"க்குச் சென்று ஒரு அறையை அமர்த்திக்கொண்டு வெகு தீவிரமாக யோசிக்கத் தொடங்கினேன். நிலைமை இவ்வளவு மோசமாகும் அளவுக்கு என் தமயனின் புத்தி கெட்டுவிட்டதே என்று என் மனம் வருந்தியது. உட்கார்ந்தபடியே ஜன்னல் வழியாக வெளியே நோக்கினேன். என் கண்களை என்னால் நம்பக்கூடவில்லை. நன்றாய்க் கவனித்துப் பார்த்தேன். சந்தேகமே இல்லை. எனது மூத்த தமையன்தான் அங்கே நின்று கொண்டிருந்தார். இவரேன் இங்கு வரவேண்டும்? என்ற அதிசயத்துடன் வெளியே 'வெராண்டாவு'க்கு வந்தேன். அந்தோ! அங்கே எனது இரண்டாவது தமையன் உலாவிக்கொண்டிருந்ததைக் காண எனது வியப்பு மேலும் அதிகமாயிற்று. சரி, சிற்றுண்டி அறையிற் சென்று சூடாக ஒரு கப் காபி குடிக்கலாமென்று உள் நுழைந்தேன். அங்கே எனது உல்லாச அண்ணன் காபி குடித்துக்கொண்டிருப்பதைக் காண எனக்கு மேலும் விந்தையாகத் தோன்றிற்று. சரேலென்று என்னுடைய அறைக்குத் திரும்பிச் சென்று யோசிக்கலானேன். எனக்கு ஒன்றும் புரியவே இல்லை. எல்லாம் பெரிய மர்மமாக விளங்கிற்று.

ஒரு கடிதத்தை எடுத்து வேகமாக எழுதினேன். எழுதியதைப் படித்தேன். யோசித்தேன். அதைக் கிழித்தெறிந்து விட்டு என் படுக்கையில் வந்து சாய்ந்துகொண்டேன். மறுபடியும் மனதைத் திடப்படுத்திக்கொண்டு வேறொரு கடிதமெழுதினேன். எழுதியதை மீண்டும் ஒரு முறை படித்தேன். அதில் எழுதியது இதுதான் :

"தேவரீர் அண்ணா அவர்கட்கு,

அநேக நமஸ்காரங்கள். தங்களுக்கு நான் இக்கடிதம் எழுதத் துணிந்ததுபற்றி மன்னிக்கவும். என்னைப் பங்களாவில் குடியிருக்கக் கூடாதெனத் தாங்கள் கட்டளை யிட்டதில் எனக்கு யாதொரு வருத்தமும் இல்லை. ஆனால் நமது தந்தை வெகு கஷ்டப்பட்டு வளர்த்த சிங்கார வனமும், அந்த நேர்த்தியான பங்களாவும் என்ன பாபம் செய்தன? அவற்றைத் தாங்களும், இதர தமையன்களும் புறக்கணித்து இங்கு வருவானேன்? பங்களா பாழடைந்து கிடப்பதும், தோட்டமெல்லாம் சின்னாபின்னப் படுத்தப்படுவதும் ஏனென்று எனக்கு விளங்கவில்லை. தங்கள் உத்தரவை நான் சிரமேற் கொள்கிறேன். இனி நான் பங்களாவுக்கு வருவதில்லை. ஆனால் தாங்களாவது அங்குச் சென்று வசித்து அதனைக் காப்பாற்றலாகாதா? நமது தந்தை இன்று உயிரோடிருந்தால் அது இவ்வாறிருக்க மனம் ஒப்புவாரா? யோசியுங்கள்"

கடிதத்தை ஒரு உறைக்குள் போட்டு, என் மூத்த அண்ணாவின் விலாசத்தை அதன் மீதெழுதி ஹோட்டல் சேவகன் ஒருவனைக் கூப்பிட்டுக் கொடுத்தனுப்பினேன். அவர் கடிதத்தை வாங்கிப் பிரித்துப் படிப்பதை ஜன்னல் வழியாகப் பார்த்துக்கொண்டே நின்றேன். கடிதத்தைப் படித்ததும் சேவகனை என்னவோ கேட்டார். பின்னர் அவனைப் பின்தொடர்ந்து நடந்தார். அடுத்த நிமிஷம் என் அறையினுள் நுழைந்தார். "நீ எழுதியுள்ளபடி நான் உன்னைப் பங்களாவில் குடியிருக்கக் கூடாதென ஒரு நாளும் சொல்லவில்லை, சொல்லவும் மாட்டேன். நீ தான் என்னை அங்கு வரக்கூடாதென்று சொன்னதாக மகாலிங்கம் சொன்னான்" என்றான். "ஐயோ! நான் ஏன் அவ்வளவு பெரிய பாபத்துக்கு ஆளாக வேண்டும்! நான் ஒன்றுமே சொல்லவில்லை" என்றேன். "என்னையும் நீ தான் அங்கு வரக் கூடாதென உத்தரவிட்டிருப்பதாக மகாலிங்கம் சொன்னானே" என்று சொல்லிக்கொண்டே எனது அடுத்த தமையனும் உள்ளே நுழைந்தார். மூவரும் ஒன்றும்

(௨௬-ம் பக்கம் பார்க்க)

அகத்தியர் பேச்சு

# மேற்கும் கிழக்கும்

(முருகன்)

### வைத்திய ரகளை

மன்னித்துக் கொள்ளுங்கள். கொஞ்சம் பீடிகை: சென்ற மாதம் அகத்தியர் பேசி மறைந்ததும் என்னை ஒரு வைத்திய ரகளை சூழ்ந்துகொண்ட தென்று முன்பே சொன்னேன். எங்கள் ஊரிலேயே வக்கீல்களுக்கும் வைத்தியர்களுக்கும், காப்பிக் கடைகளுக்கும் குறைவேயில்லை. நானிருக்கும் இந்த நடுத் தெருவில் பத்து வைத்தியர்கள் என்றால் பார்த்துக்கொள்ளுங்கள். அவர்களுக்குள் போட்டா போட்டி வந்துவிட்டாலோ, தெரு இரண்டாய்ப் போகும். தெருவில் வைத்தியம் பார்த்துக்கொள்ளக் கொஞ்சம் பசையுள்ள ஆசாமி வந்துவிட்டாளே அவனை ஆளுக்கொரு மூலையாக இழுத்துத் தொந்தரவு செய்வர்; ஆளை எமலோகத்திற்கனுப்பப் போட்டிபோடுவர். "இயற்கை" என்றால் போதும்; டாக்டர் **வைகுண்டம்** ஏழு கட்டைக்குக் குரலெடுத்து "மெடீரியா மெடிகா" முழுதும் ஒப்பிப்பான். "மருந்து" என்றால் போதும்; உபவாசையர் எனிமாவைத் தூக்கி வருவார். தொட்டி, பட்டினி, எனிமா—இவை தவிர வேறு சிகிச்சையே கிடையாதென்பது அவர் சித்தாந்தம். "சித்தமணி வாகடனார்" என்றால், "பிஷக்வைரம் பிச்சுமணி" புலிபோலப் பாய்ந்து உறுமுவார். 'ஓமியோபாத்தி கங்கா ஜலம்' என்றால் அல்லோப்பாத்தி அகோரமையர் புயல்போலச் சீறுவார். எனக்கு ஒரு 'பாத்தி'யும் பிடிக்காது; அவரவர் அவரவர் வைத்தியரா யிருக்கவேண்டும் என்பது என் கொள்கை. தலை கால் வலித்தால் டாக்டர்களிடம் சிக்காமல் லங்கணம் போட்டுவிடுவேன்; மறுநாள் சரியாய்ப் போகும். அடிக்கடி இவர்கள் விவாதம் என் வீட்டுத் திண்ணைக்கு வரும். "ஏங்காணும் நீர் சொல்லும்" என்று பஞ்சாயத்திற்கு வருவர். "எல்லாம் சரி; நம்மவருக்குப் பொறாமை யொழிந்து ஒற்றுமை உண்டாக ஒரு மருந்து சொல்லுங்கள் பார்ப்போம்!" என்றொரு கேள்வி போட்டு விடுவேன். "**தன்வந்திரி** அப்படிச் சொல்லுகிறார், ஹிப்போக்ராட் இப்படி, ஹாலிபர்டன் அப்படி, தேரையர் வாகடத்திலே தெளிவாகச் சொல்லுவது,...." என்றெல்லாம் அவரவர் படிப்பு வல்லபத்தைக்காட்டி வாய்ப்போர் புரிவர். நான் தமிழர் நிலையை நினைத்துச் சிவசிவா என்றிருப்பேன்.

இன்று கால்மணி நேரம் கூச்சல் பொறுக்க முடியவில்லை. "என்னங்காணும் பேசாதிருக்கிறீரே!" என்று என்னை எல்லாரும் மிரட்டினர். "நீங்களெல்லாரும் மெத்தப் படித்தவர்கள்; **துவேஷ ஜன்னி தீர** ஒரு மருந்து சொல்லுங்கள். அதில் உங்கள் சமர்த்தைப் பார்ப்போம்" என்றேன். ஆரம்பித்தார் சித்தமணி வாகடனார் :—

"மிளகுசுக்கு திப்பலி இலவங்கத்தோடும்
மேலான தும்பைவேர், வேப்பம்பட்டை
அளவுசம கைவே அவுரிப்பட்டை
அபிராமி மந்திரத்தால் அனைத்தும்கூட்டி
குளிகைசெய்து குமரித்தாய் அருளினாலே
குளிர்சன்னி நீங்கவெனக் கொடுத்துப்போடு
விளங்குமிதன் குணமிரண்டு விநாடிக்குள்ளே
வேதமுனி அகத்தியன்யான் விளம்பினேனே"

**பிஷக்வைரம் :**—முழுப் பிசகு.

"ஜீர்ணே ஹிதம் மிதம் சாத்யாத்........" என்கிறார் வாக்பட்டாச்சாரியார். முன்னே சாப்பிட்டது ஜீர்ணமானதா என்று பாராமல் எப்படி மருந்துகிட்டப் போவீர்.

**இயற்கை :**—பயித்தியக்காரரே.......சாப்பாடா! ........கிட்டவரக்கூடாது. பட்டினி, எனிமா முழுக்கு; தொட்டி, முழுக்கு எனிமா; பட்டினி.

**ஓமியோ :**—அப்படியே ஜபம் பண்ணும்; வேறே உமக்கென்ன தெரியும்? அதற்குள் ஆளே எமலோகம் போவான். மருந்து வேண்டியது தான். ஆனால் நிரம்பத் தண்ணீர்விட்டுக் கரைத்துத் தரவேண்டும்.

**டாக்டர் :**—நான்ஸென்ஸ்! எல்லாம் பழைய வைத்தியங்கள். எனிமா எங்கள் கருவியல்லவா? தொட்டி முழுக்கு எங்கள் "மெடீரியா மெடிகா" 93-ம் பக்கத்தில் உள்ளதே. இந்த எனிமா தாசர் என்ன புதுமை கண்டார்? நோயின் பேரும், கூறும் இவருக்குத் தெரியுமா? எங்கள் வைத்திய புத்தகத்தில் இலட்சம் லத்தீன் பெயர்கள் உண்டே. காய்ச்சல் ஜன்னி என்றால் அந்த அத்தியாயத்தைத் திருப்ப வேண்டியதுதான்.

Quin Sulph. 2 grs. Ferri Sulph. ½ gr. Pulv. Bicarb 2½ grs............என்று இருக்கும். பார்த்து மளமளவென்று கலக்கித் தரலாம்.

**ஆயுர் :**—ஓய் உமது பரிபாஷையும், பிரம்ம லிபியும் உமக்குத்தான் விளங்கும். சீமையிலே

மருந்துபண்ணிப் புட்டியிலடைத்து வந்தால் நீர் அதை வியாபாரம் பண்ணும் ஏஜெண்டாயிருக்கலாம். அந்த மருந்தை நீர் இங்கே பண்ண முடியுமா? ஒரு பஸ்மம், சிந்தூரம், லேகியம் என்ருல் நானே பண்ணித்தருவேனே.........

**இயற்கை** :—சொல்லாதேயும் 'மருந்து' என்று.

**டாக்டர்** :—வாயைத் திறக்காதே அநாகரிகம்!

**இயற்கை** :—புட்டியைத் திறக்காதே சாக்கடை மருந்து...........

**டாக்டர்** :—இந்த எனிமாவைப் பறித்துக்கொள்கிறேன்.—இனி உமது இயற்கை வைத்தியம் நடப்பதைப் பார்ப்போம்.

டாக்டர், உபவாசமையர் கையிலிருந்த எனிமாவைப் பறித்தோடினுர்........பின்னவர் துரத்தினுர். ஏகரகளை. அதற்குள் சித்தமணியும், பிஷக் வைரமும் விருத்தங்களும் சுலோகங்களும் கொட்டிப் பழி சண்டை போட்டனர். இச்சமயம் எங்கள் பாட்டி உள்ளேயிருந்து வந்தாள். "ஏண்டாப்பா, ஏனிப்படிச் சண்டை போட்டு மண்டை உடைகிறதாம்! ஒருநாள் லங்கணம் போட்டு, வேதுபிடித்து வேப்பம் பட்டையும், விஷ்ணு கிராந்தமும் போட்டுக் கஷாயம் கொடுத்தால் ஜுரம் பறக்குமே........'' என்று கையைக் கன்னத்தில் வைத்து நின்ருள். நான் மூக்கில் விரலை வைத்து வியந்தேன். "சபாஷ், பாட்டி! இயற்கை, சித்த வைத்தியம், ஆயுர்வேதம்........எல்லாம் சேர்ந்த ஒரு சிகித்ஸை சொன்னுள்" என்று மகிழ்ந்தேன். பாட்டியை மறுத்துச் சொல்ல ஒரு வைத்தியரும் முன் வரவில்லை. இருந்தாலும் அந்த ஐந்து பேர் சத்தமும் ஓயவில்லை. "நீங்கள் ஒற்றுமையாகி வாருங்கள்" என்று அவர்களை அனுப்பினேன். அப்படித்தானே வெள்ளைக்காரரும் தாக்காட்டுகிருர்கள்—எல்லாம் தருவோம் சேர்ந்து வாருங்கள். நம்நாட்டில் இப்படி எதற்கெடுத்தாலும் வாதமும் குரோதமுமாய் ஒருவருக்கொருவர் குடுமி பிடித்தலைகிருர்கள். ஐரோப்பியர் முன்னேறும் வகையை அகஸ்தியர் சொல்லுவார் கேளுங்கள்.

டங்! டங்!! டங்!!! அகஸ்தியர் பேசுகிருர்.

"என் அருமைச் சந்ததிகாள்! ஒற்றுமை, கூட்டவுணர்ச்சி, மனித சக்திகளைப் பயன்படுத்தி எதையும் ஆராய்தல், புதுமை வேட்கை, அயரா முயற்சி—இவையே வெள்ளைக்காரர் முன்னேறக் காரணமானவை. நான் ஆங்கிலம் நன்ருகக் கற்ற பிறகு பிரெஞ்சு, ஜர்மன், கிரேக்கு, லத்தீன், இத்தாலியன், ரஷ்ஷியன் ஆகிய ஆறு மொழிகளையும் எளிதாகப் பயின்றேன். போகர் ஆராய்ச்சிசாலையில் பௌதிக, ரசாயன, தாவர, யந்திர, கணித ஆராய்ச்சிகளைச் செய்தேன். யந்திரக் கணிதம் கற்றேன். முயன்ருல் எல்லாம் எளிது. அந்தந்தச் சாத்திரங்களுக்கு வெள்ளைக்காரர் எழுதியுள்ள புத்தகங்களைப் பார்த்துச் சொக்கிப்போனேன். என் ஓலைச் சுவடிகளைக் கடலும், கரையானும் உண்டு தீர்த்ததற்கு நான் வருந்தவேயில்லை. லண்டன் புத்தகசாலையைப் பார்த்தேன்; அப்படியே மூர்ச்சையானேன். உலக நூல்களெல்லாம் அங்கே உள்ளன. திருவாசகம், குறள், நாலடியார் முதலிய தமிழ் நூல்களின் மொழிபெயர்ப்புகள் அங்கேயிருந்தன. வடமொழி நூல்கள் பல ஆங்கிலத்தில் அழகாக மொழிபெயர்த்து அச்சில் வந்துள்ளன. ஆங்கிலம் தெரிந்தால் உலக மொழிகளிலுள்ள விஷயங்களெல்லாம் அறியலாம். ஆங்கிலப் பேரகராதியைப் பார்த்தேன். அதில் லெமூரியாவையும், என்னையும் பற்றிக்கூட விவரங்கள் இருந்தன. இலட்சக்கணக்கான நூல்களை வெள்ளைக்காரர் வெளியிட்டுதவி யிருக்கிருர்கள். நாம் நமது நூல்களைத் தேடுவதில்லை. நமது சாத்திரங்களைக்கூட அவர் மொழிபெயர்ப்பாலேயே நாம் கற்கிருேம். வெட்கம்! ஆனல் தமிழில் இன்னும் அவர்கள் கருத்தூன்றவில்லை. நமது தமிழின் அருமையை நாமே உலகிற்கு விளக்கவேண்டும்.

குழந்தைகாள்! நான் லண்டன், மாஞ்செஸ்டர், டப்ளின், பாரிஸ், பெர்லின், லெனின்கிராட், ரோம், ஆதென்ஸ், மாட்ரிட் முதலிய பெரிய நகரங்களுக்குச் சென்று வெள்ளைக்காரர் முன்னேற்றத்தைக் கண்டு வியந்தேன். கல்வி, இலக்கியம், கவிதை, நுண்கலை, யந்திரக்கலை, அரசியல், வாணிபம், போர்ப்படை முதலிய எதைப் பார்த்தாலும் ஒரு முறை வகுப்பு, ஒழுங்கு, முயற்சி, வெற்றி, செழிப்பு இவற்றுடன் கூடிய ஐரோப்பியர் வாழ்வைக் கண்டேன். நாளுக்குநாள் அங்கே புதிய ஆராய்ச்சிகள் செய்து வெற்றி பெறுகிருர்கள்.

நம்மவர் அப்படி உலகில் வளம்பெற வேண்டுமென நினைத்தேன். நான் மனப்பால் குடிக்கிறேனென்றெண்ணுதீர்கள். என்னருமைச் செல்வர்காள்! முயன்ருல் நீங்கள் இன்னும் மேன்மையாயிருக்கலாம். உங்களுக்கு அருளுணர்வு மிகுதி. அத்துடன் பொருளும் சேர்ந்தால் வீறுபெற்று வாழ்வீர்! பாரிஸ் பல்கலைக் கழகம் தாய்மொழிக்குச் செய்த பணியை நீங்களும் தமிழுக்குச் செய்யவேண்டும். அங்கே சமுதாயத்திற்குப் பயனுள்ள ஒவ்வொரு கலைக்கும் புலவர் குழு ஏற்படுத்தி அக்கலையை நன்ருக வளர்க்கிருர்கள். அதற்குரிய நூல்களை வெளி

விடுகிறார்கள். தமிழிலும் அம்மாதிரிக் காரியம் விரைவாக நடக்கவேண்டும்.

ஒரு காரியத்தை மேற்கொண்டால் அது நிறைவேறுமட்டும் ஐரோப்பியர் விடாது, தளராது கருத்தூன்றி உழைப்பர். உயிர்போனாலும் கொள்கையை விடமாட்டார்கள். அவர் முயற்சியை நாட்டார் ஆதரிப்பர். அம்முயற்சி வென்றதும், நாட்டிற்குப் பயன்படுத்துவர்; முயற்சியாளருக்குச் சன்மானமளிப்பர். வெள்ளைக்காரன் அநாவசியமாகப் பேசமாட்டான்; காரியமுண்டு தானுண்டு என்றிருப்பான். அவன் கால் எங்கே சுற்றினாலும் கண் வரும்படியிலேயே இருக்கும். 'இன்று புதிதாக என்ன கண்டு பிடிக்கலாம்' என்று வெள்ளைக்காரன் எழுந்திருக்கிறான். அப்படியே ஏதாவது ஒருபுதுமையைக் காண்கிறான். பாரிஸில் **மாதாம் க்யூரியின்** ஆராய்ச்சிக் கூடத்திற்குப் போயிருந்தேன்; அங்கே ரேடியம் செய்வதைப் பார்த்தேன். ஒவ்வொருவரும் எவ்வளவு கவனமாகக் காரியம் செய்கின்றனர். நியூடன் முதல் மாக்ஸ்வெல், எடிஸன், ஈன்ஸ்டின்வரையில் எல்லா விஞ்ஞானப் புலவர்களின் ஆராய்ச்சிகளையும் பார்த்தேன். அந்த மாதிரி நானும் ஆராய்ச்சிகள் செய்தேன். ஐரோப்பியரின் அரசியல் சமுதாய வாழ்க்கை எனக்குப் பிடிக்கவில்லை. அவர்களின் கலைவளமே எனக்குப் பிடித்திருக்கிறது. அதையே நம்மவர் பெற வேண்டும். மற்றத் துறைகளில் நமக்குக் குறையில்லை.

எனது கலை வளர்ச்சியைப் போகர் வியந்தார். அவர் மனைவிக்கு இப்போது ஆங்கிலத்திலேயே தமிழின் அருமையைப்பற்றிப் பேசி வந்தேன்; கருத்துடனே கேட்டாள். கற்கவேண்டியது கற்றாயிற்று; கண்டம் முழுதும் சுற்றியாயிற்று. இனி அமெரிக்கா, ஜப்பான் இரண்டையும் பார்த்துக்கொண்டு, பாரதவர்ஷம் செல்லலாமென்று நினைத்தேன். போகரும் ஆமோதித்தார். இருவரும் கூடி ஒரு விமானமும் செய்து முடித்தோம். இதற்குள் என் பெயர் பலருக்குத் தெரிந்துவிட்டது. நண்பரெல்லாரும் கூடி எனக்கொரு பெரிய விருந்து செய்தனர். "**மேற்கும் கிழக்கும்**" என்பதைப்பற்றிப் பேசினேன்.

"மேற்கு கர்மபூமி, போகபூமி; அங்கே மூளையாலும் உடலாலும் மனிதன் உழைக்கிறான்; புதுப்புதுக்கருவிகளைக் கண்டுபிடிக்கிறான்; இடத்தையும் காலத்தையும் வெல்லுகிறான். குண்டு பீரங்கி, கடல்வெடி, தரைவெடி, கப்பல், ஆகாசக் கப்பல், ரயில், மோட்டார், பல தொழில் யந்திரங்கள் அனைத்தையும் செய்கிறான்; விற்கிறான், பொருள் குவிக்கிறான், தாராளமாகச் சுகிக்கிறான்; தனது சுகபோகங்களுக்கு எதிர் செய்பவரைக் கொல்லுகிறான்; உலகை வெல்லுகிறான். **'பணம், பலம்'** இரண்டே அவன் பல்லவி. அதற்கு மேல் ஆத்ம ஞானமும் இதயசாந்தியும் அவனுக் கெய்துவதில்லை. கிழக்கு **தர்மபூமி**, ஞானபூமி, யோகநிலயம். இங்கே அந்தக்கரணங்களை அடக்கி, ஆன்மவுணர்வு பெற்ற பேரின்ப ஞானிகளை வணங்குவர். தானதருமங்கள் ஏராளமாகச் செய்வர். இங்கே அருளுணர்ச்சியுள்ளது, அங்கே பொருள் நிறைவுள்ளது. அருளும் பொருளும் சேர்ந்தால் கிழக்கும் மேற்கும் சரிநிகர் சமானமாக முன்னேறலாம். ஒன்றையொன்று அறிய வேண்டும். ஒன்றின் தீமையை விலக்கி நலத்தை மற்றொன்று பயில வேண்டும். தியானம், பக்தி, பரோபகாரம் எல்லாம் வேண்டும். அத்துடன் காலத்திற்கேற்ற இயற்கையறிவும் வேண்டும். வெண்ணுடையார் நமக்கு விஞ்ஞானமும் யந்திரக்கலையும் தரட்டும்; அந்தவகையில் அவர்களை ஆசிரியராக ஏற்போம். பாரத தேசம் தனது ஆத்யாத்மக்கலையை வெள்ளைக்காரருக்குத் தரட்டும். இரண்டும் உயிரும் உடலும் போல் விளங்கி உலகை இன்பமாக வாழச் செய்யட்டும். மேற்கின் சக்தியும், கிழக்கின் ஞானமும் சேர்ந்து புதிய ஜாதி, புதிய வாழ்க்கை விளங்கும் நாளை எதிர்பார்ப்போம். உங்கள் வாழ்விலும் மேற்கும் கிழக்கும் முறைப்படி இணைந்திருக்கட்டும்."

மறுநாள் லண்டனிலிருந்து விமானத்தில் போகருடன் கிளம்பினேன். மேலிருந்து வெள்ளைக்காரர் நாகரிக வாழ்வைப் பார்த்து "ஆஹா எவ்வளவு அற்புதமான ஜனங்கள்! என்னென்ன புதுமைகளையெல்லாம் தினந்தினம் கண்டுபிடிக்கிறார்கள்!" என்று வியந்தேன். அப்போது "டமார், படார்! படார்டொம்! டொப்" என்று ஊழியிடிபோலக் கேட்டது. "என்னங்காணும் தீபாவளியோ?" என்றேன். "ஆமாம் இதுவும் ஒரு தீபாவளிதான். உமதுநாட்டில் தீபாவளிக்குச் சீனிவெடியை நுனியில்பிடித்துச் சுடக்கூடப் பயப்படுவர். வெங்காய வெடியை எறியக்கூடக் கைகூசுவர். இந்தத் தீபாவளியைப் பாரும்!" என்றார். வட்டமிட்டுப் பார்த்தோம். அதோ! ஆ! ராக்ஷஸ பீரங்கிகளைத் தாங்கிப் பிரமாண்டமான கப்பல் செல்லுகிறது. டபார் என்ற சத்தம். ஐயோ, சிவனே! கப்பல் பாதாள யாத்திரைபோய் விடுகிறது. அதிலிருந்த ஆயிரம் பேரில் 800-பேர் எமலோகம் போகின்றனர். மீதிப்பேர் தத்தளிக்கின்றனர். சில படகுகள் வந்து அவர்களைக் கரையேற்றுகின்றன. குழந்தை குட்டிகளை இழந்த தாய்மார், கணவரை

யிழந்த இளம்பெண்கள் அலறித் தவிக்கின்றனர். தீவு மிதந்து வருவதுபோலே இன்னொரு கப்பல் ஏராளமான சரக்கேற்றி வருகிறது. ஆகாசகுண்டு விழுகிறது. கப்பலில் புகை எழுந்து சூழ்கிறது. பகைக்கப்பல் வந்து அதிலுள்ள சாமான்களைக் கொள்ளையடிக்கிறது. ஒரு போர்க்கப்பல் எதிரிக் கப்பலைத் துரத்துகிறது. படக்கென்று அதன் அடியில் ஏதோ இடிக்கிறது. கப்பல் ஓட்டை யாகிறது. பத்து நிமிஷம்....பாதாள ப்ராப்தி! அதோ ஒரு நீர் மூழ்கி. அது தண்ணீருக்குள் செல்லுகிறது. பகைக் கப்பல்களை உடைக்கிறது. மற்றொரு திசையில் ஆகாயத்திலிருந்து குடைமாதிரி வருகிறது. அதிசயம்! அதில் ஆள் தொங்குகிறான். ஆள் கையில் வெடிகுண்டு உள்ளது. அதைக் குறித்த இடத்தில் வீசி மீண்டும் அவன் ஆகாசக் குடையில் மேலே செல்லுகிறான். இப்படிக் கப்பல் சண்டைகளைப் பார்க்கும்போதே ஆகாசக் கப்பல்கள் ஒன்றையொன்று துரத்திச் சுட்டன. ஆகாசக்கப்பல்கள் உடைந்து கீழே விழுகின்றன. கூட்டம் கூட்டமாக ஆகாசக் கப்பல்கள் வருகின்றன. பகை நாட்டில் எதையோ தூக்கிப் போடுகின்றன. ஊர் ஊராய்ச் சாம்பலாகின்றன. "போகரே, எதற்காக உமது மாணவர் இப்படி விஞ்ஞானத்தைக் கொண்டு தற்கொலை செய்து கொள்ளுகிறார்கள்?" என்று கேட்டேன். "அதோ இருக்கும் சிறியதீவை அந்தப் பெரியநாடு கேட்கிறது. தீவைச் சேர்ந்த நாடு பிடிவாதமாக மறுக்கிறது. நீ தரவேண்டாம்; நானே எடுத்துக் கொள்கிறேன்" என்று பெரிய தேசம் குண்டு போடுகிறது. இதுதான் இன்றுலக நிலை" என்றார். "பயங்கர ஐரோப்பாவே விடைபெற்றுக் கொள்கிறேன்" என்று அமெரிக்காவை நோக்கினேன். அமெரிக்காவிலும் அதே வெள்ளையர் அதே அறிவு, தொழில் முயற்சி, அதே நாகரிகம், கலை, விஞ்ஞானம், வாணிபம். அங்கே எடிஸன் ஆராய்ச்சிச்சாலையைப் பார்த்தேன். விவேகானந்தர் பேசிய சிக்காகோ சபையைப் பார்த்தேன். மிஸ்ஸிஸிபி நதியிற் குளித்தேன். கலிபோர்னியாவில் வசித்தேன். தென்னமெரிக்காவில் பிரேஸீல் காட்டைச் சுற்றிப் பார்த்தேன். அமெரிக்கர் பெரும் செல்வர். நியூயார்க் அளகாபுரி போன்று செல்வம் செழித்தது. ஹென்றி போர்டு, ராக்ஃபெல்லர் முதலிய செல்வ முதலாளிகளைப் பார்த்தேன். நமது தேசம் தொழிலிலும் வாணிபத்திலும் அமெரிக்காப் போலே வளம் பெற வேண்டும். அமெரிக்காவை விட்டு ஜப்பான் வந்தேன். ஜப்பான் வெளிநாட்டிடமிருந்து கற்கவேண்டியதைக் கற்று முன்னேயிருக்கிறது. டோகியோப் பெண்கல்லூரியைக் கண்டு திகைத்தேன்—அவ்வளவு அழகான விரிவான ஏற்பாடுகள் அங்கே விளங்கின. கல்லூரிகளில் ஜப்பானியர் பயனுள்ள கல்வி பயில்கின்றனர். மேனாட்டுக் கலைகளை நன்றாகக் கற்கின்றனர். எனினும் தமது தாய் நாட்டின் பரம்பரை அனுஷ்டானங்களை அவர்கள் விடுவதில்லை. மேனாட்டுக் கலைகளைத் தாய்மொழியில் எழுதியிருக்கின்றனர். நாடு, மொழி, சுதர்மம் இம்மூன்றையும் ஜப்பானியர் மறப்பதில்லை. ஜப்பானைக் கண்குளிரக்கண்ட பிறகு பாரத நாட்டுக்கு வந்து, உஸ் அப்பாடா! என்று மீண்டும் நமது ஞான பூமியின் சாந்தக்காற்றை நுகர்ந்தேன். அடுத்த தடவை எனது இந்திய அனுபவங்களைச் சொல்லுகிறேன்.

---

(உஉ-ம் பக்கத் தொடர்ச்சி)

பதில் பேசாமலே யோசித்த வண்ணமாய் அறையை விட்டு வெளியில் வந்தோம் அங்கே எனது அடுத்த தமையனும் வந்து சேர்ந்தார். "அண்ணா, உங்களிடம் அந்த மகாலிங்கம் என்ன தெரிவித்தான்?" என்று நான் கேட்டேன். "ஏன்? என்னை அங்கு வரக்கூடாதென வக்கீலண்ணா சொல்லிவிட்டதாகக் கூறினானே" என்றார்.

எங்கள் மனவேற்றுமையால் விளைந்த நிலைமை எங்கள் நால்வரையும் வெட்கமுறச் செய்தது. உடனே ஒரு வண்டியில் எங்கள் நால்வர் பெட்டி படுக்கைகளையும் ஏற்றி வரும்படியாக ஆட்களிடம் பணித்துவிட்டு எனது தமயனின் மோட்டாரில் நாங்கள் நால்வரும் ஏறிச்சென்று எங்கள் பங்களாவை அடைந்தோம். நாங்கள் நால்வரும் ஒரே காரில் வந்திறங்குவதைக் கண்ட மகாலிங்கம் ஓட்டமெடுத்தான். "டேய் நில்! நில்!" என்று கூறிக்கொண்டே என் தமையன் அவனைப் பின் தொடர்ந்தார். இது நடந்து ஆறு மாதங்களாகின்றன. மகாலிங்கம் சென்ற விடம் தெரியவில்லை. நாங்கள் நால்வரும் என்றுமில்லாத ஒற்றுமையுடன் எங்கள் பங்களாவில் வசித்து வருகிறோம். எங்கள் பங்களாவும் தோட்டமும் இப்போது காண்பதற்கு என்றுமில்லாத எழிலுடன் விளங்குகின்றன.

# கரதல அச்சுக்கூடம்

"நெல்லையன்"

பாலாற்றின் கரையிலுள்ள தோணிபுரியிலே பொன்னப்பன் பிறந்தான். அவன் தந்தை தமிழை வருந்திப் படித்தவர்; தாய் பழங்கதை சொல்வதில் பேர்பெற்றவள். பொன்னப்பனைப் பெரிய கவிராயனாக்கி விடவேண்டும் என்பது தந்தையின் ஆவல். காலையில் நாலரை மணிக்கே பையனை எழுப்பிவிடுவார்; சாலை வழியாக ஆற்றங்கரைக்கு அழைத்துச் செல்வார்; வழியெல்லாம் சூடாமணி நிகண்டும், நன்னூலும் வாய்ப்பாடமாகச் சொல்லிக் கொடுப்பார். தலை கால் புரியாமல் பொன்னப்பன் கிளிப்பிள்ளைபோல் தூக்க மயக்கத்தில் பாடஞ் சொல்லிக்கொண்டு போவான். தினந்தோறும் பாடம் ஏறிக்கொண்டே போயிற்று. பையனுக்கு அதில் வெறுப்பும் வளர்ந்து கொண்டே வந்தது.

நாள்தோறும் மாலைப் பொழுதில் பொன்னப்பன் தாயார் கதை சொல்லுவாள். அக்கதை பேய்க்கதையாகவே இருக்கும். ஒருநாள் முண்டாசு கட்டி வரும் சண்டிக் கறுப்பன் கதை சொன்னாள். அக்கறுப்பன் நாற்பதுமுழச் சிவப்புத் துணியை வால்விட்டுத் தலையிலே கட்டிக்கொண்டு, கிருதா மீசையை முறுக்கிக்கொண்டு பையனுக்குக் கனவிலே காட்சி கொடுத்தான். மற்றொரு நாள் மாலையில் அவள் சங்கிலிப் பூதத்தான் சரித்திரத்தைச் சொன்னாள். அன்றிரவு சலசல என்ற ஓசையும் கலகல என்ற சிரிப்பும் பையன் செவியில் விழுந்து கொண்டே இருந்தன. பேய்க் கதைகளைக் கேட்டதன் பயனாகப் பொன்னப்பன் இருட்டிவிட்டால் வீட்டைவிட்டு வெளியே போகமாட்டான். அந்திசந்தியில் ஆற்றுக்குத் தனியே போக நேர்ந்தால் ஒரு வேப்பங் கொம்பை கையில் எடுத்துக்கொண்டு போவான். வேப்பமரத்தைப் பேய் அணுகாது என்று அவன் தாய் சொல்லி வைத்திருந்தாள்.

பள்ளிக்கூடப் படிப்பில் பொன்னப்பன் தந்தைக்குச் சிறிதும் நம்பிக்கையில்லை. 'பள்ளிக் கல்வி புள்ளிக்குதவாது' என்று அடிக்கடி அவர் சொல்வார். அந்த வசனம் தினந்தோறும் செவியில் விழுந்தும் பையனுக்கு அதன் பொருள் தெரியவில்லை. ஒருநாள் அமாவாசைச் சாப்பாடு முடித்துத் தந்தை திண்ணையில் சாய்ந்திருக்கையில் அவரைப் பார்த்து,

பையன் :—அப்பா! "பள்ளிக் கல்வி புள்ளிக் குதவாது" என்று தினந்தோறும் சொல்லுகிறாயே! புள்ளியென்றால் என்ன அர்த்தம்?

தந்தை :—அப்படிக் கேளப்பா! பிழைக்கிற பிள்ளை அப்படித்தான் கேட்பான். இந்த வசனத்தை எல்லோரும் சொல்லுவார்கள். ஆனால் ஒருவருக்கும் உண்மைப் பொருள் தெரியாது.

பையன் :—அப்படியானால் உனக்கு மட்டும் எப்படித் தெரிந்தது அப்பா! யார் சொல்லிக் கொடுத்தார்?

தந்தை :—பிள்ளாய்! கட்டிக்கொடுத்த சோறும் சொல்லிக்கொடுத்த பொருளும் கவைக்குதவுமா? நானே முயன்று கண்டுபிடித்தேன். 'வருந்தினால் வாராத தொன்றில்லை' என்பது உண்மையல்லவோ?

பையன் :—நீ வருந்திக் கண்டுபிடித்த அர்த்தத்தைத் தான் சொல்லேன்.

தந்தை :—உனக்கில்லாமலா! இதோ சொல்கிறேன். ஆனால் நான் சொல்லும் அர்த்தத்தை எவரிடமும் சொல்லாதே! இப் பிரபஞ்சம் படுமோசம்! பாடுபடுபவன் ஒருவன்; பலனடைபவன் மற்றொருவன். அப்பழமொழியின் பொருளைச் சொல்லிவிட்டாயோ, மறுநாள் "வெடிக்குண்டு விகட"னில் அதைக் கேட்டவன் வெளியிட்டுப் பணமும் புகழும் பெற்றுக் கொள்வான்.

பையன் :—நான் சொல்லுவேனா அப்பா! நீ மூளையைக் கசக்கிப் பிழிந்து கண்டுபிடித்த அர்த்தத்தை நானா வெளியே சொல்லுவேன்!

தந்தை :—நீ சமர்த்தன் என்பது எனக்குத் தெரியும். ஆனால் இவ்வஞ்சக உலகத்தை நினைக்கும்பொழுது என் நெஞ்சம் திடுக்கிடுகிறது. நன்றாய்க் கேள்! நன்னூல் தான் உனக்குத் தளபாடமாய்த் தெரியுமே! புள்ளி என்பது ஆய்த எழுத்து. அது மூன்று புள்ளியாய் அடுப்புக்கட்டி போலிருக்கும். பள்ளிக் கூடப் படிப்பு அடுப்புக் கட்டிக்குக்கூட உதவாது என்பது அப் பழமொழியின் கருத்து. அடுப்புக் கட்டிக்கு உதவாது என்றால் அடுப்புக்கு உதவாது; ஒரு பிடி அன்னத்துக்கு உதவாது என்பதைப் படிப்படியாய் உய்த்துணர வேண்டும்.

பையன் திறந்தவாய் மூடாமல் கேட்டுக்கொண்டிருந்தான்; ஒன்றும் புரியவில்லை. மூளை கிறுகிறுத்தது.

பையன் :—போதும் அப்பா! எல்லாம் விளங்கிப் போச்சு. நான் இனிப் பள்ளிக்கூடம் போகவே மாட்டேன். வீட்டிலிருந்து தமிழ்ப்பாட்டுக் கட்டுவேன். ஒழிந்த நேரத்தில் அம்மாவுடன் இருந்து அடுப்பு மூட்டுவேன்.

தந்தை :—"சொந்தக்கவி பண்ணு, சோறு பொங்கித் திண்ணு" என்று அந்தகக் கவிராயர் கொச்சையாய்ச் சொல்வார். ஆயினும் அது நல்ல வசனம்.

பையன் எழுந்து போனான். பாட்டுப் பாட வேண்டும் என்னும் ஆசை அவனைப் பற்றி இழுத்தது

ஓசையே பாட்டுக்கு உயிர் என்பது அவன் கருத்து. ''சீரும் தளையும் சிறியோர் பார்ப்பர்; மோனையும் எதுகையும் மூடர் விரும்புவர்'' என்று யாப்பிலக்கணம் படித்துப் பாட்டெழுதும் பிள்ளைகளை அவன் பரிகாசம் செய்வான்.

எல்லார்க்கும் படியளக்கும் கடவுள்மீது முதலில் பாட்டுக்கட்டுவதே பொன்னப்பனுக்கு முறையென்று தோன்றிற்று. வளமாகச் சோறும் கறியும் தரும்படி சிவபெருமானைப் பாடினன்;

''சொற்றுணை வேதியன் சுடுசோறு சொரிபவன்
வெற்பினில் இருப்பவன் வெண்டைக்காய்
அளிப்பவன்
சற்பத்தை அணிபவன் சாம்பாரும் தருபவன்
நற்பதம் பணிவேன்; நான் பசிதீர்வேன்''

என்று தொடங்கி அறுசுவை உணவுக்கு ஆறுபாட்டும், ஐஸ்க்ரீமுக்கு நாலு பாட்டுமாகப் பாடி முடித்தான். அப்பாட்டுக்கு 'அகட்டுத் திருப்பதிகம்' என்று தலைப் பிட்டுத் தந்தையிடம் கொண்டுபோனன். பொன்னப்பன் பாடிய முதற்பாட்டு அன்னப்பாட்டா யிருக்கக்கண்டு தந்தை ஆனந்தமடைந்தார். ''விரை யொன்று போட்டால் சுரை யொன்று முளைக்குமா?'' 'துப்பாக்கி வயிற்றில் பீரங்கி பிறந்திருக்கிறது' என்று மெச்சினர். ''அசட்டுப் பிசட்டென்று பள்ளிக்கூடத்தில் படிக்கும் பயல்கள் பாடுகிறார்களே! என் மகன் பாடிய 'அகட்டுப் பாட்டின்' அடித்தூசி விலைபெறுமா அவை? அகட்டுப் பாட்டு என்ற தலைப்பின் அர்த்தந்தான் அப்பயல்களுக்குத் தெரியுமா? என் பிள்ளை கவிராயனுக்கு நிகண்டு தலைகீழாய்ப் பாடம். 'அகடென்ப நடுவே குக்கி' என்ற சூடாமணி நிகண்டு மனப்பாடமாயிருப்பதால் அல்லவோ வயிற்றுப் பாட்டை 'அகட்டுப் பாட்டு' என்று அழைத்தான்? இவன் காலத்தில் பெரிய கவிச்சக்கரவர்த்தி யாவான்'' என்று எண்ணி மனங் களித்தார். அகட்டுத் திருப்பதிகத்தை ஆறுதரம் படித்தார்; பல ரகங்களில் படித்தார்; பல ராகங்களில் பாடினர். அத்திருப்பதிகத்துக்கு ஒரு சிறப்புப்பாயிரம் கொடுத்தார்.

''அன்னக் கவிபாடி அகங்குளிரச் செய்திட்ட
பொன்னப்பா! உன்தன் புலமைத் திறத்தாலே
மன்னவரும் போற்ற மணியாசனத் திருப்பாய்
என்னப்பா! என்குலத்திற் கேற்ற மணி
விளக்கே''

என்று தந்தை பாடித் தந்த பாயிரத்தைப் பையன் பதிகத்தோடு சேர்த்துக் கட்டிவைத்துக் கொண்டான்.

அன்னப் பாட்டுப்பாடிப் புகழ்பெற்ற பொன்னப்பக் கவிராயர் அன்று முதல் ஆயிரம் ஆயிரமாகப் பாடித் தள்ளினர். அவரது கவியின் பெருக்கத்தைக் கண்டவர்கள் கம்பருக்கும் காளிதாசருக்கும் அருள் செய்த காளியே அவருடைய நாவில் சூலத்தால் எழுதி விட்டாள் என்று வெளிப்படையாகப் பேசினர்கள். அவர் வாக்குப் பலிக்கும் என்று நம்பித் தோணிபுரி வாசிகள் அவருக்கு வேண்டும் பொருள் கொடுத்தார்கள்.

பணக்காரர் வீட்டில் கல்யாணம் நடந்தால் பொன்னப்பக் கவிராயர் பட்டைத் தார்ப்போட்டு, திருநீற்றைப் பட்டையாய் இட்டு, நெற்றியில் வட்டச் சந்தனப் பொட்டிட்டு, அதன்மீது குங்குமம் இட்டு, வெள்ளிப் பூண் பிடித்த தடிக்கம்பைக் கையிலே பிடித்து, கம்பீரமாக அங்கு நடந்து செல்வார். கல்யாணப் பந்தலில் உள்ள மிராசுதார்கள் மரியாதையாக விலகி, சபையின் நடுவே கவிராயருக்கு இடங்கொடுப்பார்கள். மணச் சடங்கு முடிந்தவுடனே கவிராயர் நளினமாக வெள்ளிக் குடுக்கையிலிருந்து பொடியெடுத்து நாசியில் இழுத்துக் கொண்டு உச்சத்தொனியில் தம் வாழ்த்துப்பாட்டை எடுத்து விடுவார். ஒரு நாள் நந்திபுரி முதலியார் வீட்டில் கோலாகலமாக நடந்த கல்யாணத்திற்குக் கவிராயர் போயிருந்தார். மணமக்கள் மணவறையைச் சுற்றி வந்து உட்கார்ந்ததும், கவிராயர் 'மந்திகள் லாகை போடும்' என்று ஒரு எடுப்பு எடுத்தார்.

''மந்திகள் லாகை போடும்
நந்தியம் புரியில் வாழும்
தந்திரம் மிக்கோர் வைகும்
பந்தியில் முதல் இருப்போன்''

என்று ஆரம்பித்தவுடன் பந்தலில் பேச்சு அடங்கிற்று. எல்லோரும் ஒரு முகமாய்ப் பாட்டைக் கேட்டார்கள். அவ்வூரில் உள்ள மாஞ்சோலையில் மந்திகள் கிளைக்குக் கிளை தாவித் தலைகீழாக ஆடும் அழகைக் கண்டு கவிராயர் பாட்டாகப் பாடிவிட்டாரே என்று பாட்டிகளும் பாராட்டினர்கள். பந்தலுக்கு வெளியே கிளித்தட்டு விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள் பாட்டைக் கேட்டவுடனே ஒரு லாகை போட்டுக் கவிராயர் வாக்கை மெய்ப்பித்தார்கள்.

மற்றொரு நாள் சமரபுரி முதலியார் வீட்டில் ஒரு அமரகிரியை நடந்தது. அதைக் கேள்விப்பட்ட கவிராயர் கருமாதிக் கூட்டத்திற் புகுந்து,

''அமரர்கள் கண்ணீர் சிந்த
அந்தரர் பொருமி யேங்கத்
தமரெலாம் தவித்து வாடத்
தங்கையர் தளர்ந்து சோர''

என்று உருக்கமாய் எடுத்த பாட்டு முடியு முன்னமே அங்கிருந்த மங்கையர் ஒவென்று அலறி அழத் தொடங்கினர்கள். அழுகையால் பாட்டு அரைகுறையாய் முடிந்தது. பாட்டைக் கேட்டு மெச்சிய சமரபுரி முதலியார் கவிராயருக்கு வெள்ளிப் பாக்குவெட்டி யொன்று பரிசளித்தார்.

இவ்வாறு நன்மை தின்மைகள் நேராத காலங்களில் கவிராயர் சீமான்கள்மீது சித்திரக் கவி செய்வார்; சில பேர்வழிகளை நாகபந்தத்தில் அடைப்பார்; மற்றும் சிலபேரைக் கமலபந்தத்தில் கட்டுவார்; பந்தங்கள் தயாரானதும் வெள்ளித் தடிபிடித்து அவர்கள் வீட்டை நோக்கிச்செல்வார். ஒரு நாள் கவிராயர் நாகபந்தத்தை எடுத்துக்கொண்டு அரசூர் ஆனையப்ப பிள்ளையைக் காணச் சென்றார். அவர் தம் பங்காளிகளின்மீது

தொடுத்திருந்த வழக்கு அவருக்குப் பாதகமாகத் தீர்ப் பான செய்தி அப்பொழுதுதான் தந்தியின் மூலமாகக் கிடைத்திருந்தது. சாய்வு நாற்காலியில் சோர்ந்து சாய்ந் திருந்த பிள்ளை யவர்கள் முன்னே நின்று கொண்டு,

" தந்தி யொன்று வந்த தென்று
நொந்திருக்கும் வேளையில்
பந்த மொன்று தந்து நான்
வந்தனை புரிகுவேன் "

என்று கவிராயர் போட்ட போடு அவரைத் தூக்கி வாரிப்போட்டு விட்டது. தந்திக்காரனைத் தலைவாசலில் கண்டு விசாரித்துவிட்டுக் கவிராயர் உள்ளே வந்தார் என்பதை அறியாத பிள்ளையவர்கள் ஆச்சரியப்பட்டு வணங்கி அவரை வரவேற்றார்; பயபக்தியுடன் உபசரித் தார். காரியம் பலித்த தென்றெண்ணி, கவிராயர் பந் தத்தைக் கம்பீரமாகப் படித்துக் கொடுத்தார். பந்தப் பாட்டின் பொருளறியாத பிள்ளையவர்கள் காளியின் அருள்பெற்ற கவிராயரொடு பேசவும் அஞ்சி, ஐம்பது ரூபா சன்மானம் கொடுத்து, கோர்ட்டுச் செலவோடு செலவாய், 'பந்தச் செலவு' ரூபா ஐம்பது என்று எழுதி விட்டார்.

காலம் செல்லச் செல்லக் கவிராயர் புகழ் ஏறிக் கொண்டே போயிற்று. அவருக்கு வயதும் நாற்பது நிறைந்தது. அவரது இருபத்தெட்டாவது வயதில் தாயார் பேய்க்கதை சொல்லி வளர்த்த பிள்ளையிடம் சரமகவி பெற்றுக்கொண்டு பரமபதம் அடைந்தாள். பின்னும் ஐந்து ஆண்டுகளில் தந்தையும் கவிராயரிடம் விடைபெற்றுக் கொண்டார். பெற்றோர் இருவரும் போய்ச் சேர்ந்தபின்பு கவிராயர் கல்யாணம் செய்து கொண்டு இல்லறம் நடத்தவேண்டுமென்று அவர் பந்து மித்திரர்கள் சொல்லத் தொடங்கினார்கள். அவர்கள் கல்யாணப் பேச்சை எடுக்கும்பொழுது 'அந்த இழவு யாருக்கு வேணும்'? என்று கவிராயர் நறுக்கென்று பேசி விடுவார். ஆகவே கல்யாண 'இழவை'ப் பற்றி யாரும் அவருடன் பேசுவதில்லை.

நாளடைவில் கவிராயருக்கு, 'நாகபந்த நாயகம்' 'சரம கவிச்சிங்கம்' முதலிய பட்டங்கள் வலிய வந்து சேர்ந்தன. ஆயினும் ஒரு பெரிய ஆசை அவர் மனத் தில் குடிகொண்டிருந்தது. பதினாயிரம் பாட்டுப் பாடிய கம்பர் கவிச்சக்கரவர்த்திப் பட்டம் பெற்றால் அறுபதி னாயிரம் கவி பாடிய பொன்னப்பர் ஏன் அப் பட்டம் பெறக்கூடாது என்பது அவர் கேள்வி. மேலும் அவர் கவிச்சக்கரவர்த்திதான் என்று மனச்சாட்சி உள்ளிருந்து சொல்லிக்கொண்டே யிருந்தது. கவிப்பட்டம் பெறு வதற்கு மதுரையும் காஞ்சியுமே தகுதியான இடங்கள் என்று கவிராயர் எண்ணினார்; முதலில் மதுரைக்குத் தன் பரிவாரங்களோடு புறப்பட்டார். அங்கே கோனேரியப் பக் கவிராயர் என்பவர் சங்கப் புலவராக மதிக்கப்பட் டிருந்தார். அவருடைய முழக்கத்தைக் கேட்டு அஞ்சிய மதுரைச் சங்கத்தார் 'கோடையிடிக் கோனேரியப்பர்' என்று அவரை அழைத்தார்கள். அக் கோடையிடியைப் பொன்னப்பக் கவிராயர் காணச் சென்றார். தாம் இயற்றி அச்சிட்டிருந்த நாகபந்தம், கமலபந்தம் முதலிய பந்தங் களையும் சரமகவி, சீட்டுக்கவி முதலிய பாட்டுக்களையும் கோடை யிடியிடம் காட்டினார். சரம கவிச்சிங்கத்தின் கர்ச்சனை கோடையிடியின் முழக்கத்தினும் அதிக மாகவே இருந்தது.

கோடையிடி :—(கவிராயரைப் பார்த்து) 'தோணி புரித் தோன்றலே, நாகபந்த நாயகமே' அடியேன் குடிசை தங்கள் வருகையால் புனித மடைந்தது. எளி யேன் தங்களுக்கு என்ன செய்யக்கூடும்? தங்கள் சித் தம் என் பாக்கியம்.

கவிராயர் :—

" கோடையிடி முழக்கும் கோனேரியப்பா கேள்
மாடமதி தவழும் மதுரைமாப் புலவரிடம்
நாடறியப் பட்டம் நயந்து பெறவேணு மென்றே
காடும் கரையும் கடந்திங்கு வந்தேன்காண் "

கோடையிடி :—கல்விக் களஞ்சியமே! கவிச்சிங் கமே! மூச்சுவிடு முன்னே மூன்றே முக்கால் அடி பாடும் உங்களுக்கு நாங்கள் பட்டமளிக்கும் தரமுடை யோமா? நீங்கள் இருப்பது மலைச்சிகரம்; நாங்கள் கிடப்பது மடுவின் அடித்தளம். மதுரையின் பெருமை யெல்லாம் பழங்கதையாய்ப் போயிற்று. கவிப்பெருஞ் சிங்கமாய், திருப்பதி முதல் கன்னியா குமரிவரை திக்கு விஜயஞ் செய்துள்ள தங்கள் பெருமையை அறிய வல்லார் இங்கு எவரும் இல்லை. காஞ்சியா நகரில் கவிச்சக்கரவர்த்திப் பட்டம் பெற்ற ஒட்டக்கூத்தர் குலத்திற் பிறந்தவர் ஒருவர் இருக்கிறார். 'அடுக்கு மொழி ஆனந்தக் கூத்தர்' என்று அவரை அறிந்தோர் அழைக்கிறார்கள். அவர் கொடுக்கும் பட்டம் இப்பொழுது எல்லோராலும் மதிக்கப்படுகிறது. தாங்களும் அவரைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்களே!

கவிராயர் :—' இது நல்ல யோசனை. காஞ்சிமா நக ரம் கல்விக்குப் பேர்போன இடம். ஆனந்தக் கூத்தன் ஒட்டக்கூத்தருடைய மகள் வழியிலே வந்தவன். ஆயினும், ஒட்டக்கூத்தர் உடம்பில் ஓடிய இரத்தத் திலே ஒரு துளியேனும் அவருடம்பில் ஓடாதிருக் குமா? இன்றே போய் அவரைப் பார்க்கிறேன்' என்று எழுந்து கோடையிடியிடம் விடைபெற்றுக் காஞ்சிமா நகர்க்குச்சென்றார். அப்பொழுது அடுக்குமொழிக் கூத்தர் காலிற்புண்பட்டுப் படுக்கையில் இருந்தார். சரமகவிச் சிங்கம் அங்கிலையிற் காணவந்தது ஒரு துர்ச்சகுனம் போல் அவருக்குத் தோன்றியது. ஆயினும் கவிராயரை உள்ளே வரவழைத்து " பங்கமில்லாப் பாட்டிசைக்கும் சிங்கமே! வருக ; தங்கமா முடியில் வைகும் தங்கமே! வருக " என்று அடுக்குமொழி கூறி வரவேற்றார்.

கவிராயர் :—

" அடுத்து மொழிபெருக்கும் ஆனந்தக் கூத்தா கேள்
படுத்தபடி யறிந்தும் பாடுரைக்க வந்தோம் யாம்
எடுத்தபெருங் கவிபாடி ஏற்றமுற்ற கூத்த ருடன்
தொடுத் திலங்கும் பேறெமக்குத் தோன்றால்
அருளாயே "

என்று தன் கருத்தைத் தெரிவித்தார்.

அடுக்குமொழி :—'சகல பந்த சரபமே! இந்நிலவுலகில் நின்னைப்பார் பிறர் இன்றி நீயே யானாய்! கவிச் சக்கரவர்த்தி யென்று புவிச் சக்கரவர்த்திகள் பாராட்டிய ஒட்டக்கூத்தருக்குப் பின் அப்பட்டம் எவரையும் சென்றடைந்த தில்லை. இன்று கவியுலகத்தில் சக்கரவர்த்திப் பட்டம் பெறுவதற்குத் தங்களைத் தவிரத் தகுதியுடையவர் வேறு யார் உள்ளார்? தில்லைவாழ் அந்தணர் சந்நிதியில், தமிழ்ச் சங்கப் புலவர்கள் முன்னிலையில் தங்களுக்கு அப்பட்டம் அளிக்கப்பட வேண்டும். அதற்குரிய ஏற்பாடுகளைச் சிதம்பரத்தில் செய்வீர்களானால் அடியேன் கால்நோய் தீர்ந்துவந்து அக்காட்சியைக் கண்குளிரக் காண்பேன்' என்றார்.

அடுக்குமொழிக் கூத்தர் சொல்லியது கவிராயருக்கு மிகப் பொருத்தமாகத் தோன்றிற்று. "எல்லையற்ற பெருமையுடையது தில்லையம்பதி; சபைகளிற் சிறந்தது அங்குள்ள கனகசபை; அச் சபாநாதர் அகிலலோக நாயகர். இப்படிப்பட்ட பொன்னம்பலத்திலே, தில்லைவாழ் அந்தணர் சபையிலே நான் பெறும் பட்டம் உலகம் உள்ளவரையும் அழியாததாகும்" என்று எண்ணினார்; உடனே சிதம்பரத்தை நோக்கி எழுந்தருளினார்.

அங்கு தீட்சித சிரோமணியாய் விளங்கிய சபாரஞ்சித தீட்சிதரிடம் சென்று தன் ஆசையை வினயமாய்த் தெரிவித்தார். அவரும் கவிச்சக்கரவர்த்திப் பட்டம் கொடுக்கும் பெருமை தமக்குக் கிடைத்ததைக் குறித்து அடங்காத மகிழ்ச்சி கொண்டார். "சிதம்பரத்தில் ஆனி மாசம் நடக்கும் திருமஞ்சனத்திற்கு அடுத்த நாள் ஆயிரக்கால் மண்டபத்தில் தோணிபுரித் தோன்றல் ஸ்ரீ பொன்னப்பக் கவிராயருக்குக் கவிச்சக்கரவர்த்திப் பட்டம் கொடுக்கப்படும்" என்று சபாரஞ்சித தீட்சிதர் அறிக்கையும் அழைப்பும் அனுப்பினார். குறிப்பிட்ட நன்னாளில் திருநெல்வேலியிலிருந்து அபிநவ கம்பரும், மதுரையிலிருந்து கோடையிடிக் கவிராயரும், காஞ்சியிலிருந்து அடுக்குமொழி ஆனந்தக் கூத்தரும், சென்னை வரகவி (வறட்டுக் கவி யென்றுசிலர் சொல்வார்கள்) வரதராஜ முதலியாரும் வந்திருந்தார்கள். பட்டம் பெற வந்திருந்த கவிராயரைத் தவிரப் பன்னிரண்டு சிரோமணிகள் ஆயிரக்கால் மண்டபத்தில் விஜயம் செய்திருந்தார்கள். சுபயோக சுபமுகூர்த்தத்தில் மாட்சிமை தங்கிய தீட்சிதப் பெருந்தகையார் நீண்ட கரகோஷத்தின் இடையே எழுந்து பட்டுச்சால்வையைக் கவிராயர் தோளிலே போர்த்து, கட்டிச் சாமந்தி மாலையை அவர் கழுத்தில் அணிந்து, "வித்வசிரோமணிகளே! சகல பந்த சாபம், சரமகவிச் சிங்கம், தோணிபுரி தழைக்க வந்த தோன்றல், ஸ்ரீ பொன்னப்பக் கவிராஜ மூர்த்திகளுக்கு நடராஜர் சந்நிதியிலே கவிச்சக்கரவர்த்தி என்ற பட்டத்தை நாம் சூட்டினோம். இன்று முதல் என்றென்றும் இவரைக் கவிச் சக்கரவர்த்தி யென்று காசினி வழங்கக் கடவது" என்று ரஞ்சிதமாகப் பேசி முடித்தார். அடுக்குமொழிக் கூத்தர் அதை ஆமோதித்தார். ஏகமனதாக அகஸ்தியர் மாணாக்கர் போல் சபையில் வீற்றிருந்த பன்னிருவரும் சிரக்கம்பம் செய்தார்கள். கோடையிடிப் புலவர் வந்தனம் முழக்கினார். சந்தனப் பூச்சுடனும் கொட்டுமுழக்குடனும் வித்வ்சபை கலைந்தது. கவிச்சக்கரவர்த்தி பட்டுச்சால்வையோடு நடராஜரைத் தரிசித்து விட்டுத் தம் இருப்பிடம் சென்றார்.

பட்டம் பெற்ற கவிராயர் முன்னிலும் வேகமாகக் கவிசொல்லத் தொடங்கினார். அச்சுக்கடங்காமல், அவர் குடியிருந்த மச்சுக் கடங்காமல் பாட்டுக் குவிந்து கொண்டிருந்தது. கங்குகரை யில்லாமல் எழுந்த கவி வெள்ளத்தை எந்த அச்சுக்கூடமும் எடுத்தணைத்துக் கொள்ள முடியவில்லை. அச்சுச்சாலை தோறும் அலைந்து கவிச்சக்கரவர்த்தி அலுத்துப்போனார். சலித்த நிலையில் தாமே ஒரு அச்சுக்கூடம் வைத்து விடலாம் எனத் தோன்றிற்று.

> "மிச்சமின்றிச் சொச்சமின்றி—அச்சடிப்போமே
> மச்சு வீட்டில் அச்சடிப்போமே"

என்று பாடிக்கொண்டு ஒரு பலகையில் 'காதல அச்சுக்கூடம்' என்றெழுதித் தாம் குடியிருந்த மேடையிலே தொங்க விட்டார். அந்த அச்சுக்கூடத்தில் கவிச்சக்கரவர்த்தி பாட்டைத் தவிர வேறெவர் பாட்டும் அடிபடவில்லை. காதல அச்சுக்கூடத்தினின்றும் வெளிப்பட்ட 'தோணிபுரித் தலபுராணம்' என்னும் நூலை அண்ணாமலைச் சர்வகலாசாலை ஆசிரியர் ஒருவர் வாங்கிப்பார்த்தார். நூல் முழுவதும் கவிச்சக்கரவர்த்தி கைப்பட மணிமணியாக எழுதப்பட்டிருந்தது. காதல அச்சுக்கூடம் என்ற தொடரின் பொருள் அப்பொழுது தான் விளங்கிற்று.

அண்ணாமலைக் கலாசாலையில் காரிகை படித்த ஒரு வித்துவான் தற்கால உலகப் போக்கைத் தெரிந்து 'வரவர மாமியார் கழுதைபோல் ஆன கதை'யை ஒரு காவியமாகப் பாடி 'கர்த்தப மகாகாவியம்' எனப் பெயரிட்டு, கவிச் சக்கரவர்த்தியிடம் அதற்குச் சிறப்புப் பாயிரம் பெறக் கருதிக் காதல அச்சுக்கூடத்திற்குச் சென்றான். கவியரசர் அக்காவியத்தைப் படித்துப் பார்த்தார். "அம்பிபுரம் என்ற ஊரில் ஒரு அம்மாமியைப் பேய் பிடித்திருந்தது; பேயை ஓட்ட வந்த மந்திரவாதி ஒரு மந்திரம் சொல்லிக் கொடுத்தான்; அந்த மந்திரத்தின் உரு ஏறஏற அம்மாமி உருவம் சிறிது சிறிதாக மாறியது; நாற்பதாவது வயதில் அவள் நல்ல கழுதையானாள்; இரவும் பகலும் கர்த்தப அம்மாமி கத்தியதெல்லாம் கவியாக இருந்தது; ஆயினும் ஊரார் அந்த உபத்திரவம் பொறுக்கமாட்டாமல் ஒன்று சேர்ந்து ஆலோசித்து அம்மாமிக் கர்த்தபத்தைக் காட்டுக்கு அடித்து ஓட்டினார்கள். அம்பிபுரத் தம்மாமி—ஒப்பாரிக் கற்பகம்—ஓயாதமாணிக்கம் — கர்த்தபக் கவிச்சக்கரவர்த்தினி — காடு சேர்ந்து கனைத்துக் கொண்டிருந்தாள்" என்பதாகக் காவியம் முடிந்திருந்தது.

காவியத்தைப் படித்து முடித்துக் கவிச்சக்கரவர்த்தி சிறிது யோசித்தார். 'நாளை வாரும், பேசிக் கொள்ளலாம்' என்று சொல்லிக் காவிய கர்த்தாவை அனுப்பிவிட்டு, அன்றிரவே காதல அச்சுக்கூடத்தைக் கட்டிச் சுருட்டிக்கொண்டு சிதம்பரத்தைவிட்டுப் போய் விட்டார். கவிச்சக்கரவர்த்தி 'எங்கே எங்கே' என்று தில்லையில் எல்லோரும் கேட்கிறார்கள். எதிரொலியும் 'எங்கே' என்கிறது.



# கொலுப் பொம்மைகள்

(கொத்தமங்கலம் ஸ்ரீ எஸ். எம். சுப்பிரமணியம்)

நவராத்திரி நாளில் நள்ளிரவு வேளையிலே
யுவராய்த் திரிவரெல்லாம் உற்சாகங் கொள்கையிலே
சுவரோரத் தேயிருந்து சிறிய இசை கேட்டிடவே
எவரோ ? எனத்தெரிவா னெழுந்திருந்து கேட்டேனன். (1)

பொம்மை கொலுவிருக்கும் புறமதிலே குரல்கேட்க
இம்மைச் சிரமமெல்லாம் இனியில்லை திருடர்களால்
செம்மைக்கு ஆகுமெனச் சித்தப்படுத்தி நின்றேன்
அம்மைகுரல் போலோர் அமுதமொழி கேட்டதங்கே. (2)

கோவைக் கனிஉதட்டைக் கோதித் திதிப்புண்ணத்
தாவிக் குதிக்கவெண்ணும் தத்தையொன்று தொண்டையிலே
மேவித் தவமிருந்து மிழற்றுகின்ற பசுமொழியோ ?
நாவின் மடலூற்று நலம்பொசிந்து வருந்தேனே ? (3)

பொம்மைகாள் உங்களுக்குப் பொதுவினிலே சொல்லுகிறேன்
இம்மைவாழ் வருக்கமெல்லாம் இறையவன்முன் ஒருகுலமே
செம்மையாய் எம்முடைய செய்தியதை உலகரிய
உம்மைநாம் ஒன்ருக உட்கார்த்தி வைத்திட்டோம். (4)

வஞ்சகமும் பொய்யும் வலியவராய்ச் சுரண்டுவதும்
நெஞ்சகத்திலே இருளும் நேர்மையிலா வழிப்போக்கும்
பஞ்சத்தி லிலாபம்வைத்துப் பலபொருளே விற்பதுவும்
பஞ்சாங்கம் புரட்டாக்கிப் பணம்பறிக்கும் பாழ்ச்செயலும். (5)

வயல்பாயும் நீர்தேக்கி மரக்கலம் விட்டாடல் முதல்
செயல்புரியும் மனிதனின்றிச் சிறுமண்ணுய்ப் பிறந்ததினுல்
இன்ப மடைந்தீர் ஏழைகளுக் குணவீந்தீர்
துன்பப்பிறவி விட்டுத் துரைமகன் போலானீர்நீர். (6)

கொலுவிருக்கும் சித்திரங்காள் கும்பிடுக்கோர் கணக்குண்டோ
வலுவிலுமைக் காணவரும் மங்கையர்தாம் கொஞ்சமுண்டோ
அலங்காரப் பெண்களுமக் காலாத்தி எடுக்கின்ருர்.
நிலங்காக்கும் புரவலன்போல் நிமிர்ந்திருக்கும் பதுமைகளே. (7)

சித்திரத்தில் மனுவாயும் தீயசெயல் விட்டதனுல்
பத்திரமாய் உமைவைத்துப் பலர்தொழுதல் பார்த்திடுவீர்
என்ருள் என்தாயார் ஏனம்மா எனப்புதுமை
குன்ருத இளமையினுள் குமுதமுகை வாய்திறந்தாள். (8)

கணிதத்தை அறிவதற்கே காட்டுகின்ற எண்போலும்
ஓவியத்தை வரைவதற்கு ஒருகோடு இழுப்பதைப்போல்
பாவினியல் காணுதற்கே பழமொழியைத் தந்ததுபோல்
கருத்தறியவே முதலில் கண்ணுடி காட்டுதல்போல். (9)

கல்லாலே சிலேவைத்துக் கடவுளெண்ணம் ஊக்குதல்போல்
கவிதைக் கற்பனே அறியக் கனவென்று ஒன்றீந்தேன்
தூங்குகின்ருர் நண்பகலில் சொப்பனமும் காணுகின்ருர்
ஏங்குகின்ருர் உளறிவிழுந் தெழுந்திருந்து ஓடுகின்ருர். (10)

கற்பனேக ளுங்காணேன் கவிதைகளே யுங்காணேன்
சொற்றிறமே பேசியவர் சோற்றிற்கே சண்டைசெய்வார்
விற்றிறமை பெறுவதற்கென் விற்புருவம் பணிவதில்லே
மனிதரவர்க் கீந்ததெல்லாம் மணல்வார்த்த நீராச்சே! (11)

என்றதுமே பொம்மையெலாம் எங்கிருந்தோ உயிர்பெற்றே
நன்றிசொலும் கடன்கழிக்க நமஸ்காரம் செய்ததுவே
நவகோடிப் பொம்மையது நடுக்கும் குரலெடுத்து
அவகேடு பாடுதல்போல் அதட்டிமொழி பேசியதே. (12)

பணம்படைத்த பெரியவன்யான் பக்கிகள்நீர் என்பக்கம்
இடம்படைத்தல் சரியாமோ இறங்குங்கள் கீழ்எனவே
குணம்படைத்த எலும்புருவக் குடியானப் பொம்மையதற்
கிணங்கமறுத் தெதிர்பேச எழுந்திருந் ததைக்கண்டேன். (13)

வயலுழுது பரம்படித்து வாய்த்தவெருத் தழையூட்டி
பயல்உனக்குப் பாடுபட்டுப் பசிநீக்கிச் சோறிட்டேன்
அயலிருக்கச் சம்மதியாய் அணிபுனையச் சம்மதியாய்
செயலிதற்கிங் கிடமேது தேவியர்முன் சமமலவோ. (14)

தலையாட்டி தடிப்பொம்மை தடுமாறிப் புகலுவது
நிலையாக்க உடலமிதை நிச்சயமாம் வழிசொல்வேன்
மலையாது எவரெவர்வாய் வார்த்தையெது வானாலும்
தலையாட்டித் தாளமிடில் தழைத்திடலா மறிவாய்நீ. (15)

சிறியவர்கள் கைப்பிடித்தே சிரமமெல்லாம் செய்கின்றார்
வரிவரியாய்த் துணிசுற்றி வாய்போலே நார்கட்டி
கறபறவென் றிழுத்தோடிக் கையொடித்து மூக்குடைக்கும்
சிரமமினி யில்லையென்றே சிரித்ததங்கே மரப்பாச்சி. (16)

ஜப்பானி னிறக்குமதிச் செலுலாய்டுக் குழவியொன்று
அப்பாடி எனத்தனது அங்கமெல்லாம் நடுநடுங்க
இப்பாடு பட்டுஇங்கு இருந்தெனக்கும் நிம்மதியோ
எப்பாகிலும் விளக்குக் கிரையாகா திருப்பேனோ? (17)

பாற்காரப் பொம்மை பக்கம்பார்த்துக் கன்றுதனை
தோற்கடாரிப் பையாக்கத் துணிந்ததுவே யோசித்து
நாற்காலிப் பொம்மையின்மேல் நாயேறி உட்கார்ந்து
ஊர்க்காலிப் பயல்களைப்போல் ஊளையிடலானதுவே. (18)

கோடியி லிருந்தபூனை குதித்துக்கிளி மேல்பாய்ந்து
சாடியதது வேதானோ சங்கரனணிந்த தோலோ
ஓடியே தலையிற்சந்திரன் உள்வளர் முயலைக்கவ்வ
நீடிய திருமாலூர்தி விநாயகன் மூஷிக நோக்க (19)

இந்திரன் யானைமேலே இமையவன் யாளிபாய
செந்திரு விருக்கைதன்னுள் ஐந்தருச் சுரும்புசேர
விந்தையாய் மதனன்வில்லை வேழங்கை விட்டேவாங்க
இந்தமாய் மாலமெல்லாம் எழிலுற நடக்கக்கண்டேன், (20)

கொலுவெல்லாம் கலைந்துகொட்டிக் கும்மாளம் போடத்தேகம்
வில்விலத் திரைப்புமேலாய் மேலெலாம் வெயர்வாருக
நிலுவையில் பொம்மைவிற்றோன் நிலைமையைப் போலேநின்றேன்
குலுகுலு நகைத்தே தேவி கோயிலுட்செல் வேனென்றாள். (21)

என்றது அவள்குரல் சென்றது மாயை
வென்றது அறிவு நன்றிது நன்றே
கல்லும் கடலும் புல்லும் புனலும்
அல்லும் பகலும் அனைத்துமே அவளுரு. (22)

# இராமாயணமும் அஹிம்ஸையும்

(ஸ்ரீ வே. நாராயணய்யர், எம். ஏ., எம். எல்.)

மஹாத்மா காந்தி கையாளும் அஹிம்ஸையின் ஸ்வரூபத்தைப் பலரும் ஸ்ரீ கீதையைக் கொண்டு அளவிட்டறிய முயல்கின்றனர். அவ்வாறு முயல்வதிலே ஒரு சங்கடம் எழுகின்றது. ஸ்ரீ கீதாசாரியனுடைய உபதேசத்தின் பலன் அர்ஜுனன் பாரதப்போர் புரிவதேயாம். அர்ஜுனனை வியாஜமாகக் கொண்டு வேதாந்த வுண்மைகளை உலகருக்கு விளக்குவதே ஸ்ரீ கீதையின் நோக்கமென்றுகொண்டாலும் இந்தச் சங்கடம் முற்றும் நிவர்த்தியாவதில்லை. இதை விடுத்து, ஸ்ரீ ராமாயணத்தினின்று இவ்வஹிம்ஸா தருமத்தை ஐயந்திரிபற விளக்கும் இரண்டு சிறந்த உதாரணங்களை இங்கு எடுத்துக் காட்டுவேன்.

ஒருவனுக்கும் யாதொரு தீங்கும் நேரிடக்கூடாது என்று மனதிலே கொண்டு அதன்படி நடத்தலே அஹிம்ஸா தருமம் ஆகும். அஹிம்ஸையே உருவெடுத்தாற் போன்றவள் சீதாப்பிராட்டி. அசோக வனத்திலே பல கொடூரமான வார்த்தைகளைப் பேசுகிறான் இராவணன். அவ்வளவையும் கேட்டும் இராவணனுக்குத் தீங்கு நேரவேண்டுமென்ற எண்ணம் பிராட்டிக்கு உண்டாகவில்லை. "ஸ்ரீராமன் தருமமறிந்தவன்; சரணாகத வத்ஸலன். அவனிடம் என்னைக் கொண்டுபோய்ச் சேர்த்துவிடு" என்று ஹிதோபதேசம் செய்கிறாள். "அஹிம்ஸையை பலஹீனர்கள்தாம் கைக்கொள்வர் என்று பலோன்மத்தர்கள் பரிகசிக்கிறார்கள் அல்லவா? அதற்கு அனுகுணமாக இருக்கிறதே சீதாப்பிராட்டியின் வசனமும் அனுஷ்டானமும்" என்று சிலர் நினைக்கக்கூடும். வாஸ்தவம்; பிராட்டி அபலைதான்; அவள் அஹிம்ஸை முறையைக் கையாண்டாள். ஆனால், தன் பலத்தாலேயே பிராட்டி இராவணனைச் சங்கரிக்க முடியும்; "சாம்பலாக்கத்தக்க உன்னைச் சாம்பலாக்கவில்லை; அதற்குக் காரணம் நான் பலஹீனையானதால் அன்று; உன் தவத்தைப் பாதுகாக்கவும் கடவுளின் சக்தி மாசுபெறாதிருக்கவுமே நான் உன்னை எரியாது விடுத்தேன்" என்கிறாள் தேவி. அஹிம்ஸையே பிராட்டியின் தவம்; அஹிம்ஸை விரதத்தை மேற்கொண்டோர் கடவுளின் சக்தியிலே நம்பிக்கை கொண்டவர்கள். அஹிம்ஸா தர்மத்தை மேற்கொண்டவனுக்கு நாசம் இல்லை; கடவுளே அவனை ஹிம்ஸிப்பவர்களை நாசஞ்செய்கிறார். அஹிம்ஸா விரதங்கொண்டவர்களையே ஸ்ரீ கீதை 'ஸாதுக்கள்' என்று கூறி அவர்களைப் பரித்திராணஞ் செய்தற்கும் அவர்களுக்குத் தீங்கு செய்வோர்களை விநாசஞ் செய்தற்கும் இவ்விரு வகையாலும் அஹிம்ஸா தர்மத்தை நிலைநாட்டவுமே பகவான் உரிய காலங்களிலே அவதரிக்கின்றார் என்று உறுதி கூறுகின்றது. இவ்வுண்மையைத் தெளிவாக்கவேபோலும் அடுத்து பகவான் புத்தாவதாரம் செய்ததும். அஹிம்ஸையின் நிஜஸ்வரூபத்தை சீதாப் பிராட்டியினும் நன்கு விளக்குவோர் தண்டகாரணிய முனிவர்கள். இவர்கள் ஸ்ரீராமபிரானைச் சரணடைந்து, "அப்பா! இங்கேவா; அரக்கர்களால் ஹிம்ஸிக்கப்படும் இம் முனிவர்களின் சரீரங்களைப் பார்! ஸர்வரக்ஷகனான உன்னைச் சரணடைந்தோம். எங்களைக் காக்கவேண்டும்" என்று பிரார்த்தித்தார்கள். பொறுமையே இவர்களது பலம்; பொறுமையே இவர்கள் செய்த தவம். பொறுமை அஹிம்ஸையை அடிப்படையாகக் கொண்டது. "பிரதி ஹிம்ஸை செய்தால் தவத்திற்கு பங்கம் ஏற்படும்; அதனாலே தான் நாங்கள் அரக்கர்களை நாசஞ் செய்யவில்லை" என்கிறார்கள் இம்முனிவர்கள். இவர்கள் இப்படி அஹிம்ஸா தர்மத்தைப் பாதுகாத்ததால் கடவுளே வீரவேஷம் பூண்டு இவர்களைப் பாதுகாக்க முன்வந்தார். கடவுள் சொல்லுகிறார். "உங்களை அரக்கரிடமிருந்து காப்பது தான் என் வேலை. அதற்காகவே காட்டுக்கு வந்தேன்; 'பிதுரு வாக்கிய பரிபாலனம்' என்னும் வியாஜத்தை மேற்கொண்டு உங்களைக் காப்பற்றவே வந்தேன். எனக்கு ஆக்ஞையிடவல்ல நீங்கள் என்னையே இவ்வாறு பிரார்த்தித்தால் தகாது" என்று. எனவே, அஹிம்ஸா தர்மத்தைக் கைக்கொண்டால், அது வெறுமனே போகாது. கடவுளைத் தட்டி எழுப்பி ஏவிப் பணிகொள்ளுஞ் சக்தி அஹிம்ஸா விரதங் கொண்டவர்களுக்கு உண்டு. அந்தச் சக்தியினால் அஹிம்ஸா விரதிகளான ஸாதுக்கள் வெற்றி பெறுவது நிச்சயம். "அஹிம்ஸா சக்தி ஆயுத சக்தியினும் சிறந்தது. மந்திர தந்திர சக்திகளையும் கடந்தது" என்னும் உண்மையை மேற்கண்ட விருத்தாந்தத்தால் விளக்கிய பின், அகஸ்தியரின் பெருமையைப் புகழும் இராமபிரானுடைய பேச்சால் இதனையே வான்மீக முனிவர் மீண்டும் வற்புறுத்துகிறார்.

(௩௮-ம் பக்கம் பார்க்க)

# அழிவுற்றிருக்கும் சிம்பாபி !

(திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை)

தென்னாபிரிகா யூனியனின் வடக்கெல்லையாகிய லிம்போபா நதியினின்றும் சுமார் இருநூறு மைல் தூரம் வட பாரிசத்திலிருக்கும் (Fort Victoria) போர்ட் விக்டோரியாவுக்கு அணித்தாக, அழிவுற்றிருக்கும் **சிம்பாபி** ஸ்தலம் இருக்கின்றது. இவ்விடம், ரோடேஷியா கவர்ன்மெண்டுக்குச் சொந்தமானது. சுமார் நாலாயிரத்து ஐநூறு வருடங்களுக்குமுன் தமிழர் இத்தலத்தில் குடிகொண்டு வாழ்ந்தனரென்னும் தற்கால விஞ்ஞான ஆராய்ச்சியைக் கண்டு யாவரும் வியப்புறுவரென்பது திண்ணம். சிம்பாபி குன்றுகளின் சூழலில் நாகரிகம் வாய்ந்த சனத்திரள் நெடுங்காலத்திற்கு முன்னர் வந்திருந்த அறிகுறிகள் பல காணப்படுகின்றன. அழிந்தும், தகர்ந்தும், சரிந்தும் பலகட்டிடங்கள் பாழடைந்து கிடக்கின்றன. இவைகளிற் சில கர்ப்பக்கிரகம் போலவும், சில கோபுரம் போலவும், இருக்கின்றன; நீண்டனவும் வளைந்தனவுமான சில மதில்களும் இருக்கின்றன. பலமானபுறச்சுவர்களும், தாழ்வாரங்களும், மாடச்சுவர்களும் இருக்கின்றன. கட்டிடங்களெல்லாம் கருங்கல்லால் பலமான அஸ்திவாரத்தின் மேல் கைதேர்ந்த சிற்பிகளால் கட்டப்பட்டவை. வீடாக உபயோகித்த கட்டிடங்களெல்லாம் அழிந்து கிடக்கின்றன. இப்போதிருக்கும் பலமான கட்டிடங்கள் தெய்வ வணக்கம் செய்யும் கோவிலாகவும், யுத்த அரண்களாகவும் உபயோகப் பட்டிருக்கலாமென்று அறிஞர்கள் யூகிக்கின்றனர். இவைகளை அமெரிக்கா யாத்திரிய வேட்டைக்காரராகிய **ஆடம் ரேண்டர்** என்பவர் 1868-ம் வருடத்தில் முதன் முதலாகக் கண்டனர். ஆனால், செடி கொடிகள் சூழ்ந்து மரங்களும் புதர்களும் அடர்ந்து பயங்கரத் தோற்றமாயிருந்தபடியால் இவர் அவ்விடத்தை அணுகி நன்றாய்ச் சோதிக்க விரும்பவில்லை.



ஆயினும் சென்ற போயர் யுத்தத்தின் பிறகு அவ்விடம் ஐரோப்பியர் அமெரிக்கர்களுக்கு நன்கு தெரியலாயிற்று. அக்கட்டிடங்களுக்குள் புதையலிருப்பதா யறிந்து வெள்ளையர் பலர் புகுந்து சுவர்களை இடித்தும், குடைந்தும் பின்னப் படுத்துவராயினர். இஃதறிந்த கவர்ன்மெண்டார் அனுமதியின்றி அத்தலத்தில் யாரும் பிரவேசிக்கக் கூடாதென்று தடையுத்தரவு பிறப்பித்ததோடு, உத்தரவு பெற்றுச் செல்வோர் நடந்துகொள்ள வேண்டிய சட்டமும் செய்து காவல் செய்திருக்கின்றனர். மேலும் உத்தியோகஸ்தர்களை நியமித்து அங்கே அகப்படும் சரித்திர ஆராய்ச்சிக்குரிய பொருள்களைக் கண்டெடுக்கச் செய்து காட்சிப் பொருட்சாலையில் வைத்திருக்கின்றனர். அகப்பட்ட அரும் பொருள்களில் பொன்னால் செய்யப்பட்ட ஆபரணங்களும் இருக்கின்றன. அவைகளைச் சுமார் நாலாயிரம் பவுன் மதிப்பிட்டிருக்கின்றனர். அவ்வாபரணங்களே சரித்திர ஆராய்ச்சிக்குப் பெரிதும் உதவி புரிகின்றனவாம்.

சென்ற பல வருடங்களாக விஞ்ஞான அறிஞர்களும், புடவி தத்துவ ஆராய்ச்சி வல்லாரும் அந்த ஸ்தலத்தின் பூர்வ வரலாறு கண்டறிய முயன்று வருகின்றனர். இவர்களில் சிலர் அக்கட்டிடங்களைக் கட்டியவர் பூர்வ ஈஜிப்ட்டியரென்றும் பாபிலேனியரா யிருக்கலாமென்றும், அராபியரென்றும், இந்தியர்தானென்றும் அவரவர்க்குத் தோன்றியவாறு கூறிப் போந்தனர். ஆனால், விடாமுயற்சியாய் நுணுகி ஆராய்ந்தவர்களுள் ஜெர்மன் ஆராய்ச்சிக் கழகத்தைச் சார்ந்த டாக்டர் பிரோபினேஸ் என்பவரும், பிரிட்டிஷ் ஆராய்ச்சிக் கழகத்தைச் சார்ந்த மிஸ் காட்டன் தாம்ஸன் என்னும் மாதும் முக்கியமானவர்கள். இவர்கள் ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொண்டவை மூன்று அம்ஸங்கள்.

முதலாவது அக்கட்டிடங்கள் எக்காலத்தில் கட்டப்பட்டவை ?

இரண்டாவது அவைகளைக் கட்டினவர் யாவர் ?

மூன்றாவது அவர்கள் இன்றளவும் அங்கே இல்லாமல் போனதற்குக் காரணமென்ன ? என்பனவேயாம்.

முதலம்ஸம் கிறிஸ்து பிறக்க இரண்டாயிரத்தைந்நூறு வருடங்களுக்குமுன் அக்கட்டிடங்

கள் கட்டப்பட்டன என்பதே. மற்ற ஆராய்ச்சியாளருக்கும் இது ஒத்த கொள்கையே.

இரண்டாவதுதான் வெகு முக்கியமானது. இதற்கு எழுத்து மூலமாய்ச் சான்று பகர எந்த ஆதாரமும் கிடைத்திலது. இந்நாட்டுச் சுதேசிகளிடம் அக்காலந்தொட் டிக்காலம்வரையில் அப்படிப்பட்ட கட்டிடம் கட்டும் சிற்ப அறிவு காணப்படவில்லை யாதலால், சுதேசிகளால் அவை கட்டப்பட்டனவல்ல வென்பது துணிபு. ஐரோப்பியரிடத்தும் அக்காலத்தில் வில் வளைவான மாடங்கள் அமைக்கும் சிற்ப ஞானம் இல்லாதிருந்தபடியாலும், இக்காலம் வரையில் சிம்பாபி வடிவமாய்க் கட்டிடம் ஐரோப்பாவில் கட்ட யாரும் விரும்பாததினாலும், ஐரோப்பியர் சம்பந்தம் அக்கட்டிடத்திலில்லை என்பதுந் துணிபாயிற்று. ஈஜிப்ட், பாபிலோனியா, அரேபியா முதலிய நாடுகளிலும் அனுமானப் பிரமாணம் காணப்படாமையால் அந்நாட்டினரல்லரென்பதும் துணிபாயிற்று.

ஜெர்மன் தேசத்து ஆராய்ச்சியாளர் இந்தியாவுக்குச் சென்றனர். வட நாட்டில் அனுமானங்கள் ஒவ்வவில்லை. தெற்கே தமிழ் நாடாகிய மங்களூரிலிருந்து திருச்செந்தூருக்குச் செல்லும் மார்க்கத்தில் பழமையான சில கட்டிடங்களைக் கண்டனர். தம்மிடமிருந்த படங்களுடன் ஒத்துப் பார்த்ததில் அனுமானப் பிரமாணங்கள் பொருத்தமாயிருந்தன. அக்கட்டிடங்களிலுள்ள பொம்மைகளுக்கு அமைத்திருக்கும் ஆபரணங்களும் சிம்பாபியில் கண்டெடுக்கப்பட்ட ஆபரணங்களும் ஒத்திருந்தன. அப்படிப்பட்ட ஆபரணங்கள் பலரணிந்திருக்கவும் கண்டனர். ஆகவே, சிம்பாபியில் நாலாயிரத்து ஐநூறு வருடங்களுக்குமுன் பலமான கட்டிடங்களைக் கட்டி வாழ்ந்தவர் நம் தமிழரே என்று தீர்மானித்தனர்.

இனி, மூன்றாவது அம்ஸத்தின் ஆராய்ச்சியாவது, சிம்பாபி ஸ்தலத்தைச் சூழ்ந்து முப்பது மைல் வரையில் பொன் எடுத்த அறிகுறிகள் காணப்படுவதாலும், கட்டிடங்களுக்குள் பொன் உருக்குத் துண்டுகள் கண்டெடுக்கப்பட்டிருத்தலாலும், தமிழர்கள் பொன் எடுக்கவே அங்குச் சென்றிருந்தனர்; பூமியின் ஆழத்தில் பொன் னெடுக்க நீர்ப்பெருக்கு இடந்தராததினால் அதன் மேல் பொன்னெடுப்பது அசாத்தியமென்று அவ்விடத்தை விட்டுப் போயினர் என்று ஒரு ஆராய்ச்சிக்காரர் கூறுகின்றார். சுதேசிகளின் போராட்டம் காலக்கிரமத்தில் பலத்திருக்க வேண்டுமென்றும் பெருந்திரளான சுதேசிகள் எதிர்த்தும் போர் செய்திருக்க நேர்ந்த காலத்தில் தத்தம் பொருள் முழுவதையும் எடுத்துப் போக முடியாமல் இயன்றளவு எடுத்துக்கொண்டு மற்றதை விட்டுப் போயிருக்க வேண்டுமென்றும் அகப்படும் ஆபரணங்களெல்லாம் உடைந்தும், முறிந்தும் பழுதுபட்டனவுமா யிருத்தலால் பலாத்காரத்தால் அப்படியாகி யிருக்க வேண்டுமென்றும், இரத்தக்கறை அதிகமாய்க் காணப்படுவதால் உக்கிரமான போர் நிகழ்ந்திருக்க வேண்டுமென்றும் மற்ற ஆராய்ச்சிக்காரர் கூறுகின்றனர்.

டெல்கோப்பேயிக்கும், பெயராவுக்கும் இடையிலிருக்கும் பழைய சோபாலா துறைமுகத்திலிறங்கி 250 மைல் தரை வழியாய்ப் போக்குவரவு வைத்திருந்த வழியின் அடையாளம் இன்னும் அனுமானிக்க இருக்கிறதென்றும் கூறுகின்றனர். அவர் அவ்விடத்தை விட்டகன்றதற்கு வேறு காரணங்கள் புலப்படவில்லையாம். எப்படியென்றாலும் அவர்கள் தமிழரே என்பது முற்ற முடிந்த கொள்கையா யிருக்கின்றது. சிம்பாபி என்பது சிம்மபுரி என்பதின் சிதைவா யிருக்கலாமென்று யூகிக்கவும் ஏதுவாகிறது. இன்றைக்கும் அங்கே சிங்கங்கள் மிகுதியா யிருப்பது பிரத்தியட்சம்.

இன்னும் சிம்பாபி அழிவின் ஆராய்ச்சி முழுவதையும் எழுதுவதாயின் பல வியாசங்களாய்ப் பெருகுமாதலால் நம் நேயர்கள் அவசியம் அறியக் கூடிய சிலவற்றை மாத்திரம் சுருக்கமாய் வரைந்தனன். இதனால், நம் பண்டைய தமிழ் மக்கள் வாணிபத்தின் பொருட்டும் மணியினங்கள், உலோகப் பொருள்கள் எடுக்கும் பொருட்டும் மரக்கலமூர்ந்து திரைநெடுங்கடலோடும் பழக்கமுடையாரென்று தமிழ்த் தொன்னூல்கள் உரைப்பது நிதரிசனமாய் விளங்குவதுணர்ந்து நம் வாசகர்கள் உவப்பெய்துவார்களென்று நம்புகிறேன்.

பூகோளம்

# கோள்கள்

(தினகரன்)

"கிரகம் பிடித்து அலைகிறான்" என்கின்றனர்; ஆம் கிரகங்கள் (கோள்கள்) சூரியனைச் சுற்றி அலைகின்றன. ஒளிநூலார் கண்ட 8000 விண்மீன்களுக்கிடையே, கோள்கள் (planets) மினுக்காமல் நிலவுகின்றன. மீன்கள், கோள்கள் எல்லாம் உதித்து 24 மணி நேரத்தில் ஒவ்வொன்றாய் அஸ்தமிக்கின்றன. எனினும் மீன்கள் இன்றிருந்த இடத்திலேதான் எப்போதும் இருந்து, ஒரே வரிசைப்படியே பவனி சென்று மறையும். கோள்கள் ஒரு நட்சத்திர மண்டலத்திலிருந்து மற்றொரு நட்சத்திரமண்டலத்திற்குத் தாவும். அவை சூரியனைச் சுற்றி வருவன. சூரியன் ஒரு விண்மீன். சந்திரன் அதன் ஒளியால் நிலவி, பூமியைச் சுற்றிவரும் துணைக் கோள், அல்லது உபக்கிரகம் (Satellite). சூரியனைச் சுற்றிவரும் ஒன்பது கோள்களைச் சென்ற பாடத்தில் அறிந்தோம். இப்பாடத்தில் அவற்றை விரிவாக ஆராய்வோம்.

கிரகங்களுக்கிடையே கணக்கற்ற **சிறுகோள்கள்** (Asteroids) உள்ளன. அவை மூன்றுமுதல் ஐநூறு மைல் குறுக்களவுள்ளன. இவற்றைத் தவிர கணக்கற்ற **எரிகற்கள்** (Meteors) உள்ளன, **வால்மீன்கள்** (தூமகேது Comets) உள்ளன. **தூமக்கண்ணாடியால்** (Comet Seeker) இதுகாறும் 1000 வால் நட்சத்திரங்களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். தூமகேது தலையின் குறுக்களவு மட்டும் 10,000 முதல் 80,000 மைல்கள் இருக்கும். எரிகற்கள் தூமகேதுவினின்றும் விழுவ வென்பர்.

கோள்களை இருவகையாகப் பிரிப்பர் :—(1) **புதன்** (Mercury), **சுக்கிரன்** (Venus), **பூமி** (Earth), **செவ்வாய்** (Mars) இந்நான்கும் சிறு கோளங்கள். இவை சூரியனை அடுத்து, 360 முதல் 1410 லட்சம் மைல்கள் வித்தியாசத்தில் உள்ளன. இவற்றுள் பூமி பெரிது; அடுத்தது சுக்கிரன்; பிறகு செவ்வாய்; பிறகு புதன். வியாழன், சனி, நெப்த்யூன், யுரானஸ், ப்ளூட்டோ இவ்வைந்தும் **பெருங்கோள்கள்.** இவை சூரியனிடமிருந்து 4840 முதல் 27,800 லட்சம் மைல் வித்தியாசத்தில் உள்ளன. பூமி வியாழனைவிட 1300 தடவை பெரிது, 300 தடவை அதிககனம்.




ஒரு அங்குலம் = 510,000,000 மைல்கள். சமீபத்திலுள்ள நக்ஷத்திரம் சூரியனிடமிருந்து இருக்கும் தூரம் 6 × 220 × 3 × 12 × 510,000,000 மைல்கள்.

1. புதன், 2. சுக்கிரன், 3. பூமி, 4. செவ்வாய், 5. வியாழன், 6. சனி, 7. யூரானஸ், 8. நெப்தியூன், 9. தூமகேது. 1. தூமகேதுவின் பெரிய வீதி, 2. தூமகேதுவின் சிறிய வீதி.

**புதன்** சூரியனுக்கு மிக நெருங்கியுள்ளது. அதன் ஒரு பக்கம் கதிர்வெப்பத்தால் கொதிக்கும், மறுபக்கம் சூடின்றி, ஒளியின்றி இருண்டு பனியுறைந்திருக்கும். இது உயிரற்ற கோள்.

**சுக்கிரன்** காலையும், மாலையும் பளிச்செனத் தோன்றும். சந்திரனுக்கு அடுத்தபடி இதுவே நமக்கு ஒளிமிகுந்து தோன்றும் விண்சுடராம். இது நமது பூமிக்கு மிகச் சமீபமாயுள்ளது.

அதைப் போன்று கெட்டியானது. இதை ஒரு தடித்த ஒளிப்படலம் சூழ்ந்து கொண்டுள்ளது. அதனாலேயே அது அப்படி பிரகாசிக்கிறது; அதை ஊடுருவி இக்கிரகத்தை ஆராய்வது கடினமாயிருக்கிறது.

**பூமி** நாம் இருக்கும் கிரகம். இது ஒவ்வொரு நாளும் தன்னைத்தானே சுற்றிக்கொண்டு சூரியனையும் 365¼ நாட்களிற் சுற்றி வருகிறது. இந்தப் பிரம்மாண்டத்தில் பூமி ஒரு எள்ளு மூக்குப் போன்றது. பூமியின் உள்ளே கனலும், மேலே மண்ணும் நீரும், சுற்றிலும் காற்றும் சூழ்ந்துள்ளன. முதலில் இது சூரியனிடமிருந்து சிதறிப்பிரிந்த நெருப்புருண்டையாயிருந்து நாளடைவில் நெருப்பாறிச் சுழன்று இறுகி இப்போதுள்ள நிலைமைக்கு வந்துள்ளது.

**செவ்வாயை**ப்பற்றி ஒளிநூலார் நன்றாக ஆராய்ந்துள்ளனர். செவ்வாயின் குறுக்களவு 4,260 மைல்; பூமியைவிட மிகச் சிறிது. செவ்வாயைவிடப் பூமி 7 மடங்கு பருமன், பத்து மடங்கு கனம் அதிகமானது. அது பூமியைப் போன்ற கிரகமே. அதில் மனிதரும் வசிக்க முடியும். அதன் நாள் பூமியின் பகலைவிட 40 நிமிஷங்களே அதிகம். அங்கே தாவரங்களும் காடுகளும் உண்டென்கின்றனர். அங்கே பனி அதிகம். அதன் பரப்பு பெரும்பாலும் வனாந்தரமாயிருக்கிறது. வறட்டு வனாந்தரமே செவ்வாய்க்குச் சிவப்பு நிறமளிக்கிறது.

**வியாழன்** மிகப் பெரிய கனமான கோள். மங்கிய மஞ்சள் நிறம்; பூமியைவிட 119 மடங்கு பருமன் அதிகம்; குறுக்களவு 88000 மைல். வியாழன் சூரியனை 12 ஆண்டுகளில் சுற்றிவரும். அதை ஒரு "வியாழவட்டம்" என்பர். வியாழனில் உயிர்கள் வசிக்க முடியாது. எரிமலைகள் அதிகம். வியாழனுக்கு 9 சந்திரர் உண்டு—நான்கு பெரியன, மற்றவை சிறியன.

**சனி** வியாழனுக்கடுத்தபடி பெரியது; குறுக்கு 7200 மைல்; பூமியைவிட 82 மடங்கு பரப்பதிகம்; 760 மடங்கு பருமனதிகம். இக்கிரகத்தைச் சுற்றிலும் முப்பட்டையான சுடர் வட்டம் காணும். அது எரிகற்கள், ஒளித்துகள் என்கின்றனர். இதற்குப் பத்துச் சந்திரர் உண்டு.

**யுரானஸ்** நான்கு சந்திரர் கொண்ட பெரிய கிரகம். குறுக்களவு 31,000 மைல். இதை லாப்ளாஸ் என்னும் அறிஞரே கிரகம் என விளக்கினார். **நெப்த்யூன்** 1846-ம் ஆண்டு கால் (Galle) என்பவரால் தொலை நோக்கியைக் கொண்டு காணப்பெற்றது. இதன் குறுக்களவு 33,000 மைல். இதற்கு ஒரே சந்திரன் உண்டு. **ப்ளூடோவை** 1930-ல்தான் கண்டனர்; அதன் தன்மை இனித்தான் தெரியவேண்டும். இப்பெரிய கோள்களின் பெரும்பகுதி இன்னும் ஆறாமல் இருக்கிறது. ஒரு காலம் பூமி குளிர்ந்து போகும்; இப்பெரிய கோள்கள் ஆறி, வசிக்கத் தக்கதாகும் என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

---

(௩௬-ம் பக்கத் தொடர்ச்சி)

வாதாபி இல்வலன் என்று இரண்டு ராக்ஷஸர்கள், உடன்பிறந்தவர்கள், தபோ பலத்தால் செருக்குற்று சில சாதுக்களைக் கொன்று தின்றார்கள். மற்றையோர் இவர்களுடைய ஹிம்சையைப் பொறுத்துக்கொண்டிருந்தார்கள்; ஹிம்ஸை செய்த இவர்கள் அந்த ஹிம்ஸையாலேயே அழிந்தனர். கடவுள் அகஸ்திய வடிவிலே வந்து அவர்களை அழித்துவிட்டார். வாதாபி அவருடைய வயிற்றுக்குள்ளே ஜீர்ணமாகி விட்டான்; இல்வலன் அவருடைய நெற்றிக்கண்ணால் எரிக்கப்பட்டான்.

"கடவுளின் அதிசய சக்தியைத் துணைக்கொண்டு அஹிம்ஸை வெல்லும்; ஹிம்ஸகர்கள் நாசமுறுவர். ஹிம்ஸைக்குப் பிரதி ஹிம்ஸை செய்வோரும் ஹிம்ஸகர்களே. இவ்வகையிலே விருத்தியடையும் ஹிம்ஸா பரம்பரையை வேரோடு நசிப்பதற்கு அஹிம்ஸா மார்க்கத்தினும் மார்க்கம் இல்லை" என்பதே இந்த இராமாயண விருத்தாந்தங்களின் தாத்பர்யம். இவற்றால் ஸ்ரீ கீதையின் தாத்பர்யமும் இதுவே என்று கொள்ள வேண்டும். சாதுக்களின் பரித்ராணத்திற்காகத் தோன்றிய அகஸ்தியர் போலவும், இராமபிரான் போலவும், கண்ணபிரான் தோன்றி, அர்ஜுனனை ஓர் நிமித்தமாகக் கொண்டு மகாபாரதப் போரை நடத்தி வைத்தார். இப்பொழுதும் அஹிம்ஸா தர்மத்தை மேற்கொண்டவர்களையெல்லாம் காத்தற்கே போலும் மீண்டும் ஒரு பிரளயப்போர் தொடங்கி யிருக்கிறது.

# *சீரகம்

சீரகச் செடி இந்தியாவில் எல்லாவிடங்களிலும் பயிராகின்றது. இதற்கு வாசனையுண்டு.

**குணம்:**—இதனுல் பித்தசாந்தி ஆகும். அரோசகம், வயிற்றுவலி, வாய்ரோகம், பிலீக நோய், சுவாசம், காசம், கல்லடைப்பு, சீதரத்த கிரகணி, கம்மல், வாதாதிக்கம், பீநசநோய், பைத்தியம், இவை விலகும். சரீரத்துக்கு வலுவைத் தந்து, கண்ணுக்குக் குளிர்ச்சியையும் உண்டுபண்ணும்.

வாந்தி யருசிகுன்மம் வாய்நோய்பி லீகம்இரைப்
பேந்திருமல் கல்லடைப்பி லாஞ்சனம்உட்-
[சேர்ந்தகம்மல்
ஆசனகு டாரியெனும் அந்தக் கிரகணியும்
போசனகு டாரியுண்ணப் போம்.

வாயுவொடு நாசிநோய் வன்பித்தஞ் சேராது
காயம் நெகிழாது கண்குளிருந்-தூயமலர்க்
காரளகப் பெண்மயிலே கைகண்ட தித்தனையுஞ்
சீரகத்தை நீதினமுந் தின்.

**வ-கு:**—நன்ருய்ப் புடைத்தெடுத்த சீரகம் பலம் 5, இதை இஞ்சிச் சாற்றில் ஊறவைத்து உலர்த்திப் பிறகு முசுமுசுக்கைச் சாற்றில் ஒரு நாள் ஊறவைத்து உலர்த்தி எடுத்துக்கொண்டு, அத்துடன் ஏலம், சுக்கு, திப்பலி, மிளகு, கோட்டம், நெல்லிமுள்ளி, நெற்பொரி, வில்வப்பழத்தோல் இவைகளின் சூரணம் வகைக்கு 2 வராகனெடை சேர்த்து ஒன்ருய்க் கலந்து சூரணத்துக்குச் சமன் வெள்ளைச் சருக்கரை சேர்த்து வேளைக்கு ஒன்று முதல் 2 வராகனெடை வீதம் தினம் காலை, மாலை இருவேளையும் கொடுக்க மேற்கண்ட ரோகங்கள் போம்.

சீரகத்தைக் கையாந்தகரைச்சாற்றில் ஊறப்போட்டு எடுத்த சூரணம் ஒரு வராகனெடை, சருக்கரை $\frac{1}{2}$ வராகனெடை, சுக்குச் சூரணம் $\frac{1}{2}$ வராகனெடை இம்மூன்றையும் கலந்து தினமிருவேளையும் உட்கொள்ள, காமாலை, வாயு, உட்சுரம் தீரும்.

சீரகம், சுக்கு, ஏலம், நெல்லிமுள்ளி இவைகளின் சூரணம் சமனெடை எடுத்து, அவ்வளவிற்குப் பாதி சருக்கரை சேர்த்துத் திரிகடிப்பிரமாணம் காலை, மாலை கொள்ளப் பித்தம் சாந்தியாகும்.

சீரகம், ஏலம், பச்சைக்கற்பூரம் இவைகளின் சூரணம் சமபாகம் எடுத்து, நேர்நிறை சருக்கரை சேர்த்துத் திரிகடிப்பிரமாணம் காலை, மாலை சாப்பிட மந்தவாயு தீரும்.

சீரகத்தைப் பொடித்து வெண்ணெயில் கொடுக்க எரிகுன்மம் நீங்கும்.

சீரகம், குறுந்தொட்டிவேர் சமனெடை கூட்டிக் கஷாயஞ் செய்து சாப்பிட மூன்று நாள் 6 வேளையில் குளிர்சுரம் நீங்கும்.

சீரகம் பலம் 1, உப்பு தேவையான அளவு சேர்த்தரைத்து நெய்விட்டுத்தாளித்து, தேன் அல்லது சருக்கரையுடன், வாத பித்த ரோகங்களுக்கு உபயோகிக்கலாம்.

சீரகம் பலம் $1\frac{1}{2}$ இதைப் பழச்சாற்றிலரைத்து, நல்ல வெல்லம் பலம் $\frac{1}{2}$ சேர்த்துப் பிசைந்து, புதுச் சட்டியில் அப்பி 3 நாள் வெயிலில் காய வைத்து எடுத்து வெருகடிப்பிரமாணம் காலை, மாலை 10 நாள் சாப்பிட, பித்தவெட்டை, மேக வெட்டை, கைகால் குடைச்சல், எரிச்சல், குலை எரிச்சல் முதலிய நோய்கள் நீங்கும்.

ஒரு படி சீரகத்தைத் துணியில் மூட்டை கட்டிப் பாலில் 12 மணி நேரம் ஊற விட்டு எடுத்து, மூட்டையோடு பிசைந்து, பிசைந்து, சுத்த நீரில் மூன்று விசை அலம்பி எடுத்து, இடித்து நீர்விட்டு மைப்போல் அரைத்து, சட்டியிவிட்டுச் சிறு தீயில் வெதுப்பித் தக்க அளவு நெய்விட்டுப் புட்டுப்போல் சிவந்தபின், இறக்கி எடுத்த எடைக்குப் பாதி கற்கண்டு கூட்டித் திரிகடிப்பிரமாணம் காலை, மாலை கொடுத்து இச்சாபத்தியம் வைக்க, பித்தவெட்டை, உட்காச்சல், உள்வேட்கை, உள்வறட்சி, இருமல், நீர்மேகம், நீர்க்கட்டு, சருவ உஷ்ணரோகமும் நீங்கும்.

சீரகத்தூள் பலம் 10, கற்கண்டு பலம் 10, இத்துடன் கரும்பு இரசம், நாரத்தம்பழ இரசம்,

* சென்னை இறையாட்சியாளர் பதிப்பித்த "குணபாடம்" என்ற நூலிலிருந்து தொகுக்கப்பெற்றது
—நிர்வாக ஆசிரியர்.

இஞ்சி இரசம், பழ இரசம், கருப்பூரவள்ளி இரசம் வகைக்குப் பலம் 5 சேர்த்து, இலேகியஞ் செய்து, வேளைக்கு ½ முதல் ஒரு வராகனெடை வீதம் சாப்பிட் வரப் பித்த ரோகங்கள் தணியும்.

சீரகச் சூரணம் 1/8 தோலா, நாட்டுச் சருக்கரை 1/8 தோலா கூட்டி, எந்த வயதுடைய வரேனும் கொள்ள 10 வருஷத்துக்குக் குறையாமல் வெள்ளை கண்டிருந்தாலும் அது வெகு சீக்கிரத்தில் தீரும்.

சீரகத்தையும் உப்பையும் நன்ருய்க் கசக்கிப் பொட்டுநீக்கி வாயிலிட்டுச் சுவைத்துத் திப்பியைத் துப்பிவிடவும். இதனுல் அசீரணம், அசீரணபேதி, வயிற்றெரிச்சல் நீங்கிப் பசியுண்டாகும்.

சீரகத்தைச் சுண்ணும்பு நீர்விட்டுக் கலந்து சிறிது ஊறியபின் முறத்திலிட்டுத் தேய்த்துப் புடைத்துலர்த்திப் பழரசம் விட்டரைத்து, அரசிலையில் வைத்து வேகவைத்து ஆறவிட்டு, மறுபடியும் 6 முறை இப்படியே செய்து கொடுக்கச் சிறு குழந்தைகட்குண்டாகும் பேதி நீங்கும்.

சீரகத்தைப் பழச்சாற்றில் ஊறவைத்து நெய், சருக்கரை சேர்த்து இலேகியஞ் செய்து சாப்பிடச் சகல ரோகங்களையும் கண்டிக்கும். தீபனம் அதிகரிக்கும்.

சீரகம் 5 பலம், உலர்ந்த கற்ருழை 5 பலம், பனைவெல்லம் 5 பலம், பால், நெய் தக்க அளவு சேர்த்து இலேகியமாகச் செய்து சாப்பிட, வயிற்றுவலி, நீர்ச்சுருக்கு, எரிவு, வெப்பம், அசீரணம், கண்ணெரிவு, கை, கால், தேக எரிச்சல், ஆசனக்கடுப்பு, மலக்கட்டு இவை நீங்கும்.

ஒரு பலம் சீரகத்தை ஒரு படி நல்லெண்ணெயில் இட்டுக் காய்ச்சிச் சீரகம் ஒடியத்தக்க பதத்தில் வடித்துக் கொள்ளவும் ; இதைத் தேய்த்துத் தலை முழுகிவர, பித்த மயக்கம், நேத்திர ரோகம், வாந்தி ரோகம், தலைவலி, மந்தம், முதலியன நீங்கும்.

பத்துப் பலம் சீரகத்தை வல்லாரைச்சாற்றில் 4 நாள் ஊறவைத்து, உலர்த்திப் பசுவின் பாலிலரைத்து, 20 பலம் பசுவின் வெண்ணெயில் கலந்து ஒரு நாள் ஊறவைத்துக் காய்ச்சி அதில் 10 பலம் கற்கண்டு, திரிசுகந்தம், அரத்தை, ஓமம் இவைகளின் சூரணம் வகைக்குப் பலம் ½ சேர்த்துக் கலந்து வைத்துக் கொண்டு, பித்தம், வயிற்றுவலி, அரோசகம், சர்த்தி, அக்கினிமந்தம், விக்கல் இவைகளுக்கு, 2 முதல் 4 வராகனெடை வீதம் கொடுக்கலாம்.

ஆய்ந்து, சுண்ணும்பு நீர் தெளித்துத் தேய்த்துப் புடைத்து உமியை நீக்கிச் சுத்தி செய்த சீரகம் 10 பலத்தை ஒரு ஆழாக்கு புளியாரை இரசத்தில் ஊறவைத்து வெயிலில் உலர்த்திக்கொள்ளவும். பின் எலுமிச்சம்பழம், நாரத்தம்பழம், பொன்னுங்காணி, முசுமுசுக்கை, கற்பூரவள்ளி, புளிமாதுளம் பழம், மணத்தக்காளி இவைகளின் இரசத்தில் முறையே மேற்கூறிய பிரகாரம் ஊறவைத்து உலர்த்திக்கொள்ளவும். கடைசியாக 2 பலம் சயிந்தலவணத்தை இஞ்சிச் சாற்றில் கரைத்து அதில் மேற்படி சீரகத்தை ஊறவைத்து உலர்த்தி எடுத்துக் கொண்டு வேளைக்கு ½—1 வராகனெடை வீதம் உட்கொள்ள, வயிற்றுவலி, அசீரணம் முதலிய நோய்கள் தீரும்.

**பஞ்சதீபாக்கினி லேகியம்** :—சீரகம், சுக்கு, திப்பலி, மிளகு, ஏலம் இவைகளின் சூரணம் வகைக்கு 3 ரூபாயெடை, இரண்டு படி பசுவின் பாலில் 24 ரூபாயெடை பனை வெல்லத்தைக் கரைத்துப் பாகு செய்து, அதில் சூரணத்தை விட்டுத் தூவி, நெய் 1/8 படி விட்டுக் கிண்டி, தேவையான அளவு தேன் சேர்த்துப் பிசைந்து வைத்துக்கொண்டு, கொட்டைப்பாக்களவு சாப்பிட்டு வர, உஷ்ணவாயு, பித்தவாயு, உளைவு, குத்துவலி, கடுப்பு, எரிச்சல், பேதி, பொருமல், கிரகணி முதலியன தீரும்.

இதை வாசனைக்காகவும், சீரண சக்தியுண்டாவதற்காகவும் போசன பதார்த்தங்களுடன் சேர்ப்பது வீட்டு வழக்கம்.

# கதர் உடுத்த வேண்டுவதேன்?

(திரு ஜே. ஸி. குமரப்பா)

பொது மக்கள் கதர் உடுத்தி வருதற்குக் காரணங்கள் பலவுள. பழக்கமாகவே ஒரு சிலரும், வேறுவழியில்லாமற் சிலரும், தத்தம் கலையறிவு சிறந்து தோன்ற வேண்டுமென்று கருதிச் சிலரும், அரசியற் கட்சிக் கட்டுப்பாடு கருதிச் சிலரும், காந்தியடிகள் விரும்புகிறார் என்று கருதிச் சிலரும் கதர்த் துணியைப் பயன் படுத்தி வருகிறார்கள். சிக்கன முறைப்படி கதர் கட்டுதல் ஏற்றது தானா? கதரைக் கதருக்காகவும், அதன் சிக்கனச் சிறப்புக் கருதியும் நாம் ஆதரிக்க முடியுமா? என்ற இக்கேள்விகளுக்கு விடை கண்டுபிடிப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மக்களாய்ப் பிறந்தோரெல்லோருக்கும் இன்றியமையாதனவாகக் கருதப்படும் பொருள்களில் ஆடையும் ஒன்றாகும். உடுக்கும் உடையின் அளவை எவ்வளவு குறைவாக வைத்துக் கொண்டாலும், ஒவ்வொருவருக்கும் ஒரு முழத்துண்டாவது தேவையாகும். இத்தேவையை நிரப்புவதற்கு மூன்று வழிகள் உள்ளன: (1) நமக்குத் தேவையான எல்லாத் துணிகளையும் வெளிநாடுகளிலிருந்து தருவித்தல் (2) நம் நாட்டிலேயே இயந்திரங்கள் வாயிலாக அவற்றை நெய்து கொள்ளுதல் (3) ஊர்தோறும் கதர் நெய்து கொள்ளுதல்.

இம்மூன்றனுள் முதல்வழி விரும்பத்தக்கதன்று என்பதைக் குறித்துப் பலபடக் கூறவேண்டுவதில்லை. ஆறாயிரம்மைல் தொலைக்கு நம் நாட்டுப் பருத்தியை ஏற்றுமதி செய்து அனுப்பி, கூலி வீதம் அதிகமாயுள்ள அவ்வெளிநாட்டில் அதனைத் துணியாக நெய்யச் செய்து, மீண்டும் அதனை அங்கிருந்து நம் நாட்டுக்குத் தருவித்துக் கொள்வ தென்பது முட்டாள்தனமே யாகும் என்பதை ஒவ்வொருவரும் ஒப்புக் கொள்வர். இவ்வுண்மையை ஏற்றுக் கொள்ளப் பொருளாதார நுட்ப நுணுக்கங்கள் தெரிய வேண்டும் என்பதில்லை.

ஆறாயிரம் மைல் தொலைக்குப் பருத்தியை அனுப்பி மீண்டும் ஆறாயிரம் மைல் அதனைத் துணியாகக் கொண்டுவருவதில் ஏற்றுமதி இறக்குமதிச் செலவு ஏராளமாக ஏற்படக்கூடியதாயிருந்தும், வெளிநாட்டுத் துணி நம் நாட்டுக் கதரை விட மலிவாக விற்று வருகிறது என்பதை நாம் நடைமுறையிற் காண்கின்றோம். அஃதெப்படி? அதன் விலைத் திட்டத்திற் சேர்க்கப் படவேண்டிய பலபுள்ளிகள் சேர்க்கப்படாததனால் தான். நான் ஓர் அரசாங்க உத்தியோகஸ்தன் என்றுவைத்துக் கொள்ளலாம். குடியானவர்களை முடுக்குவதால் ஏராளமான அரிசியை விளைக்குமாறு நான் செய்யலாம்; அதனால் அரிசிவிலை குறையும். எனக்குவேண்டிய பொருள்களை யெல்லாம் வண்டிக்கூலி தூக்குக் கூலி இல்லாமற் கொண்டுவர வேண்டுமென்று என் சிப்பந்திகளுக்குக் கட்டளை பிறப்பித்து விட்டால் அச் செலவும் குறைந்து விடுகிறது. ஆனால் இவற்றிற்கெல்லாம் நியாயமாகப் பொருள் கொடுத்து வாங்கும் ஒருவரோடு ஒப்பிட்டால் நிலை எவ்வாறாகும்? வெளி நாட்டு மில் துணி மேற்கூறிய அரசாங்க உத்தியோகஸ்தர் நிலையிலும், கதர் பின்னர்க் கூறியவர் நிலையிலும் இருப்பனவாகும்.

பருத்தியோ வெகு தொலைவிலுள்ள உண்ணாட்டுப் பகுதிகளில் விளைகிறது. அப்பகுதிகளிலிருந்து அது துறைமுகங்களுக்குக் கொண்டு வரப்பட்டு இங்கிலாந்திற்கு ஏற்றுமதி செய்யப் படுகின்றது. முதன் முதலில் அதனை விளைத்துப் பயிர் செய்வதற்கே மக்களை வலுக் கட்டாயம் செய்யவேண்டி யிருக்கிறது. அவ்வாறு செய்வதற்கு அரசியல் அதிகாரம் தேவையாகும். உழவியற் கல்லூரிகள் (Agricultural colleges) பருத்தி விளைவைப்பற்றிப் பல ஆராய்ச்சிகள் செய்து வருகின்றன. இவ்வாராய்ச்சிகளுக்குரிய செலவு கருதி வரிகள் விதிக்கப் படுதலும் உண்டு. இருப்புப்பாதைக் கட்டண வீத அமைப்புத் திட்டமோ அரசாங்கத்தாரின் கைக்குள் ளடங்கியிருக்கிறது. இருப்புப் பாதைகளுக்கு ஆதாய உறுதியளிப்பது அரசாங்கத்தாரின் கடமை. ஆகவே பொதுமக்கள் பணமே இதற்கும் பயன்படுகிறது. கடற்பாதைகளோ நிலப் படை, நாவாய்ப்படை, வானூர்திப்படை, ஆகிய வற்றாலும், இன்னும் சிங்கப்பூர், ஏடென், போர்ட் செட், மால்ட்டா, ஜிப்ரால்டர் முதலிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள நாவாய்ப்

படைத்துறை அரண்கள் முதலியவற்றுலும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இப்பாதுகாப்பும் பொதுமக்கள் பணத்தினுலேயே நடைபெறுகின்றது. எனவே, முறைப்படி மதிப்பிடவேண்டுமானல் இச்செலவுகள் யாவற்றையும் ஆங்கில முதலாளிகள் கணக்கிலேயே பற்றெழுதவேண்டும். வெளிநாட்டுத் துணியை வாங்கும் ஒருவர்க்கு முதற்கண் தாம் மிகவும் குறைந்த விலைக்கு வாங்குவதாகவே தோற்றும்; ஆனல், உண்மையில், அவ்விலைக்கும் கதரின் விலைக்கும் இடையேயுள்ள வித்தியாசத்திலும் அதிகமான ஒரு தொகையை, எதற்குக் கொடுக்கிருேமென்பது தெரியாமலே ஒவ்வொருவரும் கொடுத்துத்தான் வருகிருர்கள் என்பது அவருக்குத் தோன்றுதற்கில்லை. விற்றுமுதற் செலவில் ஒரு பகுதியைப் பிற நாடுகளின் கணக்கிற் பற்றெழுதிக் கொள்ளும் இவ்வசதி உலகத்திலுள்ள நாடுகள் போர் நிகழ்த்துதற் குரிய காரணங்களில் ஒன்ருகும். இவ்வாறு போர் நிகழ்வதால் பொதுக் கடன் தொகை மேலும் மேலும் ஏறிக்கொண்டு போவதற்கும் அதுவே ஒரு காரணமாகிறது. இவ்வாறு வெளிப்படையாகக் காணப்படும் செலவையன்றி மற்ருெரு செலவும் உள்ளது; அது பொருட் செலவன்று; மக்கள் தம் இரத்தச் செலவும் தேசீயச் சுதந்திர இழப்புமேயாகும். ஆகவே இவற்றிற்கெல்லாம் மதிப்பிட்டு அதனை விற்றுமுதற் செலவில் சேர்த்துக் கொண்ட பின்னரும் எவரேனும் வெளிநாட்டுத் துணிகளை வாங்குதல் நயமாகும் என்று நியாயமாகக் கூற முடியுமா?

இனி, நம் நாட்டு மில் துணிகளை எடுத்துக் கொண்டால், வெளிநாட்டுத் துணிக்குக் கூறியவை யெல்லாம் இவற்றிற்கும் பெரும்பாலும் பொருந்தும். உழவியற் கல்லூரி ஆராய்ச்சி வசதி, இருப்புப்பாதை வசதி, மில்களுக்கு வேண்டியவற்றை யெல்லாம் குடியானவர்களைக் கொண்டே அரசாங்கத்தாரின் செல்வாக்குமூலம் எளிதிற் செய்துகொள்ளும் வசதி ஆகிய இவ்வசதிகளெல்லாம் மில் துணிகளுக்கு உள்ளன. இவையெல்லாம் பொதுமக்கள் செலவிலேயே நடைபெறுகின்றன. மேலும், வெளிநாட்டு வர்த்தகப் போட்டியிலிருந்தும் மில்களுக்குப் பாதுகாப்பு வேறும் அரசாங்கத்தாரால் அளிக்கப்பட்டுள்ளது. அதுவும் பொதுமக்கள் செலவினையே சார்வதாகும். ஆகவே மில்களின் வாயிலாகத் துணிகளை நெய்வதற்கு அரசியல் அதிகாரம் இன்றியமையாது வேண்டப்படும். இதனல் வெளிநாட்டுத் துணிகளுக்கும் நம்நாட்டு மில் துணிகளுக்கும் வேறுபாடு அதிகமில்லையென்பது எளிதில் விளங்கும்.

கதரோ உழைப்பவர்களுக் கெல்லாம் நியாயமான கூலியை நிரல்படக் கொடுத்து வருகிறது. அது கொடுப்பதெல்லாம் பொதுமக்களைச் சென்றடைகின்றதே யன்றி ஒரு சிலரிடத்தில் மட்டும் சென்று குவிவதில்லை. இவ்வாறு, சிலர் கைகளிலன்றிப் பலர் கைகளிலும் வேறுபாடின்றிப் பொருள் சென்றடைவதால் மக்களின் வாழ்க்கை யின்பமும், தேசீய நல்வாழ்வும் முறையே வளர்ச்சி யுறுகின்றன.

இதுகாறுங் கூறியவாற்ருல், பிற துணிகள் எல்லாவற்றையும் விடக் கதர்த் துணிக்குள்ள உரிமை அதிகமென்று நன்கு விளக்கப்பட்டது. ஆகவே, கதர் கட்டுவதால் நேர்மை, அரசியற் சுதந்தரம், உலக அமைதி ஆகியவற்றை ஆதரிக்கிருர்கள் என்ற உண்மையை உணர்ந்து, மக்கள் கதர்த்துணியைப் பயன் படுத்துவார்கள் என நம்புகிறேன்.

---

## மார்கழி இதழில் பிழை திருத்தம்

பாரத சக்தி மஹாகாவியம் :—

| பாட்டு | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 42 | 1 | பாதி | பரிதி |
| 47 | 3 | மலை | மனை |
| 50 | 4 | பொலிவு | பொலியு |
| 54 | 1 | உயர்ந்திட | உய்ந்திட |
| 55 | 1 | கலியும | கலியும் |

ஏழை முருகன் :— பக்கம் 231 தீர்ப்பு என்னும் பகுதியின் இறுதியில் அடியில் வரும் அடிகளைச் சேர்த்துக் கொள்க :—

ஒரு மாதத்திற்குப் பிறகு போலீஸ் பந்தோபஸ்துடன் முருகனை மதுரைச் சிறைக்கு அழைத்துச் சென்றனர். கஜானுவும் கூடச் சென்றது. சாயுங்காலம் டாணுவீரர் மணலூரில் முகாம் போட்டனர். அவர்களை அங்கே விட்டுச் சிறிது அக்கால நிலையை அறியப் புகுவாம்.

# குத்தம்மையின் சரித்திரம்

(ஸ்ரீ கி. லக்ஷ்மண சர்மா, புதுக்கோட்டை)

அம்மை குத்தும் அசுத்த முறை தோன்றிய ஆங்கில நாடு ஒழுக்கங்களுக்குப் பெயர் பெற்ற நாடு அல்ல. அந்நாட்டினர் பெரும் பாலும் புலால் உண்ணல் முதலிய இழிவான வழக்கங்களையே அனுஷ்டிப்பவர். ஸ்நானம், சுத்த உடை முதலான ஆசாரங்களைப் பற்றிக் கேட்கவேண்டாம். தெருக்களின் சுத்தி, வீடுகள் சுத்தி, இவைகளில் இக்காலத்தில் அந்நாடு அதிக முன்னேற்றம் பெற்றிருக்கிறது; ஆனால் குத்தம்மையின் அனுஷ்டானம் ஆரம்பமான காலத்தில் இவை இல்லவே இல்லை; பின்னால் அனுஷ்டானத்துக்கு வந்தன என்று அறிகிறோம்.

தாமஸ உணவினால் தாமஸ புத்திதான் ஏற்படும், என்றபடி, இந்நாட்டினரின் தாமஸத் தன்மையும் பிரசித்தி பெற்றிருக்கிறது. இவர்கள் எப்போதுமே இரக்கமில்லாமல் ஜீவ ஹிம்சைகளையே விளையாட்டாகக் கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல. சுமார் நூறு ஆண்டுகளாக அங்கே மகா கோரமான ஒரு அநியாயம் அனுஷ்டானத்திலிருந்து வருகிறது. ஆதியில் அது சிலரால் மட்டும் அனுஷ்டிக்கப்பட்டு வந்தது. சில மருத்துவர்கள் சிற்றுயிர்களை உயிரோடு வைத்துப் பலவித க்ரூர சித்திரவதைகள் செய்து வந்தார்கள். அப்போதிருந்த பிரசித்த அறிஞராகிய டாக்டர் ஸாமுவேல் ஜான்ஸன் இதை நிந்தித்தார்; இக்காலத்தில் இதை நிந்தித்துப் பேசுவதற்கு மிகச்சிலரே முன் வருகிறார்கள். இந்தக் குரூர வழக்கம் (vivisection) வர வரப் பெருகிக்கொண்டே வந்தது. இப்போது அது பெரிய கௌரவம் பெற்ற தொழிலாகிவிட்டது. இதற்கு 'ஆராய்ச்சி' என்னும் கௌரவப் பெயரும் அளிக்கப்பட்டது. கோடிக் கணக்கான ஜந்துக்களை உயிருடன் வைத்து வதைத்து வருகிறார்கள். இந்த ஆராய்ச்சியின் பயன் மனிதருக்கு இயல்பான ஜீவ காருண்யம் நசிப்பது ஒன்றே தான். விவேகிகளான நல்லோருக்கு வேறொரு பயனுண்டு; இம்மாதிரி அதர்ம முறையில் செய்யும் ஆராய்ச்சி வீணே தவிர வேறில்லை என்ற நிச்சயம் இதனால் ஏற்படுகிறது. இதை பிஷப் என்னும் பதவியிலுள்ள டாக்டர் வெஸ்ட்காட் என்பார் விளக்குகிறார்: **"நாம் அறிந்துகொள்ள வேண்டிய அறிவை நம்மை நம்பி வாழும் ஜந்துக்களுக்குச் சொல்லவொண்ணாத வேதனைகளைத் தந்து அறிய வேண்டுமென்று ஈசன் படைத்திருப்பார் என்று என்னால் நம்ப முடியவில்லை."** இந்த அனுஷ்டானத்தினால் மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் பாவ வெள்ளத்தை யாராலும் அளவிட முடியாது. இதுபோன்ற மிகக்கொடிய பாவங்களே இக்காலத்து மகா யுத்தங்களுக்கு மூலமாயிருக்க வேண்டும்.

இதனால் ஆங்கில நாட்டில் சாத்விகர்கள் இல்லை என்று அர்த்தமல்ல. இக்கொடிய செயல்களை வெறுக்கும் சாதுக்களான அறிவாளிகள் அங்கு இருக்கிறார்கள்.

நம் நாட்டில் சாத்விக குணம் குறைந்து தாமஸ குணம் அதிகப்பட்டிருப்பது பரிதபிக்கத் தக்கதாகும். உலகத்தில் தாமஸ குணத்தவர்கள் மூர்க்கத்தனமாகப் பிறநாடுகளை வென்று அடக்கி ஆளுவதைப் பார்த்து, நம்மிலும் பெரும்பாலோர் இப்போது தாமஸ ஒழுக்கங்களே மனித உயர்வுக்கு மூலமென்னும் நம்பிக்கை கொண்டு, அந்தத் துராசாரங்களைப் பின்பற்றி விட்டார்கள்; சாத்விகமெல்லாம் மூடத்தனம் என்று அவர்கள் கூசாமல் சொல்லுகிறார்கள்.

தாமஸ ஆசாரங்களின் விளைவு நோயும் அகால மரணமும். இது ஞானவாஸிஷ்டம் முதலிய உயரிய நூல்களில் போதிக்கப்படுகிறது. பகவத்கீதையில் இதே உண்மை சுருக்கமாகக் கூறப்பட்டிருக்கிறது. வைசூரி, காலரா, முதலிய நோய்கள் தாமஸிகளுக்கே உரியவை. ஆங்கில மருத்துவ நிபுணரான டாக்டர் க்ரெய்ட்டன் என்பவர்முதலானோர் இந்நோய்கள் உடலின் அசுத்தத்தினால் விளைகின்றனவென்று சொல்லியிருக்கிறார்கள். அணுப்புழுக்களால் நோய்கள் உண்டாகுமென்று வைத்துக் கொண்டாலும், அப்புழுக்கள் தாமஸ உடல்களில் தான் தமக்கேற்ற உணவைப் பெற்றுப் பெருகமுடியும்.

தாமஸமுள்ளவன் தன் குற்றம் அறியான். நோய்கள் பிறருக்கு வந்தால், தனக்கும் வரும் என்று எண்ணும்போது அவனைக் கிலி அடிக்கும். தாமஸ குணமுள்ள ஒருவனுக்குக் கிலியும் ஏற்பட்டால், அவன் எந்த மூடத்தனமான செயலையும் செய்யத் துணிவான். அவனுக்குப் பகுத்தறிவு ஏது?

வைசூரியானது இயற்கையில் உயிருக்கு அபாயமானதல்ல, என்று டாக்டர் ஸைடென்ஹாம் என்னும் வைத்திய சிரோமணி சொன்னார். ஆனால் ஆங்கில நாட்டு வைத்தியர் பெரும்பாலும் இவரைப்போன்ற அறிவாளிகளல்லர். இதனால்

தான் குத்தம்மை போன்ற மூர்க்க ஆசாரங்கள் அந்நாட்டில் எளிதில் பரவின.

இப்படியிருக்க, துருக்கிக்குப் போயிருந்த ஒரு ஆங்கில மாது அங்கிருந்து ஒரு மூர்க்க ஆசாரத்தைக் கொண்டு வந்தாள். அதாவது, வைசூரி வராமலிருப்பதற்காக, வைசூரிக்கொப்புளங்கண்ட ஒருவன் உடம்பிலிருந்து வைசூரிச் சீழை எடுத்துத் தன் உடம்பில் கத்தியால் கீறின இடத்தில் வைத்துக்கொள்வது. இது செய்தால் வைசூரிக்குப் பாதுகாப்பு என்று குருட்டுத்தனமாக ஜனங்கள் நம்பி அனுஷ்டிக்க முன்வந்தார்கள். இந்த மூட வழக்கம் பரவிற்று.

இதற்கு அவர்கள் நியாயம் கற்பிக்கவும் முயன்றார்கள். உலக அனுபவத்தில் ஒருவனுக்கு வைசூரி முதலான சில நோய்கள் இரண்டாந் தடவை பெரும்பாலும் காணுவதில்லை; உண்மையில் இரண்டாந் தடவை மிகக்கடுமையாக வைசூரிகண்டு இறப்பது முண்டு; மேலும் பெரும்பாலும் வைசூரி இரண்டாந்தடவை வராததற்குக் காரணம் என்ன வென்று தெரிந்து கொள்வது கடினம். வைசூரி ஒரு தடவை வந்தால், அதனால் உடம்புக்கு வைசூரியை எதிர்க்கும் சக்தி உண்டாகிற தென்று நினைத்தார்கள். இயற்கையான வைசூரிக்குப் பதிலாகச் செயற்கை முறையில் வைசூரியைப்பெற்று அனுபவித்தால், அதனாலும் முற்காப்பு ஏற்படலாம் என்று தர்க்கித்தார்கள். உண்மை வேறாக இருக்கிறது.

அசுத்தத்தைப் போக்குவதற்குப் பதிலாக, அசுத்தத்தையே உட்கொண்டால், அது என்ன பயனைத் தருமோ, அந்தப் பயனைத்தான் பெற்றார்கள் ஆங்கிலேயர்; வைசூரி அதிகரித்துக் கொண்டேபோயிற்று. வைசூரி வெள்ளத்துக்கு அணைபோடப் புதிய முறை ஏதாவது யாராவது சொல்ல முன்வந்தால், ஜனங்கள் அதை ஏற்றுக் கொள்ளத் தயாராயிருந்தார்கள்.

இந்த நிலையில் **ஜென்னர்** என்பவர் தோன்றினார். அக்காலத்தில் நாட்டுப்புறத்தில் வேறொரு முறை அனுஷ்டானத்தில் இருந்தது அவருக்குத் தெரியவந்தது. அது என்னவென்று பார்ப்போம்.

பசுக்களுக்கு, மிக அரிதாக ஒருவித நோய் வருவதுண்டு. இந்த நோய் பால் கறக்கப்படும் பசுக்களுக்குத் தான் காணப்பட்டதே தவிர, காளைகளுக்காவது, பால் கறக்காத பசுக்களுக்காவது காணுவதில்லை. இதனால் இந்த நோய்க்கு மூலம் பால் கறக்கும் மனிதரின் கையின் சம்பந்தமே என்று விளங்கும்.

பொது மாதரிடம் சென்று உடம்பு பழுதாகி, அதனால் கைகளில் மேகநீர்ப்புண்கள் கண்ட மனிதர்கள் பசுக்களைப் பால் கறக்கும்போது, அந்த மேகநீர் பசுவின் மூலைக்காம்புகளில் படிகிறது. அது உடம்பில் சார்ந்து, உடம்பில் கொதிப்புண்டாகி, மூலைக்காம்புகளிலேயே கொப்புளங்கள் உண்டாகும். இந்தக் கொப்புளங்களின் துர்நீரை எடுத்து, சிலர் வைசூரிக்குப் பாதுகாப்பாக உடம்பில் குத்திக் கொண்டிருந்தார்கள். அதனால் தமக்கு வைசூரி வராமலிருப்பதாகவும் நம்பினார்கள். அதை ஜென்னர் அறிந்தார்; அதைத் தம்முடைய முறையாகச் செய்து கொண்டு, பிரசாரம் செய்யவும் ஆரம்பித்தார். தான் இதை எடுத்துக் கொண்ட இரண்டு வருஷங்கள் ஆவதற்குள் இதனால் ஆயுள் பரியந்தம் வைசூரிக்குப் பாதுகாப்பு ஏற்படும் என்றும் சொல்லத் துணிந்தார். சொன்னவருடைய துஷ்டத்தனமா, அல்லது கேட்டவர்களுடைய மூடத்தனமா, எது பெரியது என்று சொல்வது?

பழைய துருக்கி தேசத்து முறை ஏமாற்றமாய் முடிந்தமையால், இந்தப் புதிய முறையால் பயனிருக்கலாம் என்று நம்பிப் பலர் ஜென்னரின் பேச்சை நம்பினார்கள். ஆனால் பணக்காரப் பிரபுக்களே அதிகமாக நம்பினார்கள். வைசூரி பெரும்பாலும் அந்நாட்டு ஏழைகளையே பீடிக்குமாகையாலும், செல்வவான்களில் இது காணுவது குறைவாகையாலும், இந்த நம்பிக்கை சீக்கிரம் பரவிற்று; அம்மை குத்திக் கொண்ட செல்வர்கள் குத்திக் கொண்டதால் தாம் தப்புவதாக எண்ணினார்கள். ஜென்னருக்கு அதிர்ஷ்டம்!

அவருக்கு அரசன் தயவு கிடைத்தது. அரசன் அப்போது பரிபூர்ண செல்வாக்கு உள்ளவனாக இருந்தான். அவனுடைய சிபார்சினால் பார்லிமெண்ட் சபை ஜென்னருக்கு முப்பதினாயிரம் பவுன் இனாம் அளித்தது.

மேலும் ஜென்னருக்கு உபகாரமாகப் பல சட்டங்களும் செய்தார்கள். துருக்கிய முறையைத் தண்டனைக்குரிய குற்றமாகச் செய்ததும் தவிர, ஜென்னர்முறையைக் கட்டாயமாக்கியும் சட்டங்கள் பிறப்பிவிக்கப்பட்டன. பிறந்த சில காலத்திற்குள் சிசுக்களுக்கு அம்மை குத்த வேண்டியதாயிற்று.

இதனால் என்ன விளைந்தது என்னும் சரித்திர விவரங்களை இதற்கு அடுத்த இதழில் எழுதுவேன்.

முன் இதழ்த் தொடர்ச்சி

# இனி நாம் செய்ய வேண்டியது யாது?

(மொழிபெயர்ப்பு: ஸ்ரீ பிரம்மசாரி விசுவநாதன்)

## அத்தியாயம் 11

ஏழைகளுக்கு உபகாரஞ் செய்யும் வழி இது வரை நான் கடைப்பிடித்த தன்றென்று மேற் கூறியவாறு அடிபட்டுத் தெரிந்துகொண்டேன். நான் பற்றிய வழியால் நன்மை விளையாது என்பதன்றித் தீமை விளையுமென்றும் உணர்ந் தேன். ஆயினும் இதன்பின்னரும் சிலகாலம் குருட்டுத்தனமாய்ப் பழைய வழியே சென் றேன்.

பணக்காரராயிருந்து யாதோவொரு காரணத் தால் சொத்தையிழந்து இச்சத்திரத்தில் தங்கிய பலர் எனக்குக் கடிதங்கள் எழுதி யிருந்தனர். இவர்கள் யாவரும் திருப்தி யற்றவர்கள்; கிடைத்ததைத் தாறுமாறாகச் செலவிடுபவர்கள். இவர்களுக்கு உதவி செய்வது அசாத்தியம்.

பணவுதவி செய்வதாக வாக்களித் திருந்தவர் யாவரும் தங்கள் வாக்குறுதியை அறவே மறந்து விட்டனர். அவர்கள் ஒன்றுமே கொடுக்க வில்லை. மாணவர்கள் மாத்திரம் பன்னிரண்டு ரூபிள் கொடுத்தனர். சத்திரத்திற்கு மறுபடியுஞ் சென்றபோது எழுபது வயதுக் கிழவனொரு வனைக் கண்டேன். அவன் சுறுசுறுப்பாகத் தன் வேலைகளைக் கவனித்துக்கொண்டிருந்தான்; பழைய துணிகள் இரும்பு முதலியவற்றை விற்றுப்பிழைத்து வந்தான். பணவுதவி விரும் பும் ஏழைகள் யாராவது உளரா என்று கேட்ட தற்கு அவன், சோம்பேறிகளும் குடிகாரருமே பிறர் கையை எதிர்பார்ப்பார்கள் என்றான். என்னிடமிருந்த பணத்தை ஐவானிடங்கொடுத்து ஏழைகளுக்குப் பகிர்ந்து கொடுக்கச் சொன் னேன். பணமில்லாது தவிப்பவர்கள் பலர் இல்லாவிடினும் ஒருவாறு பகிர்ந்து கொடுத் தோம். அவர்கள் அப்பணத்தைக் கள்ளுக் கடையில் கொண்டுபோய்ச் சேர்த்தனர்.

எனது பரோபகார வேலையெல்லாம் இவ்வாறு முடிந்தது. அவிவேகத்தாற் கெடுதலான காரியத் தைச் செய்ததால் வெறுப்படைந்தேன். இவ் வேலையினால் என் மனம் மிகக் குழம்பிப்போய் வருத்தமடைந்தேன்.

## அத்தியாயம் 12

மாஸ்கோவிற்கு வருமுன் நான் கிராமங்களிற் றான் வசித்து வந்தேன். அங்கிருந்தபோது கிராமவாசிகளோடு நெருங்கிப் பழகி வந்த துடன் அவர்களுக்கு ஏதோ சிறிது உதவியுஞ் செய்து வந்ததால் அவர்கள் என்னிடம் அன்பு பாராட்டினர். அக்காலத்தில் எனது ஆடம்பர வாழ்க்கை என் மனத்தைத் துன்புறுத்தவில்லை.

மாஸ்கோவின் கொடிய வறுமையையும் சோம்பலால் விளையுந் துன்பத்தையுங் கண்ட பின்னரே என் சுகபோக வாழ்க்கை அசுரத்தன மானது என்றறிந்து கொண்டேன். இதனாற் பெரிய வியாகூல முண்டான போதிலும் என் வாழ்க்கை முழுவதையும் முற்றிலுஞ் சீர்திருத்திக் கொள்வதற்குத் திடசித்தமில்லை. பணத்தில் ஒரு தோஷமுமில்லை யென்றும், அது இறைவன் அரு ளியதென்றும், ஆதலால் அதைத் தானும் அனு பவித்துப் பிறர்க்குங் கொடுத்துதவ வேண்டு மென்றும் பலர் என்னிடங் கூறினர். உலக முதித்தது முதலாகவே பலர் இவ்வாறு சொல்லி வருகிறார்கள். அச்சமயம் அது உண்மைதா னென்று நம்பிப் பல தனவான்களை ஏழைகளின் கஷ்ட நிவாரணத்திற்கு உதவுமாறு கேட்டுக் கொண்டேன்; அவர்கள் மனத்தில் விருப்ப மில்லாவிடினும் வெளியே சொன்னால் வெட்கக் கேடென்று எண்ணி சரியெனச் சம்மதித்தனர்.

பிறகு சத்திரம் போய்ப் பார்த்ததில், பெரும் பாலர் நல்லுழைப்பாளிகளாகவும் ஒழுங்கான வழியில் வேண்டிய பொருளைச் சம்பாதிப்பவர்க ளாகவும் இருந்தனர். இவர்களுக்கு எனது உதவி தேவையில்லை. இவர்களைத் தவிர சோம்பேறிகள் சிலரிருந்தனர். அவர்களுக்கும் நான் உதவி செய்யும் நிலைமையிலில்லை. ஏனெனில் நானும் அவர்களைப் போலவே பாடுபடாது சோம்பேறி யாகக் காலந்தள்ளி வந்தவன். என்னைப் போலவே அவர்களும் ஜீவனத்திற்கு வேண்டி யதை உழைப்பாற் பெறும் விருப்பமோ வழக்கமோ இல்லாதவர்கள். ஏழை மக்களுள், ஒருவர் நோய் முதலியவற்றால் வருந்தினால் மற்ற வர் கவனித்து வந்தனர். ஆகவே என்னுதவி

எவருக்குந் தேவையில்லை. பணம் கொடுத்துதவுவதால் பயனில்லையெனத் தேர்ந்து, மனம் நொந்து, மாஸ்கோவைவிட்டுக் கிராமத்திற்குத் திரும்பினேன்.

நீதிநெறி பற்றிய விஷயங்களை எவ்வளவு அருமையாகவும் இனிமையாகவும் எடுத்து விளக்கியபோதிலும், சாதாரண மனிதன் கூட, "நீ சொல்லுவது புதிதொன்றுமில்லையே; எல்லாம் பழங் கதைதானே. இதுவெனக்குத் தெரியாதா?" என்று சொல்லிவிடுகிறான். பின்பற்றி யொழுகாதவர்களும் அதிற் பற்றில்லாதவர்களும் நீதிநெறி பற்றி யாராவது பேசினால் பழங் கதைதானே என்று கவனியாது போய்விடுவர். அதை அனுஷ்டிப்பவர்களே எத்தனை முறை எடுத்துக்கூறினும் அலுக்காது கேட்பர்.

பெரும்பாலார், நீதிநெறி யென்றால் உலகானுபவமற்ற மந்தபுத்திகளின் பேச்சென்றும், மனத்தைக் கவரக்கூடிய தொன்றும் அதில் இல்லையென்றுஞ் சொல்லுகின்றனர். ஆனால் உண்மையை ஆய்ந்தால் ராஜீயவாழ்க்கை, வியாபாரம், கலைகள், மற்றும் உலகத்திலுள்ள எல்லாக் காரியங்களின் நோக்கமும் தர்மத்தை ஆதாரமாகக் கொண்டிருத்தல் அவசியமாகும். தர்மத்தை கடைப் பிடித்தே எவ்வேலையையும் புரிதல் நமது முக்கியமான கடமை மாத்திரமன்றி நமது முழுக்கடமையும் அதுவே.

கத்தியை அடிக்கடி உபயோகிப்பவனே அது கூராயிருக்க வேண்டுமென விரும்புவான்; அதைத் தீட்டுவான். உபயோகியாதவனோ கத்தி எப்படி யிருந்தால் நமக்கென்ன வென்று போய் விடுவான். அவ்வாறே பல விஷயங்கள் எனக்குத் தெரிந்தும் அறநெறியை யான் கடைப் பிடிக்காததால் அது பற்றிய விஷயங்களை ஆய்ந்துணருந் திறன் எனக்கில்லை. மூன்று வருடங்களுக்குப் பின் இப்பொழுதுதான் விஷயங்கள் உள்ள துள்ளபடி தெளிவாய்த் தெரிகின்றன. அப்போது தெரிந்திருந்ததினும் இப்போது அதிகமா யொன்றும் எனக்குத் தெரியாவிடினும், அறநெறியைச் சிறிது பற்றியொழுகிய அநுபவத்தால் விஷயங்கள் சற்றுத் தெளிவாய்ப் புலப்படுகின்றன.

அத்தியாயம் 13

மாஸ்கோவில் நான் பரோபகாரஞ் செய்ய முயன்றது சேற்றில் அழுந்தி யிருப்பவன், தன்னைப் போல் சேற்றில் சிக்கிய வேறு சிலரைக் கரையேற்ற முயல்வது போலிருந்தது. உறுதியான தரையில் நான் நின்று கொண்டிருந்தாலன்றோ பிறரைத் தூக்கி விடலாம்!

எனது வாழ்க்கை பாபமயம் என்றும், அது சரியன்றென்றுந் தெரிந்ததும் உடனே அதைச் சீர்திருத்திக் கொள்வது என் கடமையென நான் தீர்மானிக்கவில்லை. ஆதலால் என் வேலை யொன்றும் பலிக்கவில்லை. நகரங்களில் இருப்பவர்க்கு உதவிசெய்ய முடியாது போனதன் காரணம் ஏழைகள் திரளாக அங்கு ஒன்று சேர்ந்திருப்பதேயாகும். இரண்டாவதாக, நகரப் பிச்சைக்காரர் கிராமப் பிச்சைக்காரர் போன்றவரல்லர். கிராமங்களில் பிழைக்க வழியற்றவர்கள் நகரத்துப் பணக்காரருக்கு ஊழியஞ் செய்து பிழைக்க நகரங்களுக்கு வருவதால் அங்கு அதிகப் பிச்சைக்காரர்கள் சேர்ந்துவிடுகின்றனர். நகரங்களுக்குச் சென்று பிழைப்பைத் தேடுவதென்பது விந்தையாயிருக்கிறது. காடுகளும், வயல்களும், தானியங்களும், ஆடுமாடுகளும் நிலவளமுஞ் செறிந்த நாட்டுப்புறத்தை விட்டுக் கல்லும் மண்ணும் தெருப் புழுதியுமுள்ள நகரங்களில் வந்து பிழைப்பதென்றால் அது ஆச்சரியமாகவே யிருக்கிறது. நகரங்களில் சாதாரண வருவாயுள்ளவர்களையும் ஏழைகளையும் விசாரித்ததில் அவர்கள் யாவரும் பிழைப்பிற்காகவே நகருக்கு வந்ததாகக் கூறினர். மாஸ்கோவிற்கு வந்தால் பணம் ஈட்டலாம்; பணத்தைக் கொண்டு தானியங்கள் ஆடுமாடுகள், குதிரைகள் இன்னும் எதுவேண்டுமாயினும் வாங்கிக் கொள்ளலாம். "விதைப்பும் அறுப்புமின்றியே மாஸ்கோ செல்வத்திற் புரளுகிறது" என்னும் பழமொழி உண்மைதான்.

மாஸ்கோவில் எல்லாப் பொருள்களும் இருந்தபோதிலும் அவையாவும் உற்பத்தியாவது கிராமங்களிற்றான். நாட்டுப்புறத்தில் விளையும் பண்டங்களை நகரங்களிற் போய் ஏன் தேடுவது? நாட்டுப்புறத்தாருக்கு அத்தியாவசியமான தானியங்கள், ஆடுமாடுகள், குதிரைகள் முதலியவற்றைக் கிராமங்களினின்று நகரங்களுக்குக் கொண்டு போவதேன்?

நகரங்களில் வசித்துவரும் விவசாயிகளுடன் நூற்றுக்கணக்கான சந்தர்ப்பங்களிற் பேசியிருக்கிறேன். கிராமங்களிற் பிழைக்க வழியின்றிப் பலர் பட்டணங்களுக்கு வந்து சேர்கின்றனர். சிலர் பட்டணங்களிற் சுகமாய்க் காலந் தள்ளலா மென்று வருகின்றனர். தானியங்களும் ஆடுமாடுகளும், தங்களுக்கு அவசியமானவை யென்று அறிந்திருந்தாலும் கிராமவாசிகள் தங்கள் குடும்பச் செலவிற்காகவும், வரிப்

(சஅ-ம் பக்கம் பார்க்க)

# மதிப்புரை

## திருவருணைக் கலம்பகம்

விலை : ரூபாய் ஒன்று

கிடைக்குமிடம் :—சக்தி பிரஸ் லிமிடெட்,
அரமனைக்காரத் தெரு,
சென்னை.

இவ்வரிய கலம்பகம் சைவமணியாகிய **எல்லப்ப நாவலரால்** எழுதப்பெற்றது. செந்தமிழ்ச் செல்வரான **காழி. சிவ. கண்ணுசாமி** பிள்ளையவர்களால் அழகாகப் பதிப்பிக்கப்பெற்றது. இந்நூல் சிவமணம் கமழ்கின்றது. இதைப் பார்த்தவுடன் நிகண்டு யாப்பிலங்கணங்களில் வல்ல ஒரு புலவர் பாடியது என்பது நன்ருக விளங்கும்.

அண்ணுமலை என்றதும், திருமால் பன்றிவடிவாகவும், பிரமன் அன்னமாகவும் முயன்று அடிமுடி தேடமுடியாத சிவக்கனற் குன்றின் நினைப்பு யாருக்கும் வரும். ஏனென்றல், சம்பந்தர் தேவாரத்தில் இக்கதை மலிந்து கிடக்கிறது. இதைச் சொல்லிச் சிவமேன்மையைப் பாராட்டாத சைவநூல் கிடையாது. இக்கதையைச் சுற்றி யெழுந்த சைவவைணவப் போர்களுக்கும் கணக்கில்லை. திருமால் சிவக்குன்றின் அடியைக் கண்டுபிடிக்க முடியவில்லை. யென்று சைவர் சொன்னல், "எங்கள் திருமால் பாதகங்கையைச் சிவன் தலைமேல் தாங்கினுர்; உங்கள் சிவனுக்கு விஷமும் எலும்புமாலையும் முதுகாடுந்தான் விதி. எங்கள் திருமால் தானே பஸ்மாசுரனிடமிருந்து உங்கள் சிவனைக் காத்தார்" என்றெல்லாம் வைணவர் அடுக்குவர். இதெல்லாம் பழங்காலச் சண்டை. ஆகாய விமானம் இமாலயத்தைத் தாண்டுகிறது. மண்ணைக் குடைந்து "மழினே", "ஸீக்பிரிட்" பாதாளக் கோட்டைகளையும், தங்க வைரச் சுரங்கங்களையும் காண்கின்றனர். இந்நாட்களில் அண்ணுமலையைப்போன்ற சிறுகுன்றைப் பிரமனும் திருமாலும் முடியடிகாண முடியவில்லை யென்ருல் பகுத்தறிவாளர் சிரிப்பர். ஆதலால் இக்கதையின் உட்பொருளை அறிய வேண்டும்.

அதாவது, சிவம் என்பது பேரின்பம். சிதாகாசத்தைத் தாண்டிய முச்சுடர் நிலயத்தில் சிவம் காணும். அதுவே துரியாதீத நிலையாகும். பிரமன் என்பது சிருட்டி சக்தி, மால் திதிசக்தி; சிருட்டி திதி இரண்டும் உலகவிவகாரங்கள், சங்கற்பத்தை அடிப்படையாகக் கொண்டன. சங்கற்பவிகற்பங்களால் முயன்ருல் துரியாதீத நிலையில் சுடர் வடிவாயுள்ள சிவமாகிய சச்சிதானந்தப் பொருளைக் காணமுடியாது. சிருட்டி சங்கற்பத்தில் உழலும் ஒருவன் கண்டேன் என்பது பொய்யாகும் என்பதைக் காட்டவே இக்கதையைப் பெரியோர் புனைந்தனர். அண்ணுமலையென்பது வடாற்காட்டில் உள்ள சிறு குன்றல்ல; அது யாவரும் அணுகுதற்கு ஒண்ணுத, அண்ணுத, துரிய மலைதான். அதைக்கொண்டே எல்லப்ப நாவலரும்

> "காணரிய ஒரு பொருளாய்க்
> களங்கமற விளங்குபெருஞ்
> சோணகிரி யென நிறைந்த
> சுடரொளியாய் நின்றருள்வோய்"

என்று குறித்தார். இதேமாதிரி நமது புராண ஐதிகக் கதைகளுக்கெல்லாம் தத்துவப் பொருளை அறிந்துணர வேண்டும்.

தொன்றுதொட்டு நம்நாட்டில் அன்புவழியில் கடவுளை அடைந்தார் மிகப்பலர். அன்பு வழியில் தலைவன் தலைவி உணர்வுடன் கடவுளை அணுகுவது உயர்ந்தவழி. மாணிக்கவாசகர், வள்ளலார் முதலிய பெரியார் அவ்வழியைப் பின்பற்றியிருக்கின்றனர். திருவாய்மொழியில் காதலன் காதலி யுறவைப் பெருக்கக் காணலாம். தமிழுக்கே உரிய அகம்புறம் என்னும் இருபொருளையும் நமது பெரியார்கள் பேரின்பப் பேற்றிற்கும் பயன் படுத்தினர். திருவருணைக்கலம்பகமும் அருணேசனைக் காதலன் காதலி உணர்வால் அன்பு செய்கிறது.

> அமர்ந்தரு ணைப்பதி வாழ்வீரே
> அன்பர்கள் அன்பினில் ஆழ்வீரே.
> சுமந்தொளிர் சூலம் எடுப்பீரே,
> தோளணி மாலை கொடுப்பீரே.

என்று பசுக்காதலி பதிக்காதலனை வேண்டுகிருள். கார்காலத்தில் விண் மழையுடன் அவர் கண்ணருவியும் சோர்கின்றது.

> அண்ணு மலையார் அருணையனை யீர்உம்மைக்
> கண்ணுலம் செய்தான் கமலத்தோன்—எண்ணு
> தினைக்கோலம் செய்தமுலை ஏந்திழையீர் என்னை
> மணக்கோலம் செய்தான் மதன்.

இத்தெய்விகக்காதலை இன்பக் கவிதையால் நாம் நுகரும்போது உள்ளம் மகிழ்ந்து பொங்குகிறது. இந்நூல் செம்பாகமான நடையில் தூய தமிழில் பத்திச்சுவை எழுதப்பெற்றிருக்கிறது. இதன் நடையினிமையைச் சிலப்பதிகாரம் குன்றக்குரவையின் நடைக்கும்,வாழ்த்துரைக்காதைக்கும் ஒப்பிடலாம். தெளிவான விரிவுரையுடன் கூடியது. விரிவுரை யாசிரியர் திரு. இராமலிங்கம் பிள்ளை அவர்கள் இந்நூலை, அதன் கவியினிமைக்காகவும், பதிப்பொருளுக்காகவும் நந்தமிழர் கற்கவேண்டும்.

**தினமணி 1939-ம் வருஷ மலர்** கிடைக்கப் பெற்ளூம். அதில் ராவ்சாகிப் எஸ். வையாபுரிப் பிள்ளை, ஸ்ரீ பி. ஸ்ரீ ஆசாரியா, ஸ்ரீ ச. ஜகன்னுதன், எம்.எ., எம். லிட்., ஸ்ரீ எஸ். கணேச சாஸ்திரி, ஸ்ரீ ச. து. சுப்பிரமணிய யோகி, ஸ்ரீ எ. கே. செட்டியார், ஸ்ரீ அ. ஸ்ரீனிவாசராகவன், ஸ்ரீ க. சந்தானம், எம். எ., பி. எல்., ஸ்ரீ எஸ். எ. ஷபீ மகமத், ஸ்ரீ கி. வா. ஜகன்னுதன், இன்னும் மற்ற அன்பர்களும் பலதிறப்பட்ட கட்டுரைகள் எழுதி யிருக்கிருர்கள். அழகிய சித்திரப் படங் கள் மிளிர்கின்றன.

விலை ரூ. **0—12—0**

**தினமணி ஆபிஸ், சென்னை.**

**இந்து சாதனம் பொன் மலர்** கிடைக்கப் பெற்ளூம். அதில் பல தமிழறிஞர்களின் உயரிய கட்டுரைகள் மிளிர்கின்றன. உருத்திரன் படம் மிக நன்ருயிருக்கிறது. அட்டையில் பழங்கால நடனச் சித்திரப் படம் அழகுறப் பொலிகின்றது. கிடைக்குமிடம் : **இந்து சாதனக்காரியாலயம்,** வண்ணுர் பண்ணை, யாழ்ப்பாணம்.

---

**ஜோதி பொங்கல் மலர்** கிடைக்கப் பெற்ளூம். படங்கள், கட்டுரைகள் நன்ருயிருக் கின்றன. விலை அணு ஒன்று. கிடைக்குமிடம் : **ஜோதி காரியாலயம்,** சுங்குராம செட்டித் தெரு, சென்னை.

---

(சகூ-ம் பக்கத் தொடர்ச்சி)

பணத்திற்காகவும் அவற்றை விற்க நேரிடுகிறது. இவ்வாறு கிடைத்த பணமும் விரைவிற் செல வாய் விடுகிறது ; பிழைக்க வழியின்றிச் சம்பா திப்பதற்காக நகரங்களை நோக்கிச் செல்கின் றனர். நகரங்களில் அதிகக் கஷ்டமின்றிச் சம்பாதித்துப் பல சௌகரியங்களையும் சுகங்களை யும் அனுபவிக்கலாம். சிற்சில சமயம் இத்தகை யோர் குடிகாரராகவும் நடத்தை கெட்டவராக வும் ஆகிவிடுகின்றனர்.

இதன் காரணம் யாவரும் எளிதில் உணரக் கூடியதே. உழைப்பாளிகளான விவசாயிகளிட முள்ள தானியம் முதலான பொருள்கள் விவ சாயஞ் செய்யாது நகரங்களிற் சும்மா உட்கார்ந் திருக்கும் பணக்காரரிடம் போய்ச் சேருகிறது. அறுவடைக் காலங்களில் கிராமங்களில் எவ் வளவு தானியங்களும் இதர செல்வங்களும் இருக்கின்றன ! ஆடுமாடுகள், கன்றுகள், குதி ரைகள், கோழி, வாத்து, வெண்ணெய், பலவ கைத் தானியங்கள் முதலாம். இவையாவும் பற் பல நகரவாசிகள் கையிற்போய்ச் சேர்கின்றன. அங்கிருந்து முக்கியமான பட்டணங்களுக்கும், தலைநகருக்குங் கொண்டுபோகப் படுகின்றன. சொந்தச் செலவிற்காகவும், இதர ஆசைகளால் தூண்டப் பெற்றும் கிராமவாசி இவற்றை விற்றுவிடுகிருன். கையிலிருந்த தெல்லாம் நகரம் போய்ச் சேரவே, உணவிற்கு வழியின்றிக் கிராமச் செல்வமெல்லாம் எங்கே கொண்டு போகப் பட்டதோ அவ்விடத்தை நோக்கிச் செல்ல நேரிடுகிறது.

ருஷ்யாவில் மாத்திரமன்றி உலகெங்கும் இவ் வாறு தானிருக்கிறது. கிராமத்தின் செல்வ மெல்லாம் வியாபாரிகள், மிராசுதார்கள், அர சாங்க உத்தியோகஸ்தர்கள், முதலாளிகள் முதலியோரிடம் போய்ச்சேருகிறது. இச் செல் வத்தை நன்கு அனுபவிப்பதற்காக அவர்கள் நகரங்களில் வசிக்கின்றனர். ஏன் ? முதலாவது, கிராமங்களில் எல்லாவிதமான கடைகள், பாங்கு, சிற்றுண்டிச்சாலை, நாடகக்கொட்டகை முதலியவை இல்லை. இரண்டாவது, கிராமங் களில் மக்கள் பணக்காரரைப் பார்த்துப் பிரமிக்க மாட்டார்கள். அவரவர்கள் வேலையைக் கவ னித்துக் கொண்டிருப்பரே யன்றிப் பணக்கார ரது நடையுடை பாவனைகளைப் பார்த்து வியக்க அவர்களுக்கு நேரமில்லை ; வியக்கும் சுபாவமு மில்லை. இவர்களுடைய விசித்திரமான கட்ட டங்களையும் பலவிதப் பொருள்களையும் பார்த் தால் அவர்களுக்கு அவை யாவை யென்று கூடத் தெரியாது. மூன்ருவது, இரக்கம், மனச் சாக்ஷி என்பவை சற்றேனுமுள்ள எவனும் கிரா மங்களிற் சுகபோகங்களை அனுபவித்துக் கொண்டு வாழ முடியாது. பக்கத்து வீட்டுக் குழந்தைகளுக்குப் பாலில்லாதபோது பாலிற் குளிக்கவோ, நாய்க்குட்டிகளுக்குப் பால் வார்க்கவோ யாருக்காவது தோன்றுமா ?

அன்பு நிலயத்தார்

# வேண்டுகோள்

எங்கள் நிலயப்பெயரால் உத்தரவு பெருத சில தனியாட்கள் பணம் வசூல் செய்வதாகத் தெரிகிறது. நாங்கள் அப்படி யாரிடமும் சந்தா வசூலிப்பதில்லை; வசூலிக்கச் சொல்லுவதுமில்லை. எங்கள் நிலயம், நூல் வெளியீடுகளினின்றும், உள்ளன்பர் உதவியாலும் ஏதோ தனக்கியன்ற தமிழ்ப்பணியும், திருவருட்பணியும் செய்து வருகிறது. எல்லாம் நூல்களிற் போந்த சிறிய வருவாயினின்றே நடக்கிறது. நிலயத்தைச் சேர்ந்த நிர்வாகிகள் அனைவரும் அன்புப் பணியை அன்பிற்கே செய்கின்றனர்; அதில் யாதொரு லாபத்தையும் எதிர்பார்ப்பதில்லை. விற்பனைத் தொகை மிகவும் சொற்பமாகவே யிருக்கிறது; புதிய நூல்கள் வெளியிடக்கூடப் போதவில்லை எனினும், எப்படியோ கஷ்டப் பட்டுக்கொண்டு நாங்கள் கொண்ட அன்புப் பணிகளை ஒருவாறு நிறைவேற்றி வருகிறோம். இன்னும் ஏராளமான இலக்கியங்கள் வெளியிட வேண்டியிருக்கிறது. ஆனால், அவற்றிற்காக ஒன்றும் இரண்டுமாகச் சந்தா சேர்ப்பது எங்கள் விருப்பமில்லை. திருவருளால் தூண்டப்பெற்ற அன்பர், சில நூல்களின் பொறுப்பை ஏற்றுத் தமிழன்னைக்கு அதை அச்சிட்டளிக்கின்றனர்; அவ்வளவுதான். ஆகையால் எங்கள் உத்திரவில்லாமல் தனி நபர்கள் யாருக்கும் சந்தாக் கொடுக்கக்கூடாது என்பதைத் தமிழர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

நாங்கள் வெளியிடும் நூல்களின் உரிமை முற்றிலும் எம்மையே சேர்ந்ததாகும். அச்சிறகாகக் கையெழுத்துப் பிரதிகளைத் தேடிப் பிடித்துப் புலவர்களைக்கொண்டு பரிசோதித்து, அச்சுத்தாட்களுக்குப் பணங்கொடுத்துத் திருத்தி வெளியிட எவ்வளவோ செலவாகிறது. சில வியாபாரிகள் எங்கள் நூல்களினின்றும் சிலப்குதிகளைத் தமது நூல்களில் எடுத்தாளுகின்றனர். அவர்கள் அச்சிட்ட பகுதிகளில் ஏராளமான பிழைகளும் காண்கின்றன. அவ்வாறு வெளியிடுவது நன்றுயில்லை யென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். சிலர் எமது நூல்களில் உள்ள பாடல்களையோ வாக்கியங்களையோ திரித்துத் தமது சொந்தம்போலக் காட்டிப் போலி நூல்கள் வெளியிடுகிறார்கள்.

எமது உத்திரவு பெறாமல், அச்சுத்தாட்களை எங்களுக்கு அனுப்பிப் பிழைதிருத்தம் செய்யாமல் எமது நூற்பகுதிகளை யாரும் வெளியிடுவது நேர்மையன்றெனத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். 'தமிழில் சுத்தமான நூல்கள் வெளிவரவேண்டும் அதிலும், மாணவர் படிக்கும் நூல்களில் ஒரு அச்சுப்பிழைகூட இல்லாமல் இருக்கவேண்டும்' என்பது எமது கொள்கை.

தமிழும், சன்மார்க்கமும் ஓங்கிப் பரவ இயன்ற பணிகளை எளியவர்களாகிய சில அன்பர்கள் கூடிச் செய்கிறோம். தமிழர்கள் எம்மை இயன்றமட்டும் ஆதரிக்கத் திருவருளை வேண்டுகிறோம்.

அரு. அண்ணாமலை
வை. கோவிந்தன்
சாம்பு
அன்பு. நடனம்
நா. முத்து வள்ளியப்பன்

மு. சிவப்பிரகாசம்
மு. நடராஜன்
க. இராமசாமி
ராம. பழனியப்பன்.

இராமச்சந்திரபுரம்.
6-12-39.

---


## ஸ்ரீ பழநி பஞ்சாமிர்தம்

தமிழர்கள் குலதெய்வமும் கலியுகப் பிரத்தியக்ஷ தெய்வமுமான ஸ்ரீ பழனி ஆண்டவர் அபிஷேக பஞ்சாமிர்த சந்தன விபூதி பிரசாதங்க ளடங்கிய செட் 1-க்கு ரூ 3-8-0.

பக்தர்கள் நாமநக்ஷத்திரத்தால் விசேடமாக முறையே ஆண்டவர் பாதார விந்தத்தில் அர்ச்சனை ஆராதனை செய்து பிரசாதமனுப்ப ரூ 1-0-0.

மாதக் கார்த்திகைதோறும் வருடக் கட்டளையாக அர்ச்சனை செய்து பிரசாதம் அனுப்ப ரூ. 7-0-0.

P. நடராஜ பண்டாரம்,
மலைக்கோவில்,
அயன் மிராஸ், பழனி S. I.

வெளிவருகிறது ! எதிர்பாருங்கள் !

மஹாத்மாவின் குரு ருஷிய மஹரிஷி டால்ஸ்டாய்

எழுதிய

# இனி நாம் செய்ய வேண்டுவது யாது?

(What then must we do?)

சக்தி மலர் க.

இப்புத்தகம் ருஷியப் பெரியார் டால்ஸ்டாயின் அனுபவக்களஞ்சியம். மக்கள் கவலையில்லாது வாழும் வகையை மிகத்தெளிவாக விளக்கியிருக்கிறார்.

காந்தியடிகள் தமது சுயசரிதத்தில் "டால்ஸ்டாயின் புத்தகங்களையும் கவனஞ் செலுத்திப் படிக்கத் தொடங்கினேன். 'சுவிசேஷங்களின் சாரம்' '**இனி நாம் செய்ய வேண்டுவது யாது?** முதலிய டால்ஸ்டாயின் புத்தகங்கள் என் மனதைப் பெரிதும் கவர்ந்தன." என்று எழுதி யிருக்கிறாரென்றால் இதன் பெருமை சொல்லாமலே தெரியும்.

இவ்வரிய நூலை ஸ்ரீரமண மகரிஷிகளின் பக்தரான **பிரமசாரி விசுவநாதன்** என்ற அறிஞர் அழகாக, எல்லாருக்கும் விளங்கும்படியாக, முதனூலே போல தமிழில் மொழி பெயர்த்திருக்கிறார்.

**விலை அணா 12.** **தபால் செலவு வேறு**

கிடைக்குமிடங்கள் :

**சக்தி காரியாலயம்,**
52, அரண்மனைக்காரத் தெரு,
சென்னை.

**சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,**
6, பவழக்காரத் தெரு, சென்னை.

**ஸண்டே டைம்ஸ் புத்தகசாலை,**
எர்ரபாலு செட்டி தெரு, சென்னை.

மாசி முதல் வாரத்தில் புத்தகம் கிடைக்கும்

வெளிவந்து விட்டது! பிரதிகளுக்கு முந்துங்கள்!!

## நகைச்சுவை நிறைந்த இனிய சமதர்ம நாவல்

# இளிச்ச  வாயன்

## (LAUGHING MAN)

புலவர்மணி விக்தர் ஹ்யூகோவின் (L' Homme Gui Rit) இளிச்ச வாயன் எனும் இந்த நாவல், பல சுதந்திர வீரருக்கு ஆவேசமளித்திருக்கிறது. ஜார் ஆட்சியில் நாடுகடத்தப் பெற்ற லெனின் (Lenin) சிலகாலம் பாரிஸில் வசித்தார். அப்போது அவர் ஏராளமான நூல்களைப் படித்தார். அவர் மனதைக் கவர்ந்த நூல்களில் இளிச்சவாயன் தான் முதன்மையானது.

சுவாமி சுத்தானந்த பாரதியார் தமது அழகிய, இனிய தமிழில் தமிழருக்கு மொழிபெயர்த்து அளித்திருக்கிறா ரென்றால் இதன் சிறப்பைச் சொல்லவும் வேண்டுமோ?

**இதன் விலை ரூ. 1.**

கிடைக்குமிடம்:

**சக்தி பிரஸ் லிமிடெட்,**
52, அரண்மனைக்காரத் தெரு,
சென்னை.

**ஸண்டே டைம்ஸ் லிமிடெட்,**
எர்ரபாலு செட்டி தெரு,
சென்னை.

**அன்பு நிலையம்,**
இராமச்சந்திரபுரம்,
திருச்சி ஜில்லா,

# BUILT *to* LAST

# "Remington"

## TYPEWRITER YOUR BEST INVESTMENT

These . odels have proved their stamina and mechanical superiority under all climatic conditions. Whether used or abused, they remain the most compact, durable and altogether satisfactory Machines ever made. They have the world-famous Remington quality of meeting every demand. And they are within everybody's means Fill in Coupon below and post to-day, without any obligation, for terms of easy payment system.

### *REMINGTON NOISELESS*

In the hot weather, when nerves are frayed, Efficiency comes with silent speed when you use Remington Noiseless Portable—the supreme typewriter. To typewriter users, accustomed to the metallic clatter of ordinary machines, this Portable is an amazing revelation. In short, to superlative writing performance is added the pleasing advantage of QUIET. You do more and better work because you can concentrate.

### *REMINGTON RAND MODEL 1*

Remington Model No. 1 Portable Typewriter is a great son of a great family. To modern-to-the-minute improvements and refinements are added efficiency features possessed by no other standard Portable . . . Writing on this Model is an entirely pleasant experience . . . it lifts "Remington" to a yet higher level of satisfactory service, however strenuous.




**REMINGTON NOISELESS PORTABLE.**




**REMINGTON RAND MODEL 1**

**COUPON**

*TO* "சக்தி"

**REMINGTON RAND INC.**

*(Incorporated in U.S.A. with limited liability).*

"BOSOTTO BUILDINGS", P. B. 370, MADRAS.

Please let me have full particulars of your plan by which I can obtain a Remington Portable on easy terms.

NAME......................................

ADDRESS...................................

..........................................

**MORE REMINGTONS BUILT AND SOLD THROUGHOUT THE WORLD IN 1938 THAN ANY OTHER MAKE**

சென்னை, 52, அரண்மனைக்காரத் தெரு, 'சக்தி' பிரஸ் லிமிட்டெடில் (சாந்தி பிரஸ்) அ. கிருஷ்ணமூர்த்தியால், அச்சிட்டு வெளியிடப் பெற்றது. நிருவாக ஆசிரியர் : வை. கோவிந்தன்.